ஸுதர்சனர் பதில்—இரண்டாவது சதகம்

ஆசிரியரின் முன்னுரை

கடந்த ஒரு வருஷத்திற்கு மேலாக நமது ஸுதர்சனத்தில் வெளிவரும் "ஸுதர்சனர் பதில்" என்னும் கேள்வி பதில் பகுதியை நமது அன்பர்கள் மிகவும் சுவைத்துப் பாராட்டி வருகிறார்கள். ஸ்ரீ காஞ்சி மஹாவித்வான் ஸ்வாமி போன்ற பேரறிவாளர்களும், நூற்றுக்கணக்கான வாசகர்களும் நம்மிடம் நேரிலும் கடிதம் மூலமாகவும் இப்பகுதியைப் பாராட்டி, இதைத் தொடர்ந்து வெளியிடும்படி நியமித்துள்ளபடியால் இவ்விரண்டாவது சதகம் வெளிவருகிறது. மேலும் பல சதகங்கள் வெளிவரும்.

இக்கேள்வி பதில் பகுதியின் முக்கிய நோக்கம் யாது என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறோம் இங்கு. நமது தமிழ் நாட்டிலுள்ள லக்ஷக்கணக்கான வாசகர்களையுடைய பொதுஜன தினசரி வார மாதப் பத்திரிகைகளான தினமணி, மித்திரன், கல்கி, விகடன், கலைமகள் போன்ற பத்திரிகைகளில், சிலர் வைஷ்ணவத்தையும், விஷ்ணுவையும் இழிவுபடுத்தும் உரைகளையும் கட்டுரைகளையும் பல வருஷங்களாக வெளியிட்டு வந்தனர். இதனால் பல வைஷ்ணவ அன்பர்கள் குழப்பமடைந்து, நம்மிடம் தெளிவுபெற விரும்பினர். நாம் அவ்வப்போது, அவற்றுக்கு நமது ஸுதர்சனத்தில் கட்டுரைகளின் மூலம் கடந்த இருபது வருடங்களாகத் தக்க பதிலளித்து வைஷ்ணவர்களுக்கு ஏற்படுத்தப்படும் குழப்பங்களை நீக்கி வந்தோம். இதனால் 'தினமணி' பத்திரிகை மாத்திரம் திருத்தம்பெற்று, பெரும்பாலும் நடுநிலைமை வகிப்பதாயிற்று. மற்ற பத்திரிகைகள் பழைய ரீதியிலேயே நடந்து வருகின்றன. பல அன்பர்கள் இப்பத்திரிகைகளில் செய்யப்படும் விஷ்ணு வைஷ்ணவ த்வேஷ ப்ரசாரங்களுக்கும், பொதுவாக வைஷ்ணவம்பற்றியும், நமது மதசாத்திர நூல்கள் பற்றியும் தங்களுக்கு எழும் ஐயங்களுக்கும் நடுநிலைநின்று தக்க விடைகள் அளிக்கவேண்டும் என்று நம்மைக் கேட்டு வந்தனர். இதற்காகவே இந்த 'ஸுதர்சனர் பதில்' தொடங்கப்பட்டு 108 கேள்வி பதில்கள் நிறைவுற்றவுடன் அதைத் தனிப் புத்தகமாக்கி வெளியிட்டு, விஷ்ணு வைஷ்ணவ த்வேஷ

http://acharya.org

ப்ரசாரம் செய்யும் பத்திரிகைகளின் மனஸ்ஸாக்ஷியை—அவை களுக்கு அப்படியொன்று இருந்தால் — தட்டியெழுப்புவதற் காக, அப்பத்திரிகைகளுக்கும், த்வேஷ ப்ரசாரம் செய்பவர் களில் தலைமையிடம் பெற்றிருக்கும் காமகோடி பீடாதி, பதிக்கும், வாரியாருக்கும்—சமீபத்தில் இரண்டாம் பதிப்பாக வெளியான நமது சாதிமத ஆராய்ச்சி முதல்பகுதியோடு சேர்த்து அனுப்பினோம். இப்பத்திரிகைகளில் மித்திரன் தவிர வேறு எந்தப் பத்திரிகையிலிருந்தும் இதற்கு எதிரொலி கிளம்பவில்லை. நமது சாதிமத ஆராய்ச்சியின் முதற்பகுதியின் முதற்பதிப்பை நடுநிலைதவறி விமர்சனம் செய்து, நம்மிடம் தக்க பதிலைப் பெற்று இன்றுவரை வாய்திறவாமலிருக்கும் சுதேசமித்திரன் பத்திரிகை மாத்திரம், நமது 'ஸுதர்சனர் பதில்' முதல் சதகத்திற்கு 1977, ஜூலை 5, 6 தேதியிட்ட இதழின் நாலாம் பக்கத்தில் ஓர் விமர்சனம் எழுதியுள்ளது. அவ்விமர்சனத்தின் முக்கியமான பகுதியைச் சிறிய எழுத்தில் இனி அச்சிட்டு, அது நடுநிலைதவறி ஒருதலைப்பட்சமாகவே எழுதப்பட்டுள்ளது என்று நடுநிலைநின்று நிரூபிப்போம்.

"எல்லோரும் ஓர்குலம் எல்லோரும் ஓரினம்" என்ற மனப் பான்மையை உருவாக்கி மக்களிடையே ஜாதி உணர்வுகளை அகற்றி சமரச எண்ணத்தை வளர்க்கவேண்டிய இக்காலத்தில் இந்து மதத் தின் உட்பிரிவுகளைச் சார்ந்தவர்களிடையே வெறுப்புணர்ச்சியை உண்டாக்கும் முறையில் இந்த வினு விடைகள் அமைந்திருப்பது விரும்பத்தக்கதல்ல. வைணவமே தொன்மையான மதம் என்பதை யும் விசிஷ்டாத்வைதமே சிறந்த தத்துவம் என்றும். நாராயணனைத் தவிர வேறு தெய்வமில்லை என்றும் தமது திடமான கருத்தை, சம்பிரதாயப் பெருமையை சுதர்சனர் வற்புறுத்திக் கூறமுற்படுவதில் தவறில்லை. ஆனால் அதே நேரத்தில் அத்வைத மதப் பெரியோர் களையும் கட்டுரையாளர்களையும், சைவ சமய நூல்களையும் குறைத்து மதிப்பிடுவது அல்லது தாக்கிப்பேசுவது சகிப்புத் தன்மையைக் காட்டுவ தாக இல்லை. "மறந்தும் புறந்தொழா மாந்தர்கள்" வாழ்ந்த காலம் மலையேறி விட்டது சர்ச்சைகள் மூலம் சமூகத்தில் பிளவு ஏற்படுத்துவது விவேகமாகாது. மத விஷயங்கள் சம்பந்தமாக ஆஸ்திகர்களிடையே ஏற்படக் கூடிய உண்மையான ஐயப்பாடுகளுக்கு குரோத உணர்ச்சியின்றி தெளிவான விளக்கம் கூறுவதைவிட்டு ஒருதலைப்பட்சமான முறையிலேயே விடைகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

http://acharya.org

சனினும் வரட்டு வேதாந்தம் பேசி சைவ வைணவ சண்டைகளில் நிப்போருக்கு இந்த நூல் நல்லதோர் தினி.

இக்கூற்றுகளிலிருந்து—காமகோடி பீடாதிபதி, வாரியார் போன்றவர்கள் பொதுஜனப் பத்திரிகைகளில செய்துவரும் விஷ்ணு வைஷ்ணவ த்வேஷ ப்ரசாரம் பற்றிய நமது வாசகர் களின் கேள்விகளுக்கு அப்பிரசாரங்களின் பொய்ம்மையை விளக்கி நாம் பதில் எழுதியிருப்பது மித்திரன் விமர்சகருக்குப் பொறுக்கவில்லை என விளங்குகிறது. உதாரணம் எடுத்துக் காட்டினால் தமது விமர்சனத்தின் சாயம் வெளுத்துவிடுமாகை யால், உதாரணங்காட்டாமல் பொதுப்படையாக நமது பதில் களைத் தாக்குகிறார் விமர்சகர். உதாரணங்காட்டி, விமர்சகர் நடுநிலை தவறிவிட்டார் என்பதை விளக்குவோமினி. 10-வது கேள்வி பதிலை எடுத்துக்கொள்வோம். "ராமர் அணிந்தது திருநீறுதான்" என்று தினமணி 28—6—77ல் வெளிவந்த ஒரு சொற்பொழிவில் வாரியார் ஓராதாரமுங்காட்டாமல் கூறி யுள்ளார். "கம்பராமாயணத்தில் இராமன் திருநாமம் இட்டுக் கொண்டதாகவே உள்ளது; எந்தப் பழைய நூலிலும் திரு நீறு இட்டுக்கொண்டதாக இல்லை" என்று காட்டி, வாரியாரின் கூற்றின் பொய்ம்மையை நிலைநாட்டியுள்ளோம் நாம். 22-வது கேள்வி பதிலிலும் வாரியாரின் கூற்றுகளின் பொய்ம்மையை ஆதாரத்தோடு நிலைநாட்டியிருக்கிறோம். 66-வது கேள்வியில்— 9—12—76 தினமலரில் வெளியான வாரியாரின் சொற்பொழி வில், "வேத உபநிடதங்கள் ஓதியும், சில பேதை மாக்கள் 'சிவபெருமானே பரம்பொருள்' என்று உறுதியின்றி உளறு கிறார்கள்" என்று தொடங்கி ஆதிசங்கரர், ஸ்ரீராமானுஜர், ஸ்ரீமத்வர் முதலான மதாசாரியர்களையும், மற்றும் நூற்றுக் கணக்கான வைஷ்ணவாசார்யர்களையும் 'பேதை மாக்கள்' (அறிவற்ற விலங்குகள்) 'உளறுகிறார்கள்' என்று கடுமை யான வசவுமாரி பொழிந்து வாரியார் தாக்கியிருப்பதின் உண்மை பற்றி நம்மிடம் ஓரன்பரால் கேள்விகேட்கப்பட்டுள்ளது. இவ்வசவுகள் வடமொழியறிவேயில்லாத வாரியாருக்கே பொருந்துமேயொழிய, வேதசாஸ்திரக்கடல்களின் கரைகண்ட ஆசார்யர்களுக்குப் பொருந்தாது என்று நாம் பல ஆதாரங் களைக் காட்டி நிலைநாட்டியுள்ளோம். நூற்றுக்கணக்கான

http://acharya.org

மதாசாரியர்களைத்தாக்கி வாரியார் வசவுமாரி பொழிவதும், அதை 'தினமலர்' லக்ஷக்கணக்கான வாசகர்கள் படிக்கும்படி வெளியிடுவதும்தான் ஒற்றுமையை வளர்க்கக்கூடிய சகிப்புத் தன்மையென்றும், இவ்வசவுமாரியைப் படித்துப் புண்பட்டிருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு ஆறுதல் விளையும்படி ஆயிரக் கணக்கானவர்களே படிக்கும் நமது நூலில் வாரியாரின் பொய்யை நாம் அம்பலப்படுத்தியிருப்பது சகிப்புத்தன்மை யற்றதும் வெறுப்புணர்ச்சியை உண்டாக்குவதுமாகும் என்றும் விமர்சகர் கருதுகிறார்போலும்! இதிலிருந்தே விமர்சகரின் சமரசமும், நேர்மையும், நடுநிலைமையும் எத்தகையது என்று நல்லோர்கள் உணர்ந்துகொள்ளலாம். இதே ரீதியில் 58-வது கேள்வியில் கலைமகளிலும், 50-வது கேள்வியில் தெய்வத்தின் குரலிலும், காமகோடி பீடாதிபதி செய்திருக்கும் தவறான பிரசாரங்களுக்கும் நாம் நடுநிலைநின்று கோபதாபப்படாமல் விளக்கம் எழுதியிருக்கிறோம். இப்பதில்களைப் பற்பல ஆதாரங் களை அடிப்படையாகக்கொண்டு நாம் எழுதுவதால் இவற்றிற்கு எவராலும் பதில் எழுதமுடியாது. மித்திரன் விமர்சகருக்கும் இது தெரியும். அதனாலேயே 'வெறுப்புணர்ச்சி' 'சகிப்புத் தன்மையின்மை' 'குரோதவுணர்ச்சி' 'ஒருதலைப்பட்சம்' 'வரட்டுவேதாந்தம்' முதலான பதங்களையிட்டு நம்மைத் தாக்குவதோடு திருப்தியடைகிறார். முடிந்தால் ஒன்றுசெய்ய லாமே; நமது பதில்களில் எந்த எந்த இடங்களில் தாம் கூறும் இத்தவறுகளைச் செய்திருக்கிறோம் என்பதை விளக்கி நமக்கே ஒரு கட்டுரை எழுதி அனுப்பலாமே. அப்படி எழுதியனுப்பினால் நாமே அதை நமது விமர்சனத்துடன் வெளியிட்டு நடுநிலையாளர்களின் தீர்ப்புக்கு விடுவோமே. சுமார் பத்துவருடங்களுக்குமுன் மித்திரனில் நமது சாதிமத ஆராய்ச்சியின் முதல்பதிப்பு விமர்சனம் வெளிவந்தபோதும் பிலவங்க-ளு தை-மீ ஸுதர்சனத்திலேயே நாம் இத்தகைய கட்டுரையை மித்திரன் விமர்சகரிடமிருந்து வரவேற்றிருந்தோம். இன்றுவரை கட்டுரை வரவில்லை. நமது சாதிமத ஆராய்ச்சி யின் இரண்டாவது பதிப்பையும் மித்திரன் விமர்சனத்திற்கு அனுப்பியுள்ளோம் அதில் நாம் நிலைநாட்டியுள்ள விஷயங் களை மறுத்து மித்திரன் ஒரு கட்டுரையை இப்போதாவது

http://acharya.org

வெளியிடலாம். மித்திரனில் கட்டுரை வெளியிடுவதால் அப்பத்திரிகை விற்பனைக்கு ஊறு ஏற்படும் எனக்கருதினால், மலக்காவது அனுப்பலாமே. இதையெல்லாம் செய்ய இயலாமல், வைஷ்ணவத்திற்கு விரோதமாக லக்ஷக்கணக்கானவர்கள் படிக்கும் பொதுஜனப்பத்திரிகைகளில் எத்தனை துஷ்பிரசாரங்கள் செய்யப்படுகின்றன என்பதையும் காண மனமில்லாமல், அவற்றுக்கு பதிலளிக்கும் நம்மையே குறைகூறித் தாக்குவது நேர்மையோ, நடுநிலைமையோ, சமரசமோ, ஒற்றுமை மனப்பான்மையோ ஆகாது

"சர்ச்சைகள் மூலம் சமூகத்தில் பிளவு ஏற்படுத்துவது விவேகமாகாது" என்னும் பொதுவிதியை எவரும் மறுக்க முடியாது. ஆனால், அதற்காகச் சர்ச்சைகளே கூடாது என்றும் விதிக்கமுடியாது. மித்திரன்போன்ற பத்திரிகைகளில், அரசியல், கலை முதலான விஷயங்களில் தினந்தோறும் பற்பல சர்ச்சைகள் வருகின்றன என்பதைக் காணவேணும். சர்ச்சை ஏற்பட்டாலொழிய உண்மை வெளிவராது. "மதவிஷயத்தில், அதிலும் எங்களுக்குப் பிடிக்காதவிஷயத்தில் சர்ச்சைகூடாது; சர்ச்சை ஏற்பட்டால் சமூகத்தில் பிளவு ஏற்பட்டுவிடும்" என்று 'பூச்சாண்டி'காட்டுவது பொருந்தாது. திருச்சி 'தினமணி' பத்திரிகைக் காரியாலயத்திலுள்ள அன்பர் திரு V ரங்கராஜன் கேட்டிருக்கும் 104-வது கேள்விக்கு பதிலளிக்கையில் இதை விரிவாக விளக்கியிருக்கிறோம். உண்மையான சமரசம் யாது என்பதையும், இந்துக்கள் ஒற்றுமையாயிருக்க வழி என்ன என்பதையும் 2-வது கேள்வியின் பதிலிலேயே தெளிவுபடுத்தியிருக்கிறோம். 17, 40, 43, 78, 87, 88, 103 முதலான கேள்விகளின் பதில்களிலும் இவ்விஷயம் மிக விரிவாகத் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. இவையனைத்தையும் நடுநிலைநின்று படிக்காமல் நம்மைக் குற்றஞ்சாட்டுவது—விமர்சகர் ஒருதலைப்பட்சமான முடிவுடையவர் என்பதையே விளக்குகிறது. "மறந்தும் புறந்தொழாமாந்தர்கள் வாழ்ந்த காலம் மலையேறிவிட்டது" என்று எழுதியிருப்பது இதை வலியுறுத்துகிறது. எந்தக்காலத்திலும் இவ்வுலகப்பலன்களை விரும்பிக் கண்ட கண்ட தெய்வங்களைக் கையெடுத்துக் கும்பிடுபவர்கள் மிக அதிகமாகவும், மோக்ஷத்தையே விரும்பி மறந்தும் புறந்

தொழா மாந்தர்களாயிருப்பவர்கள் அருமையாகவும்தான் இருந்திருக்கிறார்கள். கீதை ஏழாம் அத்தியாயத்தில்—"அற்பமாய், நிலைநில்லாத இவ்வுலகப்பலன்களில் விருப்பத்தாலே அறிவு மழுங்கிய பெரும்பான்மை மக்கள் மற்ற தெய்வங்களை அடைகின்றனர். என்னை அடைந்து அநந்தபலமான மோக்ஷபலனை விரும்புவதில்லை. 'வாஸுதேவனே எல்லாம்' என எண்ணும் மஹாத்மா மிகவும் கிடைத்தற்கரியவன்" என்று கண்ணனே கூறியிருக்கிறான். ஆழ்வார்களும் ஸ்ரீராமாநுஜர் முதலான ஆசார்யர்களும் அவதரித்தபின்பு மறந்தும் புறந்தொழாமாந்தர் லக்ஷக்கணக்கில் வளர்ந்தனர். லோகாயதம் வளர்ந்து எந்த மதத்திற்பிறந்தவர்களிலும் பெரும்பான்மையினருக்குத் தத்தம் மதத்தில் பற்றில்லாமற்போன இக்காலத்திலும், மறந்தும் புறந்தொழா மாந்தர் ஆயிரக்கணக்கில் வாழ்வதை நாம் அறிவோம். அப்படியிருக்க, கண்ணை மூடிக்கொண்டு "மறந்தும் புறந்தொழா மாந்தர்கள் வாழ்ந்த காலம் மலையேறி விட்டது" என்று எழுதுவது—மறந்தும் புறந்தொழாமையை ஸ்ரீ வைஷ்ணவத்தின் அடிப்படையாக அமைத்த ஆழ்வார்களிடமும் ஆசாரியர்களிடமும் விமர்சகருக்குள்ள துவேஷ மனப்பான்மையையே காட்டுகிறது. இத்தகையவர்களே நிறைந்து கிடக்கும் நமது பொதுஜனப் பத்திரிகைகளில் நமது நூல்களுக்கு விமர்சனமே வராது; வந்தாலும் அது நியாயமான விமர்சனமாயிராது என்று அறிந்தேதான், முற்கூறியபடி இவர்களது மநஸ்ஸாக்ஷியைத் தட்டியெழுப்புவதற்காக நாம் நமது புத்தகங்களை விமர்சனத்திற்கு அனுப்பினோம். மநஸ்ஸாக்ஷி ஓரளவுக்குத் தட்டியெழுப்பப்பட்டுள்ளது என்பது "வைணவமே தொன்மையான மதம் என்பதையும் விசிஷ்டாத்வைதமே சிறந்த தத்துவம் என்றும், நாராயணனைத் தவிர வேறு தெய்வமில்லை என்றும் தமது திடமான கருத்தை, சம்பிரதாயப் பெருமையை சுதர்சனர் வற்புறுத்திக்கூற முற்படுவதில் தவறில்லை" என்று விமர்சகர் எழுதிருப்பதிலிருந்து விளங்குகிறது. இது நமக்குப் போதுமானது. இவர்களது வசவுகளையும் ஏற்று, இத்தகையவர்களின் மநஸ்ஸாக்ஷியை மேல் சதகங்களில் மேலும் தட்டியெழுப்ப முயல்வோம். நமது நாட்டுப் பொதுஜனப் பத்திரிகைகளில் மதவிஷயமாக நன்கு அறிவுபெற்றவர்கள் இல்லாமையாலே, மதவிஷயங்களில்

http://acharya.org

பல தவருன பிரசாரங்கள் செய்யப்படுகின்றன என்பதையும், இந்தகைய விஷயங்களில் ஸுதர்சனர் பதில் மிகவும் அவசியமாகிறது என்பதையும் விளக்குவதற்கு உதாரணமாகக் குமுதத்தில் சமீபத்தில் கீதையில் ஒருவிஷயம்பற்றி வெளியான கேள்வி பதில்களை இங்கு கொடுக்கிறோம்.

ஸுதர்சனர் பதிலின் முதல் சதகத்தில் 95-வது கேள்வி பதிலில் — 26 — 5 — 77 குமுதத்தில் வெளியான "உடலுக்குத்தான் அழிவு; மனத்துக்கு அழிவில்லை" என்று பகவத்கீதை கூறுவதாக அமைந்திருந்த "சத்யமங்கலம் வசந்த மூர்த்தி" என்பவருடைய கேள்வியையும், அதற்கு அரசு பதிலையும் விமர்சித்து, மனம் அழிவுள்ளதென்பதே கீதையின் கருத்து என்று நிலைநாட்டியிருந்தோம். நமது விளக்கத்தைச் சுருக்கமாகக் குமுதத்திற்கும் அனுப்பியிருந்தோம். 9—6—77 குமுதத்தில் அவ்விளக்கம் வெளியிடப்பட்டு, 'மனம் அழியக் கூடியதே' எனும் நம் விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. அது பின்வருமாறு:—

ஸ். கிருஷ்ணசாமி ஐயங்கார், திருச்சி.

"உடலுக்குத்தான் அழிவு, மனத்திற்கு அழிவில்லை." என்று பகவத்கீதை சொல்லுவதாக வைத்துக் கேட்கப்பட்ட கேள்விக்கு அதை ஒப்புக்கொண்டு பதில் எழுதியிருக்கிறீர்கள். உபநிஷத்துக்களிலும், கீதையிலும், மற்ற சாத்திரங்களிலும் மனம் அழியும் பொருளாகவே காட்டப்பட்டுள்ளது. கீதா பாஷ்யங்கள் அனைத்திலும் இது ஒப்புக் கொள்ளப்பட்டது. 'மனம்' முதலிய அசேதனப் பொருள்கள் அழிபவையே

அரசு விளக்கம்:-

உடலும் உள்ளமும் அழியக்கூடியவை என்றாலும், உடல் அழியும்போது மனம் அழிவதில்லை என்பதற்கு உதாரணமாக, கால் இழந்த பின்னரும் நோவு நீடித்த சம்பவம் தரப்பட்டது.

இதற்குப்பின் 7—7—77 குமுதத்தில் இதே விஷயம்பற்றி "சத்யமங்கலம் வசந்தமூர்த்தி" மேலும் விளக்கத்தைக்கோரிக் கேட்டிருந்த கேள்வியும், அதற்கு அரசு பதிலும் பின்வருமாறு அச்சிடப்பட்டுள்ளது:—

வசந்தமூர்த்தி, சத்யமங்கலம்.

உடலில் ஏதேனும் ஒரு பாகம் அழிந்த பின்பும்கூட அதன் வலி உள்ளத்தில் இருக்கக்கூடும். எனவே உள்ளம் அழிவதில்லை. சரி.

http://acharya.org

தீ வைத்து எரிக்கப்படும் ஒரு இறந்த அல்லது அழிந்த முழு உடலுக்குள் இருக்கும் உள்ளம் அழியாமல் இருக்க முடியுமா? சாம்பலான பின்பு உடலுக்குத் தான் அழிவு, உள்ளத்திற்கு இல்லை என்று எப்படிச் சொல்ல முடியும்?

அரசு விளக்கம்:-

உயில் என்பது என்ன? உள்ளம்தானே?

இவ்வரசுபதிலில் அச்சுப்பிழையும், பெரிய பொருட்பிழையும் இருப்பது கண்டு, நாம் 4—7—77 அன்றே குமுதத்திற்கு அவற்றைச் சுட்டிக்காட்டி, வசந்தமூர்த்தியின் கேள்விக்கு முழுவிளக்கம் எழுதினேம். 21—7—77 குமுதம் வரை அது வெளியிடப்படவில்லை. கீதையை ஏதாவதொரு பாஷ்யத்தோடு கற்றவர்கள் தவிர, வெறும் மொழிபெயர்ப்புக்களைக் கொண்டு கீதை படிப்பவர்களுக்கு இத்தகைய குழப்பங்கள் பல உண்டாகியே தீரும். இவ்வரசுபதிலில் 'உயில்' என்பது அச்சுப்பிழை; உயிர் என்றே இருக்கவேண்டும் என்பது வெளிப்படை. இதுநிற்க; 'உயிர் உள்ளம்தான்' என்று அரசு எழுதியிருப்பது பெருந்தவறு. உயிர் எனப்படுவது—என்றும் அழியாத சேதனப்பொருளான ஆத்மா. உள்ளம் என்னும் மனமோவெனில், ஸ்தூலவுடலில் ஆத்மாவோடு தங்கியிருந்து, அந்த ஸ்தூலவுடல் அழியும்போதும், நெருப்பால் அழிக்க முடியாத நுண்பொருளாகையாலே, ஆத்மாவோடு கூடச்சென்று, பற்பல பிறவிகளில் பற்பல ஸ்தூலவுடல்களில் தங்கியிருந்து, ப்ரளயகாலத்தில், அசேதனப்பொருள் அனைத்தும் தத்தம் காரணங்களில் லயமடையும்போது அழிந்துவிடுவது. நித்யமான ஆத்மாவுக்கு அப்போதும் அழிவில்லை. மூலப்ரக்ருதியோடு ஒன்றியிருந்து, ஸ்ருஷ்டிகாலத்தில் புதிய மனத்தோடும் உடலோடும், பரம்பொருளால் ஸ்ருஷ்டிக்கப்படுகிறது ஆத்மா. ஆகையால் அரசு 'உயிர் உள்ளம்தான்' என்று எழுதியிருப்பது தவருகும்.

இத்தகைய பிழைகளும், நமது மதம்பற்றியே துஷ்ப்ரசாரங்களும் நம் நாட்டுப் பத்திரிகைகளில் வெளிவரும்போது அவைபற்றி விளக்கம்கோரி நம் அன்பர்கள் கடிதம் எழுதினல், நடுநிலைநின்று அவற்றுக்கு பதிலிறுப்போம்.

முன்னுரை முற்றிற்று

http://acharya.org

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸுதர்சனர் பதில் — இரண்டாவது சதகம்

பல அன்பர்களுடைய கேள்வி.

1. திருச்சி அட்வகேட் ஸ்ரீ K. N. ஸ்ரீநிவாஸன் என்பவர் காஞ்சீபுரம் வரதராஜஸ்வாமி கோயிலைப்பற்றி ஆங்கிலத்தில் எழுதி வெளியிட்டுள்ள (42 பக்கங்கொண்ட) புத்தகத்தைப் பற்றிய தங்கள் கருத்து என்ன ?

திரு. K. N. ஸ்ரீநிவாஸனுடைய (புகழுடம்பாளரான) தகப்பனரும், பரமஸாத்விகரான தமையனர் ஸ்ரீ K.N. சேஷாத்ரி யும் நமக்குச் சிறந்த நண்பர்கள். ஸ்ரீநிவாஸனேடும் நமக்குப் பரிசயம் உண்டு. அவர் எழுதிய நூல் பிங்கள ஆடி கடைசி யிலேயே மற்றொரு நண்பரின்மூலம் நமக்குக் கிடைத்தது. Dr. ராமன் என்பவர் காஞ்சீ வரதராஜஸ்வாமி கோயிலைப்பற்றி விரிவானதொரு (ரூ 90 விலையுள்ள) ஆராய்ச்சி நூல் எழுதி, சென்னை ஸர்வகலாசாலையின் டாக்டர் பட்டத்தைப்பெற்றுர். அக்கோயில் தென்கலையாகவே நீண்டகாலமாக இருந்துவந்தது என்பது அந்நூலில் அவர் ஆதாரங்களைக்காட்டி நிலைநாட்டி யுள்ள பல விஷயங்களில் ஒன்று. இந்த அம்சத்தை மாத் திரம் மறுக்க எழுந்தது நண்பர் K. N. S. அவர்களின் நூல். இந்நூலின் முகவுரைகளிலும், தொடக்கத்திலும், நடுவிலும், முடிவிலும் Dr. ராமன் இவ்விஷயத்தில் நடுநிலைதவறிவிட்ட தாகவும், K. N. S நடுநிலைநின்று எழுதுவதாகவும் குறிப் பிடப்பட்டுள்ளது. K. N. S. நூலிலுள்ள மற்ற விஷயங்கள் ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்திற்கும், ஸமூஹத்திற்கும் சாபக் கேடான தென்கலை வடகலைச் சண்டையை வளர்க்கவே உதவுமாகையாலும், Dr. ராமனின் நூலை நாம் பார்த்ததில்லை யாகையாலும், அவற்றை விமர்சிப்பதை விட்டு, K. N. S. தம் நூலில் பறைசாற்றிக்கொண்டிருக்கிறபடி உண்மையிலேயே நடுநிலை தவருமல் எழுதியிருக்கிருரா என்னும் ஒரு விஷயத் தையே நாம் இங்கு *நடுநிலைநின்று* விமர்சிக்கிறேம்.

நடுநிலைநின்று ஒருவிஷயத்தை விமர்சிப்பவர் எவரும் லக்ஷக்கணக்கான மக்களால் கொண்டாடப்படுமவர்களும், பல நூல்களை இயற்றியிருப்பவர்களுமான மஹாசார்யர்களை இழிவுபடுத்தி எதையும் எழுதக்கூடாது என்பது அனைவரும் இசையக்கூடிய உண்மை. அதுபோலவே எந்த ஆசார்யர்

http://acharya.org

களைப்பற்றி விமர்ஶிக்கிருளே. அவர்களது நூல்களையாவது நன்கு படித்துவிட்டு, அதற்குப்பின் அவர்களைப்பற்றி எழுது பவனே உண்மையான சரித்திர ஆராய்ச்சியாளனுவான் என்பதும் மறுக்கமுடியாத உண்மை. இவ்விரு அளவுகோல் களின்படி பார்க்கும்போது K. N. S. அடியோடு நடுநிலைமை தவறிவிட்டார் என்பதும், எந்த ஆராய்ச்சியாளர்க்கும் இருக்க வேண்டிய இவ்விரண்டு இலக்கணங்களும் அவரிடம் பெரும் பாலும் இல்லை என்பதும் அவரது நூலில் பலவிடங்களில் விளங்குகிறது. "ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறுபதம்" என்னும் ஸ்தூலீபுலாகந்யாயத்தாலே சில இடங்களை இங்கு எடுத்துக்காட்டி விமர்ஶிப்போம். இந்நூலின் 19, 20 பக்கங் களில் நம்பிள்ளை முதலான தென்னுசார்யர்களைப்பற்றி இவர் பின்வருமாறு எழுதியுள்ளார் :—

Nampillai's expositions could not have had the benefit of a mastery of Sribhashya as Pillan's. Vadakkuthiruveedhi pillai was one of the three illustrious disciples of Nadadur Ammal, the other two being Sudarsana Bhattar, the author of Sruthaprakasika, (the most authoritative gloss on Sribhasya) and Appullar. Vadakkuthiruveedhipillai could therefore have derived a lot of help from Sribhashya for his gloss. But the followers of Tennacharya Sampradaya have not attached so much importance to the commentary of Pillan or even to that of Vadakkuthiruveedhipillai as they have shown a preference to Periyavachanpillai whose familiarity with Sribhashyam has not been satisfactorily established. Dr. Raman even places him between Nampillai and his own son Vadakkuthiruveedhipillai. When the fact according to the Tennacharya Guruparampara is that Vadakkuthiruveedhipillai listened to Nampillai and recorded the Idu, there is absolutely no justification to bring in Periyavachanpillai in between the father and the son. Should Periyavachanpillai be placed above Vadakkuthiruveedhipillai and called a disciple of Nampillai, surely, Periyavachanpillai's commmentary was not inspired by Sribhashya. Tradition has it that

http://acharya.org

Vadakkuthiruveedhipillai had two sons, Pillailokacharya and Alagiyamanavalaperumal Nainar. Both had come under the influence of Periyavachanpillai and the father had to leave the sons and associate Rengaraja, a son of his colleague Appullar, with himself and perpetuate his teachings and memory through him. This Rengaraja acharya's great grandson was Kesavacharya the father and the acharya of Athivan Satakopa Jiyar, the founder of the Ahobila matam

இதன் தமிழ்மொழிபெயர்ப்பு

நம்பிள்ளையின் வியாக்கியானம், பிள்ளானுடைய வியாக்கியானத்தைப்போல் ஸ்ரீபாஷ்யத்திற்புலமைப் பெருமைபெற்றதாயிருக்கமுடியாது. வடக்குத் திருவீதிப்பிள்ளை நடாதூர் அம்மாளுடைய புகழ்பெற்ற சிஷ்யர்கள் மூவரில் ஒருவர் (ஸ்ரீபாஷ்யத்தின் விரிவுரைகளில் தலைமை பெற்றிருக்கும்) ஶ்ருதப்ரகாஶிகையின் ஆசிரியரான ஸுதர்சன பட்டரும், அப்புள்ளாரும் மற்ற இரு சிஷ்யர்கள். இக்காரணத்தால் வடக்குத் திருவீதிப்பிள்ளை தம் வியாக்கியானத்திற்கு ஸ்ரீபாஷ்யத்திலிருந்து ஏராளமான உதவி பெற்றிருக்கமுடியும். ஆனால், தென்னாசார்ய ஸம்ப்ரதாயத்தைப் பின்பற்றுகிறவர்கள் பிள்ளானுடைய வியாக்கியானத்திற்கு அவ்வளவாக முக்கியத்துவம் கொடுப்பதில்லை. வடக்குத்திருவீதிப்பிள்ளையின் வியாக்கியானத்திற்குக்கூட முக்கியத்துவம் கொடுப்பதில்லை. பெரியவாச்சான்பிள்ளைக்கே முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். பெரியவாச்சான்பிள்ளைக்கு ஸ்ரீபாஷ்யத்தில் பரிசயம் இருப்பதாக திருப்திகரமாக நிலைநாட்டப்படவில்லை. நம்பிள்ளைக்கும் அவருடைய சொந்தப்பிள்ளையான வடக்குத் திருவீதிப்பிள்ளைக்கும் நடுவில் பெரியவாச்சான்பிள்ளையை வைக்கிறார் டாக்டர் ராமன். தென்னாசார்ய குருபரம்பரைப்படியே வடக்குத்திருவீதிப்பிள்ளை நம்பிள்ளையிடம்கேட்டு ஈடு எழுதினார் என்னும் உண்மை தேறும்போது, (நம்பிள்ளையாகிற) தகப்பனாருக்கும், (வடக்குத்திருவீதிப்பிள்ளையாகிற) மகனுக்கும் நடுவே பெரியவாச்சான்பிள்ளையைப் புகுத்த எந்த ஆதாரமும் இல்லை. பெரியவாச்சான்பிள்ளையை வடக்குத்திருவீதிப்பிள்ளைக்கும் மேலேவைத்து, அவரை நம்பிள்ளைக்கு நேர் சிஷ்யராகக் கூறினால், பெரியவாச்சான்பிள்ளையின் வியாக்கியானம் ஸ்ரீபாஷ்யத்தைப் பின்பற்றியதல்ல என்பது உறுதியாகும். வடக்குத்திருவீதிப்பிள்ளைக்குப் பிள்ளைலோகாசார்யரென்றும், அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் என்றும் இரண்டு பிள்ளைகள் இருந்தனரென்றும், அவர்கள் பெரியவாச்சான்பிள்ளையின் பேச்சைக்கேட்பவர்க

http://acharya.org

ளாக ஆகிவிட்டார்கள் என்றும் அதனால் அவர்களுடைய தகப் பனார் (வடக்குத்திருவீதிப்பிள்ளை) அவர்களைக் கைவிட்டு தம்மோடு (நடாதூரம்மாளிடம்) கூடப்படித்த அப்புள்ளாரின் குமாரரான ரங்க ராஜரைச் சேர்த்துக்கொண்டார் என்றும், தம்முடைய உபதேசங்களை யும், நினைவையும் அவர்மூலம் வெளியிட்டு நிலைநிறுத்தினார் என்றும் ஐதிஹ்யங்கள் கூறுகின்றன. இந்த ரங்கராஜாசார்யரின் ப்ரபௌத்ரரே அஹோபில மடத்தை ஸ்தாபித்த ஆதிவண்சடகோபஜீயரின் தந்தை யும் ஆசார்யருமான கேசவாசார்யர்.

K. N. S. இதுவரையில் எழுதியுள்ள விஷயங்களைப்பார்க்கும் ஸ்ரீவைஷ்ணவர் எவர்க்கும் — தென்னாசார்யர்களை இழிவுபடுத்த வேண்டும் என்னும் து₃ராக்₃ரஹத்தாலேயே இவர் இவற்றை எழுதியிருக்கிறார் என்பதும், தாம் விமர்சிக்கும் தென்னாசார் யர்களின் நூல்களையோ, அவர்களைப்பற்றி அவர்களுக்கு வெகு ஸமீபகாலத்தில் எழுதப்பட்ட பற்பல நூல்களில் எதையுமோ இவர் அடியோடு காணாதவர் என்பதும், ஸம்ப்ரதாயச் சண்டைகள் மிகுந்துவிட்ட கடந்த இரு நூற்றாண்டுகளுக்குள் தென்னாசார்யத்₃வேஷிகள் சிலர் மனம்போனபடி எழுதித் தென்னாசார்யர்களை இழிவுபடுத்தியிருக்கும் அபத்தக்களஞ்சிய நூல்களையே வேதவாக்காகக்கொண்டு தம் நூலை எழுதியிருக் கிறார் என்பதும் நன்கு விளங்கும். இதை நிரூபிப்போம் இனி

பிள்ளானுடைய ஆறாயிரப்படியும், ஈடும் ஸ்ரீபாஷ்யத்தைப் பின்பற்றியிருப்பவை என்றும், பெரியவாச்சான்பிள்ளையின் இருபத்துநாலாயிரப்படி ஸ்ரீபாஷ்யத்திற்கு முரண்பட்டது என்றும், நம்பிள்ளைக்கும், பெரியவாச்சான்பிள்ளைக்கும் ஸ்ரீபாஷ்யம் தெரியாது என்றும் பொருள்பட எழுதியுள்ளார் இவர். இந்த வியாக்கியானங்கள் பல பதிப்புகள் ஏறியுள்ளன. இப்போது நம்மாலும் அச்சிடப்பெற்று வருகின்றன. சே. கிருஷ்ணமாசார்ய ஸ்வாமி பதிப்பு இப்போதும் பலரிடம் உள்ளது. இவற்றை ஸேவித்திருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்கள் உப₄யஸம்ப்ரத₃ாயத்திலும் ஆயிரக்கணக்காக உள்ளனர். இவர் எழுதியிருக்கும் இக்கூற்றுகள் எவ்வளவு அப₃த்₃த₄மானவை என்பதை அவர்கள் அனைவரும் உணர்வர். இந்த வியாக்கி யானங்களில் பரிசயம் உள்ளவரும் K. N. S. இன் குடும்ப நண்பரும், ஜநாதி₄பதி விருதுபெற்றவருமான ஸ்ரீ உ. வே. நவநீதம் ஸ்ரீராமதேசிகாசார்ய ஸ்வாமியைப்போன்ற தே₃சிக ஸம்ப்ரதாயஸ்த₂ வித்வான்களில் எவரைக்கேட்டாலுங்கூட K. N. S. எழுதியிருக்கும் இக்கூற்றுகள் அபத்₃த₄ங்களில் தலை

http://acharya.org

னவை. அஸஹ்யாபசாரத்தில் சேரக்கூடியவை என்று எடுத்துரைப்பார்கள். இப்படிப்பட்டவர்களைத் துணைகொள்ளாமல், 'வேதத்தில் விஷ்ணு என்னும் தெய்வமே இல்லை' என்றும், 'எம்பெருமானுர் க₃த்₃யத்ரயமே எழுதவில்லை' என்றும் மற்றும் பல நாஸ்திக வாதங்களையும் 'வரலாற்றில் பிறந்த வைணவம்' என்னும் நூலில் எழுதி, அதை விஷ்ணுகோயில் பணத்தைக் கொண்டே அச்சிடச்செய்து, *'அக்₃நிஹோத்ரியும் வைணவமும்' 'த்₃ரமிடோ₃பநிஷத் ப்ரப₄ாவஸர்வஸ்வம்'* முதலான நூல்களிலும், *ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா, ஸ்ரீராமாநுஜன், ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம்.* முதலான ஸ்ரீ வைஷ்ணவ பத்திரிகைகளில் வெளிவந்துள்ள பல கட்டுரைகளிலும் கண்டனங்களைப்பெற்று வாய்திறவாமலிருப்பவரும், கைக்கூலி வாங்கிக்கொண்டு வைஷ்ணவத்துக்கு த்₃ரோஹம் செய்வதையே போதுபோக்காகக் கொண்டிருப்பவருமான அக்₃நிஹோத்ரம் ராமாநுஜ தாத்தாச்சாரியாரைத் தாம் துணைகொண்டதாக முகவுரையில் எழுதிக்கொள்கிருர் K. N. S. இவரும் *அக்₃நிஹோத்ரியும் சேர்ந்து இந்த வ்யாக்யானங்களை அலசி ஆராய்ந்து எங்கெந்த இடங்களில் ஆருயிரப்படியும், ஈடும் ஸ்ரீ பாஷ்யத்தை ஒட்டியிருக்கின்றன, இருபத்திஞலாயிரப்படி அதற்கு முரணுயிருக்கிறது என்பதைக் காட்டமுடியுமானல் காட்டி நமக்கு எழுதட்டும். அதை நாமே நமது ஸுதர்சனத்தில் அச்சிட்டு, நமது விமர்ஶத்தையும் எழுதி நடுநிலையாளர்களின் தீர்ப்புக்கு விடுவோம்.* நிற்க.

நம்பிள்ளைக்கும், பெரியவாச்சான்பிள்ளைக்கும் ஸ்ரீபா₄ஷ்யம் தெரியாது என்று பொருள்பட எழுதுகிருர் இவர். நம்பிள்ளை, பெரியவாச்சான்பிள்ளை ஆகிய இரு மஹாசார்யர்களும் (அச்சில் ஆயிரக்கணக்கான பக்கங்கள் வரக்கூடிய) பல நூல்களை எழுதி ஸ்ரீ வைஷ்ணவவுலகிற்கு மஹோபகாரம் செய்திருப்பவர்கள். பெரியவாச்சான்பிள்ளையின் வியாக்கியானங்களில்லாவிடில் ஆழ்வார்களின் அருளிச்செயல்களின் பொருளை உணர வழியில்லை என்று ஸ்ரீ உ. வே. நவநீதம் ஸ்வாமியைப்போன்ற பல மத்₄யஸ்த₂தே₃ஶிகஸம்ப்ரத₃ாயஸ்த₂ர்களும், ஸ்ரீ உ. வே. சாமிநாதய்யர், தியாகராஜசெட்டியார் போன்ற தமிழறிஞர்களான சைவாத்₃வைதிகளும் கொண்டாடியுள்ளனர். ஸ்ரீ வேதா₃ந்த தே₃ஶிகரே தம் நூல்களில் 'அபி₄யுக்தர்' என்றும், 'ஆசார்யர்' என்றும் பெரியவாச்சான்பிள்ளையைக் கொண்டாடியுள்ளார். அத்தகைய பெரியவாச்சான்பிள்ளையே தமது பெரியதிருமொழி

http://acharya.org

(5-8-7) வியாக்கியானத்தில் ''அந்தணன் ஒருவன்'' என்பதை விவரிக்கும்போது, ''முற்பட த்₃வயத்தைக்கேட்டு, இதிஹாஸ புராணங்களையும் அதி₄கரித்து, பரபக்ஷப்ரதிக்ஷேபத்துக்கு உடலாக ந்யாயமீமாம்ஸைகளும் அதி₄கரித்து, போதுபோக்கும் அருளிச்செயலிலேயாம்படி பிள்ளையைப்போலே அதி₄கரிப்பிக்க வல்லவனையிறே 'ஒருத்தன்' என்பது'' என்று தம் ஆசார்யரான நம்பிள்ளையை ஸ்ரீ பா₄ஷ்யாதி₃ ஸகலக்₃ரந்த₂ங்களையும் கரை கண்டவர் என்று பாராட்டியுள்ளார். இவைகளில் ஒன்றையும் அறியாமல், நம்பிள்ளை பெரியவாச்சான்பிள்ளைகளின் நூல்களில் எதையும் படிக்காமல், அவர்களுக்கு ஸ்ரீபா₄ஷ்யம் தெரியாது என்று எழுதும் மடமையை என்னென்று இயம்புவது ? உலகம் போற்றும் மஹாசார்யர்களுக்கு ஸ்ரீபா₄ஷ்யம் தெரியாது என்று எழுதும் இவருக்கு ஸ்ரீபா₄ஷ்யம் எதைப்பற்றியது. அதற்கு மூலமான ப்₃ரஹ்மஸூத்ரம் என்பது என்ன என்னும் விஷயங்களே தெரியாது என்னும் உண்மை இவர் நூலிலிருந்தே விளங்கும் விந்தையைக் காட்டுவோம் இனி.

"Sribhashya is a gloss by Bhagawan Ramanuja on the choice phrases from the vedas denoting the Brahman"

[வேதத்தில் ப்₃ரஹ்மத்தைத் தெரிவிக்கும் குறிப்பிட்ட வேதப்பகுதிகளுக்கு பகவான் ராமானுஜர் எழுதிய பா₄ஷ்யமே ஸ்ரீபா₄ஷ்யமாகும்.]

"Brahmasutraas which are part of the Vedas".

[வேத₃த்தின் பகுதியான ப்₃ரஹ்ம ஸூத்ரங்கள்.]

என்று தமது நூலின் 18-ம் பக்கத்தில் எழுதியிருக்கிறார் K. N. S. இதிலிருந்து வேத₃வாக்யங்களின் பொருளைப் பல ஸூத்ரங்களில் அலசி ஆராய்ந்து விளக்கி பா₃த₃ராயணர் எனும் வேத₃வ்யாஸர் எழுதிய ப்₃ரஹ்ம ஸூத்ரத்தை இவர் வேதத்தின் பகுதியாகவே மயங்கியிருக்கிறார் என்றும், அதனால் வேத₃வாக்யப்பகுதிகளின் பா₄ஷ்யமே ஸ்ரீபா₄ஷ்யம் என்று மயங்கியிருக்கிறார் என்றும் தெளிவாக விளங்குகிறது. இத்தகையவர் மஹாசார்யர்களுக்கு ஸ்ரீபா₄ஷ்யம் தெரியாது என்று எழுதியது என்ன ஸாஹஸம்! உண்மையில் இவருக்கு நேர்மையோ, நடுநிலைமையோ, பண்போ இருக்குமானால், தாம் இப்படி எழுதியதற்கு உலகறிய வருத்தம் தெரிவிக்கவேணும். வடக்குத்திருவீதிப்பிள்ளை நடாதூரம்மா

http://acharya.org

ருடைய சிஷ்யர், அவர் நம்பிள்ளையின் குமாரர், அவரது குமாரர்களிருவரும் பெரியவாச்சான்பிள்ளையின் பேச்சைக் கேட்டுக்கொண்டு அவருக்கு த்₃ரோஹம் செய்துவிட்டார்கள், அதனால் அவர் அவர்களைக் கைவிட்டு அப்புள்ளாரின் குமாரரான ரங்கராஜரின்மூலம் தம் கொள்கைகளைப் பரப்பினர் முதலான அண்டப்புளுகுகளை அள்ளி வீசியிருக்கிறுர் இவர், வடக்குத் திருவீதிப்பிள்ளையின் நூல்களிலும். அவரது குமாரர்களின் நூல்களிலும், அவர்களுக்கு ஸமீபகாலத்தில் ஏற்பட்ட ஏராளமான நூல்களிலும், இக்கூற்றுகளுக்கு ஓராத₄ாரமும் இல்லாததோடன்றியில், இவ்வண்டப்புளுகுகளுக்கு நேர்மாறுன விஷயங்களே நிரம்பியுள்ளன என்பது அந்நூல்களில் பரிசயமுள்ள நடுநிலையாளர்களுக்கு நன்கு விளங்கும். நம்பிள்ளையின் சிஷ்யர்களில் தலைவரான பெரியவாச்சான்பிள்ளையிடம், நம்பிள்ளையிடம் ஸ்ரீ பா₄ஷ்ய ப₄க₃வத்₃விஷயாதி₃ ஸகலக்₃ரந்த₃ங்களையும் கேட்ட வடக்குத்திருவீதிப்பிள்ளை, நம்பிள்ளை காலத்திற்குப் பின் சில விஷயங்களைக் கேட்டார் என்று வடக்குத்திருவீதிப்பிள்ளையின் "ஆசார்யஸம்மதி" என்னும் நூலில் உள்ளதாக முன்னேர்கள் எழுதியிருக்கையாலே, Dr. ராமன் நம்பிள்ளைக்கும் வடக்குத்திருவீதிப்பிள்ளைக்கும் இடையில் பெரியவாச்சான்பிள்ளையை வைத்ததிலும் எக்குறையுமில்லை. இது காறும் நாம் நிரூபித்தவற்றிலிருந்து, ஸ்ரீ K. N. S. சிறிதும் நடுநிலைமையில்லாமல், தாம் எழுதப்புகுந்த விஷயங்களில் ஆராய்ச்சியேதும் செய்யாமல், வைஷ்ணவத்₃ரோஹியொருவரைத் துணைகொண்டு மனம்போனபடி எழுதியிருக்கிறுர் என்பது வெள்ளிடைமலையாகவும், கையிலங்கு கனியாகவும் விளங்கும். ஸ்ரீராமாநுஜருக்குத் தேவப்பெருமாளோடு ஸம்ப₃ந்த₄ம் கிடையாது முதலான மற்றும் பல அஸம்ப₃த்₃த₄ப் பேச்சுகளை இவர் தம் நூலில் எழுதியுள்ளார். அவற்றுக்கு "P. B. S. ரங்காச்சாரியார், மேலக்கபிஸ்தலம் P. O. (via) பாபநாசம் (தஞ்சாவூர் ஜில்லா)" என்னும் விலாஸமுள்ள ஸ்வாமி "தத்வார்த்த₂ நிரூபணம்"என்னும் நூலில் தக்க பதிலளித்திருக்கிறுராகையால் நாம் அவைபற்றியெழுதி விரிவுபடுத்த விரும்பவில்லை. "K.N. ஸ்ரீநிவாஸன், அட்வகேட், மணிபாதுகை, சேஷாத்ரிபுரம், ஸ்ரீரங்கம்-620006"என்னும் விலாசத்தில் கிடைக்கும் K.N.S ன் (விலை குறிப்பிடாத) ஆங்கில நூலையும், முற்கூறிய விலாசத்தில் ஒரு ரூபாய் விலையில் கிடைக்கும் தத்வார்த்தநிரூபணநூலையும், பெற்று அன்பர்கள் உண்மையை உணரலாம்.

http://acharya.org

V. ஸ்ரீநிவாஸன், திருச்சி-17.

2. 8—8—77 முதல் 13—8—77 ஈருக "லா. கோ. சுந்தர ராஜுலு" என்பவரால் திருச்சி வானொலியில் நிகழ்த்தப்பெற்ற 'நம்மாழ்வார் நெறி' பற்றிய உரைபற்றித் தங்கள் கருத்து என்ன?

தலைசிறந்த வைணவமதப் பேச்சாளர்களும், எழுத்தாளர்களும் பலரிருக்க, அறைகுறைப்படிப்பாளிகளுக்கே வானொலியில் பெரும்பாலும் இடமளிக்கப்படுகிறது என்பதற்கு இவ்வுரை ஓர் எடுத்துக்காட்டாகும். முதல் உரையிலேயே கைங்கர்யம் *உபாயம்* என்ருர் இவர். அது புருஷார்த்தம் என்னும் உணர்வுகூட இல்லாதவர் என விளங்கிற்று. இரண்டாவது உரையில் 'நம்மாழ்வார் சமரசம்' என்னும் தலைப்பில் மனம் போனபடியெல்லாம் பேசினர் எல்லா தெய்வங்களும் திருமாலே என்று நம்மாழ்வார் கூறியிருப்பதாகப் பேசியவர், பல பாசுரங்களில் உலகனைத்தும் திருமாலே என்று பேசியிருப்பதைப் பற்றி வாய்திறக்கவேயில்லை. "இலிங்கத்திட்ட புராணத்தீரும் சமணரும் சாக்கியரும் வலிந்து வாதுசெய்வீர்களும் மற்றும் நும் தெய்வமும் ஆகிநின்ருன்" [திருவாய் 4-10-5] என்னும் பாசுரத்தில் நம்மாழ்வார் அகச்சமயங்களோடு, புறச்சமயங்களோடு வாசியற எல்லாமே ஒன்றுதான் என்று கூறியிருப்பதாக வலிந்து வாதுசெய்த இவர், முன்பின் பாசுரங்களில் *"மற்றைத் தெய்வம் நாடுதிரே" "பரன்திறமன்றி—தெய்வம் மற்றில்லை" "பேசநின்ற சிவனுக்கும் பிரமன்தனக்கும் பிறர்க்கும் நாயகன் அவனே, கபால நன் மோக்கத்துக் கண்டு கொண்மின்...ஈசன்பால் ஓரவம் பறைதல் என்னுவதிலிங்கியர்க்கே" "மற்றைத்தெய்வம் விளம்புதிரே"* என்று மற்ற தெய்வங்களின் தாழ்ச்சியையும், திருமாலின் பரத்வத்தையும் நிலைநாட்டியிருப்பதை சூதாக மறைத்துவிட்டார். *"நக்கபிரானேடு அயனும் இந்திரனும் முதலாக ஒக்கவும் தோற்றிய ஈசன்"* [திருவாய் 1-9-5] என்ற பாசுரத்திற்கு, 'திருமால் ப்ரஹ்மருத்ரேந்த்ரர்களை ஒரேகாலத்தில் ஸ்ருஷ்டித்தான்' என்னும் முரணில்லாத பொருளிருக்க, நம்மாழ்வாருடைய பல பாசுரங்களோடு முரண்படும்படி "ப்ரஹ்மருத்ரேந்த்ரர்களோடு ஒன்ருகத் தோன்றுகிருன் திருமால்" என்று பொருளுரைத்தார். இவற்றிலிருந்து, அறைகுறைப் படிப்பாளியான இவர் நம்மாழ்வாருக்கு த்ரோஹம் செய்யும் தம் நெறியோடு கலந்தே நம்மாழ்வார் நெறியைக் கூறினுர் என்று விளங்குகிறது. திருச்சி வானெலி நிலைய இயக்குனருக்கு இவ்வுண்மையை அறிவித்து ஏராளமான அன்பர்கள் கடிதம் எழுதினுல், இனியாவது இத்தகையவர்களுக்கு அவர்கள் இடமளிக்காமலிருக்கலாம்.

http://acharya.org

V. ஸ்ரீநிவாஸன், திருச்சி-17.

3. கீ₃தை(15—16,17)முதலான ஶ்லோகங்களில் ஶங்கரர், ராமாநுஜர், மத்₄வர் ஆகிய மூன்று மதாசார்யர்களின் பா₄ஷ்யங்களும் தவறானவை என்று "தா₄ர்மிக ஹிந்து" (4, V.S. முதலிதெரு. சென்னை-15) ஆசிரியர் ஜக₃ந்நாத₂ாசார்ய ஸ்வாமி எழுதுவதுபற்றித் தங்கள் கருத்து என்ன?

மற்ற ஆசார்யர்களின் கருத்து கீ₃தையில் பெரும்பாலான ஶ்லோகங்களில் தவறுயுள்ளது என்பதே நம் கருத்து. ஸ்ரீதே₃ஶிகன் அருளிய தாத்பர்யசந்த்₃ரிகையிலும், நமது கீ₃தா வ்யாக்₂யானத்திலும் இவ்விஷயம் பலவிடங்களில் காரணங் காட்டி நிலைநாட்டப்பட்டுள்ளது. இவ்விடமும் அத்தகையதே. ஸ்ரீராமாநுஜ பா₄ஷ்யமும் தவறானது என்று வாத₃ம் புரியும் ஜக₃ந்நாத₂ாசார்ய ஸ்வாமியின் வாத₃ங்கள் பின்வருமாறு:— கோரக்பூர் கீ₃தாப்ரெஸ்ஸில் கொடுக்கப்பட்டுள்ள (கீ₃தை 15-16) ஆங்கில மொழிபெயர்ப்பில் 'புருஷௌ' என்னும் பத₃த்திற்கு 'entities' (பொருள்கள்) என்று எழுதியிருக்கும் மொழிபெயர்ப்பே சரியானது. ஆகையால் இங்கு "க்ஷர: ஸர்வாணி பூ₄தாநி" என்று எடுக்கப்படும் க்ஷரபுருஷன் அசேதனப்பொருளையும், "கூடஸ்த₂: அக்ஷர:" எனப்படும் அக்ஷர புருஷன் ஜீவர்களையும் குறிக்கிறதேயொழிய, ஸ்ரீராமாநுஜர் கூறுவதுபோல் முறையே ஸம்ஸாரி ஜீவனையும், முக்த ஜீவனையும் குறிக்கவில்லை. அழியாத ஜீவர்களைக் குறித்து "க்ஷர:" (அழியக்கூடிய) என்று விஶேஷணமிடுவது பொருந்தாது. இவ்வளவும் தா₄ர்மிகஹிந்துவில் உள்ள வாத₃ங்கள். இவற்றை நடுநிலைநின்று ஆராய்வோம். புருஷஶப்₃த₃ம் பொதுவாக எப்பொருளையும் குறித்தோ, அல்லது அசேதனப் பொருள்களைக் குறித்தோ உலகில் எங்குமே வழங்குவதில்லை. அசேதனமான ஶரீரத்தோடு கூடிய ஸம்ஸாரிஜீவர்களைக் குறித்தும், முக்தஜீவர்களைக் குறித்தும், பரமபுருஷனைக் குறித்துமே லோகவேத₃ங்களில் புருஷப்₃த₃ஶம் வழங்கப்படுகிறது. நிக₄ண்டுக்களில் புன்னைமரமும் புருஷஶப்₃த₃த்தால் குறிக்கப்படுகிறது. உலகவழக்கைத் தெளிவாகக் காட்டும் வடமொழி நிக₄ண்டுக்களே ஶப்₃த₃ங்களுக்குப் பொருள்கொள்வதில் ப்ரமாணமாகும்.

http://acharya.org

புருஷஶப்₃த₃த்துக்குப் பொருள் கூறும் நிக₄ண்டு வசனங்கள் பின்வருமாறு உள்ளன:— I அமரகோஶம் என்னும் ஸுப்ரஸித்₃த₄ நிக₄ண்டு:— (1) ''க்ஷேத்ரஜ்ஞ ஆத்மா புருஷ:'' [1-4-29] ''புந்நாகே₃ புருஷ:'' [2-4-25] 'மநுஷ்யா மாநுஷா மர்த்யா மநுஜா மாநவா நரா:, ஸ்யு: புமாம்ஸ: பஞ்சஜநா: புருஷா: பூருஷா நர:'' [2-6-1] ''புருஷாவாத்மமாநவௌ'' [3-3-218] என்று அறிவுள்ள சேதனரைக் குறித்தும் புன்னை மரத்தைக் குறித்துமே அமரத்தில் புருஷஶப்₃த₃ப்ரயோக₃ம் உள்ளது. II வைஜயந்தி என்னும் ப்ரஸித்₃த₄மான நிக₄ண்டு:— (1) பரமேஷ்டீ₂ விஶ்வரேதா: புருஷோ ஹம்ஸவாஹந:'' [ஸ்வர்க்க₃காண்ட₃ம்-ஆதி₃தே₃வாத்₄யாயம்-8] என்று ப்₃ரஹ்மாவைக் குறித்தும், (2) ''புமாம்ஸ்து புருஷ:'' [பாதாளகாண்ட₃ம்-பூ₄தாத்₄யாயம்-2] என்று ஆண்பிள்ளையைக் குறித்தும், (3) ''புருஷோ த₄ாத்ரு புந்நாக₃ பும்ஸு ஆத்ம பரமாத்மநோ:'' [த்ர்யக்ஷரகாண்ட₃ம்-புல்லிங்க₃ாத்₄யாயம்-46] என்று பிரமன், புன்னைமரம், ஆண்பிள்ளை, ஜீவாத்மா, பரமாத்மா ஆகியவர்களைக் குறித்துமே வைஜயந்தியில் புருஷ ஶப்₃த₃ப்ரயோக₃ம் உள்ளது. அமர வ்யாக்₂யானத்தில் எடுக்கப் பட்ட இதரகோஶங்களிலும் இதே நிலையே உள்ளது. ''புருஷே பூருஷே ஸாங்க்₂யஜ்ஞே ச புந்நாக₃பாத₃பே'' என்னும் மேதி₃னி கோஶவசனமும், ''புருஷஸ்த்வாத்மநி நரே புந்நாகே₃ ச'' என்னும் ஹைமகோஶ வசனமும் காணத்தக்கது. நிக₄ண்டுக் களில் எங்குமே புருஷஶப்₃த₃ம் பொதுவாகப் பொருள்களைக் குறிப்பதாகவோ, அசேதனப்பொருள்களைக் குறிப்பதாகவோ காணப்படவில்லை. ஆகையால் ஆங்கில மொழிபெயர்ப்பில், புருஷஶப்₃த₃த்தை **'entities'** என்று மொழிபெயர்த்திருப்பதும், அதை ஆத₄ாரமாகக்கொண்டு த₄ார்மிகஹிந்து க்ஷரபுருஷன் அசேதனப்பொருளேயென்று வலிந்து வாதுசெய்வதும் பொருந் தாது. இனி, அழிவற்ற ஜீவாத்மாவை க்ஷரபுருஷன் என்று கூறுவது எப்படிப் பொருந்தும்? எனில்: ப்ராக்ருதமாய், அசேதனமான ஶரீரத்தோடு கூடிய ஸம்ஸாரிஜீவனுக்கு, அந்த ஶரீரஸம்ப₃ந்த₄த்தினால் ஜ்ஞானத்தில் ஏற்றத்தாழ்வு வருவதை நாம் ப்ரத்யக்ஷமாகக் காண்கிறோம். ஶ்ருதியும் ''ஸ சாநந்த்யாய கல்பதே'' என்று ஞானத்தில் குறைவுபட்ட ஸம்ஸாரிஜீவன்

http://acharya.org

முக்திநிலையில் அளவற்ற ஞானமுடையவனாகிறான் என்றது. ஆகையால், இந்த ஞானத்தில் ஏற்படும் ஏற்றத்தாழ்வை விட்டு ஸம்ஸாரி ஜீவனை 'க்ஷரபுருஷன்' என்னக்குறையில்லை. அமரகோசத்தில், *''ஏகரூபதயா து ய: காலவ்யாபீ ஸ கூடஸ்த₂:''* [அமரம் 3-1-73] என்று ஒருபடிப்பட்டவனாய் எல்லாக் காலத்திலுமிருப்பவன் என்று கூடஸ்த₂ஶப்₃த₃த்திற்குப் பொருளுரைத்திருக்கையால், இத்தகைய பெருமையை உடைய முக்தபுருஷனைக் கூடஸ்த₂ஶப்₃த₃த்திற்குப் பொருளாக ஸ்ரீராமாநுஜர் ப₄ாஷ்யமிட்டதும் மிகப்பொருத்தம். *''அக்ஷரம் ப்₃ரஹ்ம பரமம்''* [8-3] *''அவ்யக்தோऽக்ஷர இத்யுக்த:''* [8-21] *''யே த்வக்ஷரமநிர்தே₃ஶ்யம் அவ்யக்தம் பர்யுபாஸதே''* [12-3] முதலான இடங்களில் கீ₃தையிலும் அக்ஷரஶப்₃த₃ம் முக்த புருஷனைக் குறித்து வழங்கப்பட்டிருப்பதால் கீ₃தாசார்யனின் திருவுள்ளமும் இதுவேயென்பது தெளிவாக விளங்கும். இதன் விரிவு நமது கீ₃தாவ்யாக்₂யானத்தில் வெளிவருகிறது.

T. K. ராமாநுஜதாஸ், சென்னை வைணவ சங்க மாநாட்டுத் தலைவர், சென்னை-20.

4. வானொலியில் ''நம்மாழ்வார் நெறி''பற்றிய தங்கள் (2-வது கேள்விக்கு) பதில் முழுவதும் போற்றத்தக்கது. லா. கோ. சுந்தரராஜுலு என்பவர் அறைகுறைப்படிப்பாளியே; ப்ரபந்நஜனகூடஸ்த₂ரான ஆழ்வாருக்கு த்₃ரோஹம் செய்தவரே; அவருக்கு ஏன் இந்த புத்தி? வீணைக் கெட்டுப்போய் விட்டாரே! தனக்குத் தெரியாத உண்மைக்கு மாறான விஷயத்தை இப்படி வானொலியிலும் பரப்பிவிட்டாரே! துக்கம் மேலிடுகிறது. ''ஸ்ரீமந்நாராயணனே பரன்'' என்று ஆழ்வார்கள் நிர்ணயித்திருக்கும் திராவிடவேத ப்ரமாணங்களின் அட்டவணை ஒன்று தயார் செய்து அனுப்பியிருக்கிறேன். ஸுதர்சனத்தில் வெளியிட்டால் அனைவர்க்கும் உதவியாயிருக்குமல்லவா?

நீங்கள் அனுப்பியிருக்கும் த்ராவிடவேத ப்ரமாணங்களும், மற்றும் பலவும் ஸுதர்சனத்தில் பூர்வாசார்ய வ்யாக்₂யானங்களோடும், நமது எளிய தமிழுரையோடும் வெளிவந்துகொண்டிருக்கின்றன. ஆகையால் ஸுதர்சனத்தில் வெளியிடவேண்டாம்; அதை திரு. லா. கோ. சுந்தரராஜுலு அவர்கள் கண்டு தெளிவடைவதற்காக அவருக்கே அனுப்பிவிட்டேன். "46, டாக்கர்

http://acharya.org

ரோடு, உறையூர், திருச்சி-3 " என்னும் விலாசத்தில் இருக்கும் அவரோடு தொடர்புகொண்டு, தாங்கள் அவரைத் திருத்த முயலலாம்.

S. வேங்கடம், சமயபுரம். (5. 6 கேள்விகள்)

'5. காமகோடி புதுப்பீடாதிபதி அவர்கள் "கடவுளின் பல வடிவங்கள்" பற்றிச் சேலத்தில் ஆற்றிய உரை 11—8—77 (மதுரை) தினமணி 5-ம் பக்கத்தில் வந்துள்ளது. அதில் "கடவுளை கணேசர், முருகன், லெட்சுமி, சரஸ்வதி போன்ற பல உருவங்களில் வணங்குகிறோம். ஒவ்வொருவருக்கும் சில விசேஷ வரங்களை அளிக்கக்கூடிய சக்தி உண்டு. புத்தியையும், மோட்சத்தையும் சிவன் அளிக்கிறார். இடையூறுகளை விநாயகர் அகற்றுகிறார். லெட்சுமி செல்வத்தை தருகிறாள்.......கடவுளை நாம் விரும்பும் வடிவத்தில் வணங்கலாம் என்று ஆதிசங்கரர் நமக்குக் கூறியுள்ளார்." என்று பேசியுள்ளார் பீடாதிபதி. இதுபற்றிய உண்மையை விளக்கவேண்டுகிறேன்.

"ஆரோக்₃யம் ப₄ாஸ்கராதி₃ச்சே₂த் ஶ்ரியமிச்சே₂த் ஹுதாஶநாத், ஈஶ்வராத் ஜ்ஞாநமந்விச்சே₂த் மோக்ஷமிச்சே₂த் ஜநார்த்த₃நாத்" [ஸூர்யனிடமிருந்து ஆரோக்₃யத்தையும், அக்₃னியிடமிருந்து செல்வத்தையும், சிவனிடமிருந்து பரமாத்ம ஞானத்தையும், ஜநார்த்த₃னனை விஷ்ணுவிடமிருந்து மோக்ஷத்தையும் பெறவிரும்பவேண்டும்.]என்று முன்னோர்கள் அனைவரும் எடுக்கும் வசனத்துக்கு முரணாக ஆத₄ாரம் எதையும் காட்டாமல் பேசியிருக்கிறார் பீடாதி₄பதி. "தமேவம் வித்₃வாநம்ருத இஹ ப₄வதி நாந்ய: பந்த₂ா அயநாய வித்₃யதே" [அவனை இவ்வண்ணம் அறிபவன் இப்பிறப்பிலேயே மோக்ஷமடைகிறான். மோக்ஷமடைய வேறு வழியில்லை] என்று புருஷஸூக்தம் லக்ஷ்மீநாத₂ன் ஒருவனே மோக்ஷமளிக்கவல்லவன் என்று முழங்கிற்று. ஆதி₃ஶங்கரரால் ப₄ாஷ்யமிடப்பெற்ற கீ₃தையிலும் பலவிடங்களில் இவ்விஷயம் உத்₃கோ₄ஷிக்கப்பட்டுள்ளது. அவ்விடத்திலெல்லாம் ஆதி₃ஶங்கரர் நாராயணன் ஒருவனே மோக்ஷமளிக்கவல்ல பரம்பொருள் என்று ப₄ாஷ்யமிட்டிருக்கிறார். இவற்றையெல்லாம் "சங்கரரும் வைணவமும்" என்னும் நமது நூலில் காட்டியிருக்கிறோம். (75 பை.

http://acharya.org

அனுப்புகிறவர்களுக்கு 150 பக்கங்களுக்கு மேற்பட்ட இந்நூலை அனுப்பி வருகிறோம்.] கீ₃தை (7-23) பா₄ஷ்யத்தில் "அந்தவத்-விநாஶி து ப₂லம் தேஷாம் தத் ப₄வதி அல்பமேத₄ஸாம்-அல்ப ப்ரஜ்ஞாநாம்; தே₃வாந் யஜந்த இதி தே₃வயஜ: தே தே₃வாந் யாந்தி. மத்₃ப₄க்தா: யாந்தி மாமபி; ஏவம் ஸமாநே அபி ஆயாஸே மாமேவ ந ப்ரதிபத்₃யந்தே அநந்தப₂லாய, அஹோ க₂லு கஷ்டதரம் வர்த்ததே, இத்யநுக்ரோஶம் த₃ர்ஶயதி ப₄க₃வாந்" [அற்பமான அறிவுடைய அவர்களுக்கு அழிவுள்ள பலன்களே கிடைக்கின்றன. மற்ற தே₃வர்களை ஆராதி₄ப்பவர்கள் 'தே₃வயஜ:' என்று கூறப்படுகிறார்கள். அவர்கள் தே₃வர்களை அடைகிறார்கள். என் ப₄க்தர்கள் என்னை அடைகிறார்கள். இப்படி ஆயாஸம் ஸமானமாயிருந்தபோதிலும் அழிவற்ற ப₂லனை அடைய என்னை அடையவில்லையே இவர்கள்! இது என்ன கஷ்டம்!! என்று வருத்தத்தைக் காட்டுகிறான் ப₄க₃வான்.]என்றும், கீ₃தை (9-23, 25) பா₄ஷ்யத்தில், "யேऽபி... அந்யாஸு தே₃வதாஸு ப₄க்தா: ஸந்த:... பூஜயந்தி...தேऽபி மாமேவ யஜந்தி அவிதி₄பூர்வகம்; அவிதி₄: - அஜ்ஞாநம் தத் பூர்வகம் யஜந்தே இத்யர்த்த₂:; தே₃வவ்ரதா: தே₃வாந் யாந்தி பித்ரூந்...யாந்தி பித்ருவ்ரதா:...பூ₄தாநி விநாயக-மாத்ருக₃ண சதுர்ப₄கி₃ந்யாதீ₃நி யாந்தி பூ₄தேஜ்யா: — பூ₄தாநாம் பூஜகா:...மத்₃யாஜிந: — மத்₃யஜநஶீலா வைஷ்ணவா: மாம் ஏவ யாந்தி; ஸமாநே அபி ஆயாஸே மாமேவ ந ப₄ஜந்தே அஜ்ஞாநாத்; தேந தே அல்பப₂லபா₄ஜ: ப₄வந்தி இத்யர்த்த₂:" [எவர்கள் வேறு தேவதைகளிடம் ப₄க்தர்களாயிருந்துகொண்டு பூஜிக்கிறார்களோ, அவர்களும் என்னையே அவிதி₄யை முன்னிட்டுப் பூஜிக்கிறார்கள். அவிதி₄யாவது—அஜ்ஞானம்; அஜ்ஞானத்தோடு பூஜிக்கிறார்கள் என்று கருத்து. தே₃வபூஜகர்கள் தே₃வர்களை அடைகிறார்கள்; பித்ருபூஜகர்கள் பித்ருக்களை அடைகிறார்கள்; பூ₄தக₃ணங்களைப் பூஜிப்பவர்கள் விநாயகர் மாத்ருக₃ணம் சதுர்ப₄கி₃நீ முதலான பூ₄தங்களை அடைகிறார்கள். என்னைப்பூஜிக்கும் **வைஷ்ணவர்கள்** என்னையே அடைகிறார்கள். மற்றவர்களைப் பூஜிப்பவர்களுக்கும் பூஜிக்கும் சிரமம் ஒன்றாயிருந்தபோதிலும் நானே ஸகல யஜ்ஞங்களுக்கும் ஸ்வாமி என்பதை அறியாமையாலே அவர்கள்

http://acharya.org

என்னை அடைவதில்லை. அதனால் அவர்கள் அற்பபலனைப் பெறுகிறார்கள் என்று கருத்து.] என்றும் ஆதிசங்கரர் கல்வெட்டாகக் காட்டியிருக்கும் இரண்டு இடங்களே போது மானது. இதற்கெல்லாம் முரணாக 'சிவன் மோட்சமளிக்கிறார்' என்றும், 'கடவுளை நாம் விரும்பும் வடிவத்தில் வணங்கலாம் என்று ஆதிசங்கரர் நமக்குக் கூறியுள்ளார்' என்றும் பீடாதிபதி கூறுவதிலிருந்து, இவர் ஆதிசங்கரருடைய பாஷ்யங் களைப் படித்ததில்லை என்றும், 400 வருஷங்களுக்குள் சங்கர பீடங்களில் பீடாதிபதிகளாக இருந்த சங்கராசார்யர்களால் இயற்றப்பெற்ற ஸ்தோத்ரங்களையே இவர் படித்திருக்கிறார் என்றும் விளங்குகிறது.

6. 22—9—77 மதுரை தினமணி பக்கம்-4ல் "விநாயகர் வழிபாட்டின் சிறப்பு" என்னும் தலைப்பில் காமகோடி புதுப் பீடாதிபதி சேலத்தில் ஆற்றிய உறையில், விநாயகரே பரம் பொருள் என்றும், சிவன், கிருஷ்ணர் முதலானவர்கள் விநாயகரை வணங்குவதாகப் புராணங்கள் கூறுவதாகவும் சொல்லியிருப்பது உண்மையா ?

பார்வதிதேவி தன் உடம்பிலுள்ள அழுக்கைத் திரட்டிப் பிடித்த உருவமே விநாயகர் என்றும் புராணம் கூறுகிறது. பார்வதியால் வாசல்காக்கும்படி நியமிக்கப்பெற்ற இவர், சிவனையே உள்ளே விட மறுத்ததாகவும், சிவன் இவருடைய தலையை அறுத்துவிட்டதாகவும், அதற்குப்பின் பார்வதியின் வேண்டுகோளின்படி ஒரு யானையின் தலையை அறுத்துப் பிள்ளையாரின் தலையறுபட்ட முண்டத்தோடு ஒட்டவைத்துச் சிவன் உயிரூட்டினார் என்றும், இவரே ஆனைமுகத்தோனாகிற பிள்ளையார் என்றும் புராணம் கூறுகிறது. இத்தகையவர் எப்படிப் பரமாத்மாவாகமுடியும்? ஸ்ரீவதங்கண்ட பரமாத்மா வான கிருஷ்ணன் இவரை வணங்கச் சிறிதேனும் இடமுண்டா என்பதைக்கூட ஆராயாமல் பீடாதிபதி பேசுவதை நாம் பொருட்படுத்தாமலிருப்பதே நல்லது

ஸ்ரீ K. A. பார்த்தசாரதி, சென்னை-44 (7 to 9 கேள்விகள்)

ஸுதர்சனர் பதில் *II* முதல் கேள்வி பதிலில் விமர்சிக்கப்பட்ட ஸ்ரீ K. N. S. அவர்களின் புஸ்தகம், உண்மையில் அவர் ஒருவரால்

http://acharya.org

மட்டும் எழுதப்பட்டதல்ல; ஸ்ரீரங்கம் ஸ்ரீவேதா₃ந்ததே₃சிக ஸித்தாந்த அபிவர்த்தினி சபையின் சார்பில் அந்த சபையைச்சேர்ந்த பலர்கூடி எழுதியது அது. அந்த சபையின் காரியதரிசி அப்புத்தகத்தை அடியேனுக்கு அனுப்பி அபிப்ராயத்தைக் கேட்டிருந்தார். அப்புத்தகத்தின் அடிப்படைக் கருத்துக்களிலேயே உள்ள பற்பல குறைபாடுகளை விளக்கி அவருக்குக் கடிதம் எழுதியுள்ளேன். அவைபற்றிக் கீழ்க் கண்ட மூன்று கேள்விகளை ஸுதர்சனர் பதிலுக்காக அனுப்பியுள்ளேன். பதில் எழுதப் பிரார்த்திக்கிறேன். —K. A. பார்த்தசாரதி.

7. ஸ்ரீ K. N. ஸ்ரீநிவாசன் புத்தகத்தில் (பக்கம் 4) பக்தர்கள் ஒன்றுகூடி முதலில் முக்கியமான மூலமூர்த்தியைக்கொண்டு கோவில் அமைத்ததாகவும், பிறகு வழிபாடுகள் தோன்றியதாகவும், மேலும் அந்த வழிபாடுமுறைகளை நிர்ணயிக்கப் பூஜைகள், உத்ஸவாதிகள் வரையறுப்பதற்காக ஆகமங்கள் தோன்றின என்றும் தெரிவிக்கிறார். இதைக்கொண்டு பார்த்தால் மறைமுகமாக தேவராஜஸ்வாமி கோயில் ஆகமமுறைப்படி அமைக்கப்பட்டதல்ல என்ற கருத்து தெரிவிக்கப்பட்டதாகிறது. இதில் ஆராய்ச்சி பூர்வமான தங்களுடைய அபிப்பிராயத்தைத் தெரியப்படுத்தவும்.

இந்த அபு₃த்₃த₄க்கற்பனைகள் அக்₃நிஹோத்ரியால்'வரலாற்றில் பிறந்த வைணவம்' எனும் நூலில் எழுதப்பெற்றவையே. இவை நமது 'அக்₃நிஹோத்ரியும் வைணவமும்' எனும் நூலில் விரிவாகக் கண்டிக்கப்பட்டுள்ளன. அப்புத்தகத்தைப் பார்க்கவும். இந்த நூலை எழுதுவதில் சம்பந்தப்பட்ட அக்₃நிஹோத்ரி, K. N. S முதலானோர்க்கு வைணவத்தின் அடிப்படைகள் தெரியாது, ஸ்ரீ பா₄ஷ்யம் என்றால் என்னவென்றே தெரியாது என்பது நமது அந்த நூலிலும், முதல் கேள்விபதிலிலும் விளக்கப்பட்டுள்ளது. இத்தகைய புத்தகத்திற்கு ஒரு சபையினரே ஆதரவு அளித்தது மிக வியப்பே.

8. திருக்குருகைப்பிரான் பிள்ளான் திருமலை நம்பியின் குமாரர் என்று ஒருபக்ஷம். "திருமலை நம்பிகளுக்கு இரு குமாரர்களே இருந்தார்கள். பிள்ளான் அபி₄மான புத்ரன்" என்று தேசிகர் தமது 'குருபரம்பராஸாரம்" என்ற நூலில் எழுதியுள்ளார் என்று ஒருபக்ஷம். குருபரம்பரை-ஆறாயிரப்படியில் இதுவிஷயமாக ஒன்றும் பிரஸ்தாபிக்கப்படவில்லை. இவ்விஷயத்தில் ஏற்படும் சந்தேகத்தைத் தெளிவாக்கவும்.

http://acharya.org

திருக்குருகைப்பிரான் பிள்ளான் திருமலைநம்பியின் குமாரர் என்னும் உண்மை வடுகநம்பி அருளிய யதிராஜ வைப,வத்தில் உள்ளது. ஸ்ரீதேசிகர் அருளிய கு,ருபரம்பராஸாரத்தில் நீங்கள் கூறியபடி இல்லை. ஆளவந்தாருடைய குமாரருக்குப் பௌத்ரரான தோழப்பர் என்பவருக்கே இரு குமாரத்திகள் இருந்தார்கள் என்று ஸ்ரீ தே,ஶிகன் அருளியுள்ளார். இவர் பெரியதிருமலை நம்பிகள் காலத்திற்கு மிகப் பிற்பட்டவர்.

9. பெரியதிருமலைநம்பியிடம் பதினெட்டு தடவை ஸ்ரீராமாயண அர்த்தங்களை ஸ்ரீ ராமாநுஜர் கேட்டார் என்று ஸ்ரீ K. N. S. குறிப்பிடுகிறார். இதற்கு ஆதாரம் உண்டா அல்லது திருக்கோட்டியூர் நம்பிகளிடம் நடந்த விருத்தாந்தத்தைத் திருமலை நம்பிகளிடம் ஏறிடுவது அவருடைய மருளா என்பதை விவரிக்கவும்.

திருக்கோட்டியூர் நம்பிகளிடம் எம்பெருமானார் பதினெட்டு முறை நடந்தார் எனும் செய்தி பல பூர்வாசார்யக்,ரந்த,ங்களில் காணப்படும் உண்மையாகும். பெரியதிருமலைநம்பியிடம் அப்படி நடந்தார் என்று கூறுவதற்கு எந்தப் பூர்வாசார்யக்,ரந்த,த்திலும் ஆத,ாரமில்லை. அத்துடன் அப்படிக்கூறுவது யதிராஜவைப,வம், ப்ரபந்நாம்ருதம், ஆறாயிரப்படி கு,ருபரம்பராப்ரப,ாவம் முதலான பல பழைய நூல்களுக்கு முரண்பட்டதுமாகும். ஆகையால், உந்துமதகளிற்றனில் தேவகிப் பிராட்டியார் விஷயமான ஐதிஹ்யத்தை அத்துழாய் விஷயமாக்கிய கற்பனைபோல், இதுவும் ஒரு பிற்காலக் கற்பனையே.

V. ராமமூர்த்தி, அட்வகேட், துறையூர், திருச்சி.

10. சங்கீதாஞ்ஜலி குழுவினரின் 'ராமாநுஜர்' நாடகம் சரித்திரத்திற்கு முரண்படாமலுள்ளதா?

பலவிடங்களில் முரண்படுகிறது. சில இடங்கள் காட்டுவோம்:- (1) அத்,வைதம் ஞானமார்க்க,ம் என்றும், விஶிஷ்டாத்,வைதம் ப,க்திமார்க்க,ம் என்றும் ராமாநுஜர் வாயாலேயே கூறுவது அவருடைய க்,ரந்த,ங்களுக்கு முரண்பட்டது. (2) க்ருமிகண்டன் சபையில் கூரத்தாழ்வான் பரதத்வநிர்ணயம் செய்தார் என்பது சரித்திரம். ஆழ்வார்களை ஆத,ாரங்காட்டி சமரசவாதம்செய்ததாக இந்நாடகம் சித்திரிக்கிறது. (3) ஆதி சங்கரர் ஷண்மத ஸ்தா,பனம் செய்தார் என்னும் பொய்யும் புகுத்தப்பட்டுள்ளது. பெரும்பான்மையினரான சைவாத்,வைதிகளையும் த்ருப்திசெய்து பணம் சம்பாதிப்பதற்காக இப்படிப் பல பொய்கள் இந்நாடகத்தில் புகுத்தப்பட்டுள்ளன.

http://acharya.org

கோபாலதாஸன் சென்னை-17.

11. 'ஸ்ரீராமாநுஜர்' நாடகத்தை (10-ம் கேள்விபதிலில்) விமர்சனம் செய்திருப்பதைப் பார்த்தேன். சென்னையில் இதைப் பார்த்தவர்களில் அடியேனும் ஒருவன். அதில் ஆறுவார்த்தைகளில் முதலாவதான நாராயணபரத்வம் சிதைக்கப்பட்டுள்ளது. இதைச் சென்னை ஸ்ரீவைஷ்ணவர்கள் பார்த்துங்கூட மறுத்துக் கூறுமல் வாளாவிருக்கின்றனர். தேவரீர் கண்டனம் தெரிவித்து அக்காட்சியை மாற்றும்படியோ நீக்கும்படியோ செய்யவேண்டும். பரதத்வநிர்த்தாரணத்துக்காகக் கூரத்தாழ்வான் கண்ணையும், பெரியநம்பி உயிரையுமே தியாகம் செய்தவிஷயத்துக்குத் தவருன வியாக்கியானமா? கூடாது.

ஸுதர்சனர் பதிலில் (10-வதுகேள்விபதிலில்) பல பொய்கள் இந்நாடகத்தில் புகுத்தப்பட்டுள்ளதைக் காட்டிவருகையில் 2-வது விஷயமாக இவ்விஷயம் காட்டப்பட்டுள்ளது. ஆனுல், நாம் மாத்திரம் கண்டிப்பதை நாடகக்குழுவினர் பொருட்படுத்தமாட்டார்கள். அவர்களுக்குப் பணப்பை நிரம்புவது ஒன்றில்தான் குறி. மற்ற வைஷ்ணவ பத்திரிகைகளும், வைணவப்பொதுமக்களும் கிளர்ந்தெழுந்து நாடகக்குழுவினருக்குக் கண்டனத்தைத் தெரிவித்தால் ஏதாவது அரைகுறை விமோசனமாவது பிறக்கலாம். பொய்ப்பிரசாரத்தின் உச்சநிலைக்குச்சென்று குலசேகராழ்வாரையே சைவராகத் திட்டி, எத்தனை சொல்லியும் கேளாத 'கல்கி' பத்திரிகை தெய்வத்தால் தண்டிக்கப்பட்டதுபோல், தெய்வதண்டனை கிடைத்தால்தான் இவர்கள் திருந்துவார்கள்.

ஸ்ரீ. S. பூவராஹாசார்யஸ்வாமி, பங்களூர்-10.

12. பதினெட்டுமுறை ஸ்ரீ ராமாயண ஶ்ரவணத்திற்குத் திருமலைக்கு எம்பெருமானுர் எழுந்தருளியதாகக் கூறுவது பிற்காலக்கற்பனை என்று 9-வது கேள்விபதிலில் கூறப்பட்டுள்ளது. ஸ்ரீராமாயண வ்யாக்யாதாவான கோவிந்தராஜர் வ்யாக்யாநாரம்பத்தில் அப்படிக்கூறியிருக்கிருரே?

ஸ்ரீ கோவிந்தராஜர் மிகவும் உபகாரகராஞலும், பூர்வாசார்யர்கள் காலத்துக்குப்பிற்பட்டவரே. ஆகையால், யதிராஜ வைப

http://acharya.org

வம், ஆருயிரப்படி குருபரம்பராப்ரபாவம் ஆகிய பூர்வாசார்ய க்ரந்தங்களில்—எம்பெருமானுர் திருமலைக்கு ஒரு முறை சென்ற போது திருப்பதியில் ஒரு வருஷம் வாழ்ந்து ஸ்ரீராமாயணுர்த்தம் கேட்டார் என்று அருளியிருப்பதற்கு முரணுக கோவிந்தராஜர் எழுதியிருப்பது பூர்வாசார்யர்களுக்குப் பிற்காலத்தில் ஏற்பட்ட கற்பனைச்செய்தியை ஆதாரமாகக் கொண்டதாகவேயிருக்க வேண்டும். உந்துமதகளிற்றனில் தேவகிப்பிராட்டியார் விஷய மாக வார்த்தாமாலை முகலான பூர்வாசார்யக்ரந்தங்களில் காட்டப்பட்டுள்ள ஐதிஹ்யத்திற்கு முரணுக. அரும்பதவுரை காரர் அவ்வைதிஹ்யத்தை அத்துழாய் விஷயமாக மாற்றியெழுதி யிருப்பது இவ்விஷயத்தில் த்ருஷ்டாந்தமாகக் கொள்ளத் தக்கது. பூர்வாசார்யர்கள் காலத்திற்குப் பிற்பட்ட நூல்கள், பூர்வாசார்யக்ரந்தங்களுக்கு முரணில்லாத அம்ஸங்களிலேயே ப்ரமாணமாகும். இது நம்போல்வார் அனைவர்க்கும் பொருந்தும் நியாயம்.

V. ஸ்ரீநிவாஸன், திருச்சி-17.

13. 27—7—77 "இந்து" பத்திரிகையில் திரு. S. N. *ஸ்ரீராமதேசிகனின் பரிபாடல் வடமொழி மொழிபெயர்ப்பை விமர்ஸனம் செய்யும்போது* N. M. *என்பவர்.* "One of the salient features of the Paripadal that is more relevant to-day than ever before is that Vishnu and Kumara are sung with equal devotion and enthusiasm. Without a trace of sectarianism. With the Vedic assertion, 'Truth is one; sages call it by different names' the Paripadal poets sang without bias or prejudice." *[முற்காலத்தைக் காட்டிலும் இன்று குறிக்கொள்ளவேண்டிய முக்கியமானவிஷயம் யாதெனில்: பரிபாடலில் விஷ்ணுவும் குமரனும் ஸமமான பக்தி யுடனும் ஆர்வத்துடனும். (வைஷ்ணவர், சைவர் என்னும்) மதவேறுபாட்டின் லேசமுமில்லாமல் பாடப்படுகிறுர்கள் என்பதே அது. "உண்மைப்பொருள் ஒன்றே; ஞானிகள் அதைப் பல பெயர்களால் வழங்குகிறுர்கள்" என்னும் வேதத்தின் உறுதி மொழியை ஒட்டி, பரிபாடற் கவிஞர்கள் பக்ஷபாதமோ, மத வெறியோ இல்லாமல் பாடினுர்கள்] என்று எழுதியிருப்பது பற்றி விளக்கவேண்டுகிறேன்.*

http://acharya.org

நமது சாதிமத ஆராய்ச்சியில் விரிவாக விளக்கப்பட்டிருக்கும் விஷயம் இது. சங்ககாலத்தில் வைதி₃கமதமானது சைவம், வைஷ்ணவம் முதலான பிரிவுகளற்றதாயிருந்தது; திருமால் ஒருவனே வேதங்கண்ட மோக்ஷமளிக்கவல்ல பரம்பொருள் என்பதையும், பிரமன், சிவன், முருகன் முதலானுர் அவனால் படைத்து, அளித்து, அழிக்கப்படுகிறவர்களாய், இவ்வுலகப் பலன்களையே அளிக்கவல்ல சக்திமிக்க ஜீவர்களே என்பதையும் அனைவரும் இசைந்திருந்தனர். மோக்ஷத்தை விரும்புகிறவர்கள் திருமாலையே ஆஶ்ரயித்து அதைப்பெற்றுப்போந்தனர். மற்ற பலன்களை எளிதிற்பெற விரும்பியவர்கள் மற்ற தெய்வங்களைப் பற்றிநின்று அவற்றைப் பெற்றுப்போந்தனர். ஆயினும், அனைவரும் திருமால் ஒருவனே வேதம் புகழ்ந்த முழுமுதல்வன் என்பதையும், மற்ற தெய்வங்கள் ப்ராக்ருதர்களான ஜீவர்களே என்பதையும் உணர்ந்திருந்தனர். திருமால் ஒருவனுக்கே பரிபாடல் முதலானவற்றில் ஸர்வஜக₃த்காரணத்வ ரக்ஷகத்வ ஸம்ஹார்த்ருத்வங்களும், ஸர்வவ்யாபகத்வமும். மோக்ஷப்ரத₃த்வமும் முழங்கப்பெற்றிருப்பதையும், சிவன், முருகன் முதலானுர்க்கு ஓரிடத்திற்கூட அவை காணப்படாததையும் கண்ணுடையார் காணலாம். முருகனைப்பற்றியதான ஐந்தாம் பரிபாடலில், சிவனும் பார்வதியும் உடலுறவுகொண்டு பிறந்த பிள்ளையே முருகன் என்று பாடப்பட்டதும், "*மறுபிறப்பு அறுக்கும் மாசில்சேவடி மணிதிகழ் உருவின் மாஅயோயே*" என்றும், "*நாறு இணர்த்துழாயோன் நல்கின்அல்லதை ஏறுதல் எளிதோ வீறுபெறு துறக்கம்?*" என்றும் திருமால் ஒருவனே மோக்ஷமளிக்கவல்லவன் என்றும், "*பிறவாப்பிறப்பிலை பிறப்பித்தோர் இலையே*" என்று திருமால் தன் விருப்பத்தாலே பல அவதாரங்கள் எடுத்தபோதிலும் அவனைப்பிறப்பித்தவர் எவருமில்லை என்றும் பாடியிருப்பதும், திருமாலைத்தாழ்த்திப் பிற்காலத்தில் புனையப்பெற்ற ஆயிரக்கணக்கான சைவபுராணக் கதைகளில் ஒன்றுகூட சங்ககாலக்கவிஞர்களால் ஆதரிக்கப் படாமலிருப்பதும் சங்ககாலத்தில் *சிவனைப் பரம்பொருளாகக் கூறும்* சைவமதமோ, *குமரனைப் பரம்பொருளாகக்கூறும் கௌமாரமோ*, வேறு எந்த மதமுமோ தோன்றவேயில்லை என் பதையும், ருக்₃வேத₃த்தால் "*ஏகம் ஸத் விப்ரா ப₃ஹுதா₄ வத₃ந்தி*" [ஒன்றே பரம்பொருள்; முனிவர்கள் அதைப் பல

http://acharya.org

பெயர்களால் வழங்குகின்றனர்] என்று முழங்கப்பெற்ற பல பெயர்களேயுடைய ஒன்றுன பரம்பொருள் திருமாலே என்பதை அனைவரும் உணர்ந்திருந்தனர் என்பதையும் அதனுலேயே பிற் காலத்தில் ஏற்பட்ட மதப்பிணக்குகளுக்கு அக்காலத்தில் இடமே இல்லாமலிருந்தது என்பதையும் தெளிவாகக்காட்டு கிறது. முழுவுண்மை இவ்வாறிருக்க, பாதி உண்மையையே தெரிவித்திருப்பது—விமர்ஶகர் சைவப்பற்றினுல் நடுநிலை தவறி விட்டார் எனக்காட்டுகிறது.

R. ராமகிருஷ்ணன், திருமோகூர். K ராஜகோபாலன், சித்தூர்.
ராமதாஸ T. N கிருஷ்ணமாச்சாரி, வள்ளியூர்
மற்றும் சிலர் கேள்விகளின் சுருக்கம்.

14. 'வஸந்த நவராத்ரி' என்ற பெயரில் உள்ள சிறிய புத்தகத்தில் 'பத்மநாபஸஹோதரீ' என்னும் தலைப்பில் 'ப்ராக₃வதம் யசோதை வயிற்றில் து₃ர்கை₃ பிறந்ததாகக் கூறுகையால் அவள் பத்₃மநாப₄ஸஹோத₃ரி' என்று கூறப் பட்டுள்ளது. பல சாஸ்திரிகளும் இப்படியே பிரசாரம் செய்து வருகிறார்கள். 10—8—77 தினமணியில் சைவ புராணங்களில் ஶக்திபரத்வம் கூறியிருப்பதாகக் கூறிவிட்டு, "பாகவதத்தி லும் தான் பிறக்கும் முன்பு (விஷ்ணு) ஸ்ரீ பராசக்தியைக் கேட்டுக்கொண்டு ஜகன்மாதாவின் மங்கள நாமங்களைத் தானே உலகிற்குக் காண்பிக்கிறார் என்கிறார் ஸ்ரீவாஸுதேவ பரமப₄க்த ரான ஸ்ரீசுகர்" என்று மதுரையில் ஸ்ரீ மதனகோபால ஸ்வாமி ஸந்நிதியில் உபந்யாஸம் செய்த கூத்தனூர் சிங்கார சுப்ரமணிய சாஸ்திரிகள் கூறியதாக வெளிவந்திருக்கும் செய்தியைக் காண லாம். சிவாலயங்களில் திருமாலுக்குத் தாழ்வு கூறும் சித்தி ரங்களும் சில்பங்களும் பல உள்ளன. 'உங்கள் எதிர்காலம்' என்னும் சோதிடப் பத்திரிகையில், விஷ்ணுவுக்கும் சனிபீடை ஏற்பட்டதாகக் கதை எழுதப்பட்டுள்ளது. இவற்றின் உண்மையை விளக்க வேண்டுகிறோம்.

தாமஸபுராணங்களில் ஶ்ருதிஸ்ம்ருதிதிஹாஸஸாத்விகபுரா ணங்களுக்கு விருத்₃த₄மாக உள்ள அப₃த்₃த₄ங்களுஞ்சியங்களை நாம் பொருட்படுத்தவேண்டியதில்லை. சிவாலயம், சோதிடப் பத்திரிகை, ஸ்தல புராணக்கதைகள் பற்றிக் கேள்விகேட்டி ருக்கும் பல அன்பர்களுக்கும் இதுவே பதில். ஸாத்விக

http://acharya.org

புராணமான ஸ்ரீ ப₄ாக₃வதத்தில் உள்ளதை அத்₃வைதிகளான பௌராணிகர்கள் பணம் சம்பாதிப்பதற்காகத் திரித்துக் கூறி வருகிறார்கள். அதைத் தெளிவுபடுத்துவோம். *"ப₄க₃வாநபி விஶ்வாத்மா யோக₃மாயாம் ஸமாதி₃ஶத்"* [ப₄ாக₃வதம் 10-2-6] *[அனைவர்க்கும் ஆத்மாவான ப₄க₃வான் தனது யோக₃மாயைக்குக் கட்டளையிட்டார்]* என்று இப்ரகரணத்தைத் தொடங்கி எம்பெருமானுடைய நியமனங்களைக் காட்டி, தன் கார்யம் செய்வதற்குப் பரிசாக—து₃ர்க்கை₃க்குப் பல நாமங்களையளித்து, அந்த நாமங்களையுடைய து₃ர்க்க₃ாருபங்களுக்கு ஆடு கோழி முதலான ப₃லிகளையிட்டுப் பூசிக்கும் பாமர மனிதர்களுக்குப் பணம், காசு, பெண்டு, பிள்ளைகள் முதலான இவ்வுலகப் பலன்களை அளிக்கும் ஶக்தியை அளித்தான் எம்பெருமான் என்று கூறுகிறார் சுகர். *"ஸந்தி₃ஷ்டைவம் ப₄க₃வதா ததே₂த்யோமிதி தத்₃வச: । ப்ரதிக்₃ருஹ்ய பரிக்ரம்ய க₃ாம் க₃தா தத் ததா₂ऽக-ரோத் ॥"* [10-2-14, 15] *[இவ்வண்ணம் ப₄க₃வானுல் ஆஜ்ஞை யிடப்பெற்ற காளி, அவருடைய வார்த்தையை அப்படியே அங்கீ₃கரித்து, அவரை ப்ரத₃க்ஷிணம் செய்து, பூ₄மியை அடைந்து அப்படியே செய்தாள்]* என்று இப்ரகரணத்தை முடிக்கிறார் சுகர். சிங்கார சாஸ்திரிகள் விஷ்ணுகோவிலில் உட்கார்ந்துகொண்டு விஷ்ணுத்₃வேஷத்தாலே இதை எவ்வளவு திரித்துக் கூறியுள்ளார் என்பதை அன்பர்கள் உணரலாம். யசோதைக்குப் பெண்ணாகப் பிறந்ததையிட்டு, காளியைக் கண்ணனுக்குத் தங்கையாக இவர்கள் அபி₄மானிப்பதில் நமக்கு எவ்வித ஆக்ஷேபமுமில்லை. ஆனால், ஶ்ருதிஸ்ம்ருதிதிஹாஸ புராணங்களில் நாராயணனைப் பிரமன், சிவன் முதலான எல்லா தே₃வர்களையும் படைத்து ரக்ஷிக்கும் பிதாவாகக் கூறியிருப்பதை — ஆதி₃ஶங்கரர் முதலான ப்ராசீநர் அனைவரும் தமது ப₄ாஷ்யாதி₃களில் ஒப்புக்கொண்டிருக்கும் உண்மையை— மறைப்பதற்காக ஶைவ ஶாக்த புராணங்களையே பிரசாரம் செய்து திரிவது விசித்திரமாகவே உள்ளது.

(கொத்தட்டை) பண்டாரி R. சௌரிராஜய்யங்கார். ஸ்ரீரங்கம்.

15. *தைத்திரீய ஆநந்தவல்லியில் ஆரும் அனுவாகத்தில் "தத் ஸ்ருஷ்ட்வா ததே₃வாநுப்ராவிஶத்"* என்று தொடங்கும்

http://acharya.org

மந்திரத்திலும், சா₂ந்தோ₃க்₃யத்தில் [6-3-2] "அநேந ஜீவேந ஆத்மநா அநுப்ரவிஶ்ய நாமரூபே வ்யாகரவாணி' என்னும் மந்திரத்திலும் பரமாத்மா ஜக₃த்ஸ்ருஷ்டிக்குப் பிறகு உலகை வ்யாபித்ததாகக் கூறியுள்ளதே ; முன்னமே வியாபித்துள்ள பரம்பொருள் ஸ்ருஷ்டிக்குப் பின் மறுபடி வியாபிப்பது என்பது என்ன ?

முதலில் தைத்திரீய மந்திரத்தை ஆராய்வோம், "*ஸோऽகாமயத ப₃ஹு ஸ்யாம் ப்ரஜாயேயேதி*"என்பது இப்ரகரணத்தின் தொடக்கம். "பரமாத்மா 'நான் தேவர், மனிதர் முதலான உருவில் பலவாக ஆகக்கடவேன்; அதற்காக ஆகாஶம் முதலானவையாகப் பிறக்கக்கடவேன்'என்று ஸங்கல்பித்தார்" என்பது இதன் பொருள். தே₃வர், மனிதர், திர்யக், ஸ்த₂ாவரம் ஆகியவற்றின் படைப்பு வ்யஷ்டி ஸ்ருஷ்டி எனப்படும். இதற்கு முற்பட்டதாய், மஹான், அஹங்காரம், ஆகாஶம் முதலான பஞ்ச பூ₄தங்கள், அவற்றாலுண்டான அண்ட₃ம், அதற்கு அதி₄பதியாக அவ்வண்ட₃த்தில் பிறந்த பிரமன் ஆகியவற்றின் ஸ்ருஷ்டி ஸமஷ்டி ஸ்ருஷ்டி எனப்படும். ஸமஷ்டி வ்யஷ்டிப் பொருள்கள் எல்லாமே தன்னிடமிருந்து பிரித்துக் காணமுடியாத ஶரீரமாயிருப்பதால், அவற்றைத் தான் என்றே அபி₄மானிக்கிறான் எம்பெருமான். 'தே₃வர் மனிதர் முதலான வ்யஷ்டிப் பொருள்களைப் படைப்பதற்காக, ஆகாஶம் முதலான ஸமஷ்டிப் பொருள்களைப் படைக்கக்கடவேன்' என்பது இம் மந்திரத்தின் திரண்ட பொருள். அடுத்தபடியாக உள்ள "*ஸ தபோऽதப்யத ஸ தபஸ் தப்த்வா । இத₃ம் ஸர்வமஸ்ருஜத । யதி₃த₃ம் கிஞ்ச ।*" [அந்தப் பரமாத்மா ஸங்கல்பத்தைச் செய்தார் ; ஸங்கல்பத்தைச் செய்து, ஒன்று தவறாமல் இவையனைத்தையும் படைத்தார்.] என்னும் மந்திரம் பரமன் முதலில் ஸங்கல்பித்தபடி ஸமஷ்டி வ்யஷ்டி ஸ்ருஷ்டிகளைச் செய்ததைக் கூறுகிறது. இங்கு 'தபஸ்' என்றது முனிவர்கள் செய்வதுபோன்ற தவம் அல்ல; "*தப ஆலோசநே*" என்னும் த₄ாதுவிலிருந்து தோன்றியதாகையாலே ஆலோசனம் எனத் தக்க ஸங்கல்பத்தைக் குறிக்கிறது. அடுத்தபடியுள்ள "*தத் ஸ்ருஷ்ட்வா ததே₃வாநுப்ராவிஶத் தத₃நுப்ரவிஶ்ய ஸச்ச த்யச் சாப₄வத்*"]அதைப் படைத்து அதையே பரமாத்மா உள் நுழைந்து வியாபித்தார் : அப்படி வியாபித்து, சேதநப்பொருள்

களும் அசேதநப்பொருள்களுமான எல்லாமாகவே ஆனார்] என்னும் பகுதியிலேயே பரமாத்மா ஸ்ருஷ்டிக்குப் பின் மறுபடியும் வியாபித்தது கூறப்படுகிறது. இந்த வ்யாப்தி புதிதா பழையதா என்பது கேள்வி. பழைய வ்யாப்தி தொடர்கிறது என்பதை இல்லைசெய்ய முடியாது. புதிதாக ஓர் வ்யாப்தி விதிக்கப்பட்டிருக்கையால், அந்தப் பழைய வ்யாப்தி ஒருவகையில் புதுமைபெறுகிறது என்றும் விளங்குகிறது. அதாவது :- படைப்புக்குமுன் அளவற்றதாய், ஒன்றுனதான மூலப்ரக்ருதியை ஶரீரமாகக்கொண்டிருந்த பரமாத்மா, படைப்புக்குப்பின் ஸமஷ்டிவ்யஷ்டிப்பொருள்களாகிற அளவுடைய கணக்கற்ற பொருள்களை ஶரீரமாகக்கொள்ளும்போது, தன் ஸ்வரூபத்தில் ஒவ்வொரு பகுதியாலே அப்பொருள்களை வியாபித்திருக்கிறுனு, அல்லது அவை ஒவ்வொன்றிலும் தன் ஸ்வரூபம் முழுவதாலுமே வியாபித்திருக்கிறுனு என்னும் கேள்வி எழுகிறது. ஒவ்வொரு பகுதியாலே வியாபித்திருக்கின்றுன் எனில்: ப்ரஹ்மஸ்வரூபம் அவயவங்கள் (பகுதிகள்) அற்றது என முழங்கும் வேதவாக்யங்களோடு முரண்படும். அதனுல் ப்ரஹ்மஸ்வரூபம் ஒவ்வொரு பொருளிலும் முழுவதுமே வியாபித்துள்ளது என்றே கொண்டு தீரவேண்டும். ஒரு பொருளில் முழுவதும் வியாபித்துவிட்டால் மற்ற பொருள்களில் எப்படி வியாபிக்கமுடியும்? என்னும் கேள்வியெழ, "ஶ்ருதேஸ்து ஶப்தமூலத்வாத்" [2-1-27] [ஶ்ருதி சொல்லுகையாலே அப்படிக்கொள்ளுகிறோம்; (ப்ரஹ்மம்)ஶ்ருதியாலேயே அறியப்படுவதாகையால்] என்று ப்ரஹ்மஸூத்ரகாரர் க்ருத்ஸ்நப்ரஸக்த்யதிகரணத்தில் பதிலுரைத்தார். "பரந்த தண் பரவையுள் நீர்தொறும் பரந்துளன் பரந்த அண்டமிதென" [1-1-10] என்று ஆழ்வாரும் இதையே அருளிச்செய்தார். இப்படி ஒன்றுன பரம்பொருள் ஒவ்வோரணுவிலும் முழுவதும் வியாபித்திருப்பது எப்படிக்கூடும்? எனில்: பரம்பொருளுக்கேயுள்ள அகடிதகடநாஶக்தியாலே கூடும் என்று ஆசார்யர்கள் நிர்வஹித்தார்கள். ப்ரக்ருதியை ஶரீரமாகக்கொண்டிருந்தபோது ஒரு பொருளையே முழுவதும் வியாபித்திருந்த பரம்பொருள் ஸமஷ்டிவ்யஷ்டிப் படைக்குப்பின் அவற்றின் ஒவ்வொரு அணுவிலும் முழுவதும் வியாபித்திருக்கையாகிற புதுமையைப்

http://acharya.org

பெற்றது என்பது, படைப்புக்குப்பின் விதிக்கப்பெற்ற அநு ப்ரவேசத்தின் கருத்து என்று கண்டுகொள்வது. "*அயம் வை ஹரய:, அயம் வை த₃ச ச சதாநி ஸஹஸ்ராணி ப₃ஹூநி சாநந்தாநி ச*" [ப்₃ருஹ 4-5-19] [இப்பரமாத்மாவே பத்து நூறு ஆயிரம் என்று கணக்கற்ற ஹரிஸ்வரூபங்களாக ஆகிறான்] என்னும் ப்₃ருஹதா₃ரண்யக ச்ருதியும் இவ்வர்த்த₂த்தையே உத்₃கோ₄ஷித்தது. "*ஏவம் ப்ரத்யேகம் ஸ்வரூபேணாபி பர்யாப்த்யா ஸர்வசரீரித்வம் உபபத்₃யதே—இதி சப்₃தா₃ர்த்த₂: । விசித்ர சக்தே: பரமாத்மந: கா அநுபபத்திரிதி ப₄ாவ:*" [இவ்வண்ணம் தனித்தனியாக ஒவ்வொரு பொருளிலும் ஸ்வரூபத்தினுலும் முழுவதும் வியாபித்திருப்பதால் ஸர்வசரீரித்வம் பரமாத்மா வுக்குப் பொருந்துகிறது என்று சப்₃த₃த்தின் பொருள்; விசித்ரமான சக்தியையுடைய பரமாத்மவிஷயத்தில் பொருந் தாததொன்றுமில்லை என்று கருத்து] என்று இந்த வாக்யத்தின் ப₄ாஷ்யத்திலும், தைத்திரீய ஆநந்த₃வல்லியில் அநுப்ரவேச சப்₃த₃த்தின் பொருளை விவரிக்கும்போது, "*கோ₃ஜட₂ரக₃த வத்ஸவத் ஸர்வவ்யாப்தஸ்ய ப்₃ரஹ்மண: ப்ரத்யேகம் ஸர்வ வஸ்துஷு புஷ்கலப்ரதீத்யர்ஹ ஸ்தி₂திவிசேஷ ஏவ அநு ப்ரவேச:*" [பசுவின் க₃ர்ப்ப₄ப்பையில் கன்று வியாபித்திருப் பதுபோல் ஒவ்வொரு பொருளிலும் வியாபித்திருக்கும் ப்₃ரஹ் மத்திற்கு எல்லாப்பொருள்களிலும் தனித்தனியே ஸ்வரூபத் தாலும் நிறைந்திருக்கலாம்படி நிற்கையே இங்கு அநுப்ரவேசம் எனப்படுகிறது.] என்றும் உபநிஷத்₃ப₄ாஷ்யகாரரான ஸ்ரீரங்க ராமாநுஜமுனிவரர் அருளியிருப்பது இங்கு அநுஸந்தி₄க்கத்தக்கது.

"*அநேந ஜீவேந ஆத்மநா அநுப்ரவிச்ய நாமரூபே வ்யாகர வாணி*" [சா₂ந் 6-3-2] [(இந்த பூ₄தங்களை) இந்த ஜீவனாகிற என்னைக்கொண்டே வியாபித்து நாமரூபங்களைச் செய்யக் கடவேன்.]என்றவிடத்தில் ஜீவஸமஷ்டியை சரீரமாகக்கொண்ட நான்முகன் ஜீவசப்₃த₃த்தால் குறிக்கப்படுகிறான். தனக்கு சரீரமான அந்த நான்முகனைக்கொண்டு அண்ட₃த்திலுள்ள அசேதனமான வ்யஷ்டிப்பொருள்களை வியாபித்து, அவற்றுக்கு தே₃வாதி₃ரூபங்களையும் நாமங்களையும் கொடுப்பதாகப் பரமாத்மா செய்யும் ஸங்கல்பம் இங்கு கூறப்படுகிறது.

http://acharya.org

மு. கேசவன், சென்னை-38. (16, 17 கேள்விகள்)

16. வேதத்தில் யாகம் செய்யும்போது உயிர்ப்பலி அங்கீகரிக்கப்பட்டுள்ளதா? அப்படி இல்லை எனில் சமீபத்தில் [சில வருடங்களுக்குமுன்] ஸ்ரீரங்கத்தில் உயிர்ப்பலி கொடுத்து யாகம் செய்தார்களே, இது சரியா?

வேத₃த்தில் யாக₃ம் செய்யும்போது உயிர்ப்பலி அங்கீ₃கரிக்கப்பட்டுள்ளது. ஆனாலும், ஸாத்வத த₄ர்மநிஷ்ட₂ர்களுக்கு இது விலக்கத்தக்கது; பிஷ்டபசு என்னப்படும் மாவினால் செய்யப்பட்ட ஆட்டையே ஸாத்வத (பாஞ்சராத்ர) த₄ர்மநிஷ்ட₂ர்கள் ப₃லி கொடுக்கவேண்டும் என்று மஹாபா₄ரதத்தில் உபரிசரவஸு வ்ருத்தாந்தம் கூறுகிறது. ஸ்ரீரங்க₃த்தில் யாக₃ம் செய்தவர்கள் இதை ஒப்புக்கொள்வதில்லைபோலும். எப்படியாயினும், ப்ரபந்நர்களான ஸ்ரீவைஷ்ணவர்கள் காம்யமான யாக₃ங்களைச் செய்யவேண்டிய அவச்யமில்லை.

17. யதிகளுக்கு நித்யகர்மானுஷ்டானங்கள் உண்டா? யஜ்ஞோபவீதங்கள் உண்டா? உண்டெனில் அத்வைத பீடாதிபதிகள் பூணூல் அணிவதில்லையே, அது சரியா?

யதிகளுக்கு நித்யகர்மாநுஷ்டா₂னங்களும், ஶிகா₂யஜ்ஞோபவீதங்களும் உண்டு என்பது பல த₄ர்மஶாஸ்த்ர வசனங்களில் கூறப்பட்டுள்ளது. 'ஜீவன்முக்தர்களாய், ஏகத₃ண்டி₃களான எங்களை இவ்வசனங்கள் கட்டுப்படுத்தாது' என்று கூறி, அத்₃வைதிகள் கர்மாநுஷ்டா₂னத்தையும், ஶிகா₂யஜ்ஞோபவீதங்களையும் விட்டுவிட்டார்கள். தாமஸமான ஆக₃மங்களிலும், புராணங்களிலும் சொன்ன சக்தி உபாஸனை, ப₄ஸ்ம தா₄ரணம் முதலானவற்றைக் கைக்கொண்டுவிட்டார்கள்.

ஜோஸ்யர் ராமஸ்வாமி அய்யங்கார், சிதம்பரம்.

18. ஸந்யாஸிகள் மலர்க்கிரீடம், மலர்ப்போர்வை முதலான போ₄க₃ப்பொருள்களை அணிந்துகொள்ளலாமா?

ஸந்யாஸிகள் ப₄க₃வத்ப்ரஸாத₃மாயிருந்தாலொழிய மலர்மாலைகளைக்கூட அணிந்துகொள்ளக்கூடாது. அத்₃வைத ஸந்யாஸிகள் சிலர் தங்களை ஜீவன்முக்தர்களாகக் கருதுவதால் மலர்க்

http://acharya.org

கிரீடம் முதலானவற்றை அணிந்துகொள்ளுகிறார்கள்போலும்! ஜீவன்முக்தி என்பது என்ன? அது அவர்களுக்கு உண்டா? என்பது ஆராயத்தக்கது.

V. கிருஷ்ணஸ்வாமி, திருச்சி.

19. பாத₃பூஜை, மலர்க்கிரீடம் அணிந்துகொள்வது முதலானவற்றுக்கு "ரேட்"(rate) ஏற்படுத்திக்கொண்டு ஸந்யாஸிகள் பணம் வாங்கலாமா?

ஸந்யாஸியானவன் பணத்தைக் கையாலும் தொடக் கூடாது. இது சாஸ்திரங்களிலுள்ள பொதுவிதி₄. அதனாலேயே பணத்திலே புரளும் மட₂ாதி₄பத்யம் ஶாஸ்த்ரங்களில் நிஷேதிக்கப்பட்டது. ஆயினும், *"மாட₂ாபத்யம் யதி: குர்யாத் விஷ்ணு பூஜாபி₄வர்த்த₄நே"* [விஷ்ணு பூஜையை அபி₄வ்ருத்₃தி₄ செய்வதற்காக ஸந்யாஸியானவன் மட₂ாதி₄பதியாயிருக்கலாம்.] என்பது முற்கூறிய பொதுவிதி₄க்கு விதி₄விலக்காக ஶாஸ்த்ரங்களிலேயே காட்டப்பட்டது. இவ்விதி₄விலக்கைப் பின்பற்றியே ஸ்ரீரங்கம், திருமலை, வானமாமலை, திருக்குறுங்குடி, திருநாராயணபுரம், அஹோபி₃லம் முதலான மட₂ங்கள் விஷ்ணுஸந்நிதி₄ பூஜாபி₄வ்ருத்₃தி₄க்காக எம்பெருமானார் காலம் தொடங்கி ஏற்பட்டன. பாத₃பூஜை, மலர்க்கிரீடம் அணிந்துகொள்வது முதலானவற்றுக்கு 'ரேட்' பேசிக்கொண்டு பணம் வாங்குவது ஸந்யாஸிகளுக்கு அடியோடு பொருந்தாது. இவர்கள் தங்களை ஜீவன் முக்தர்களாகச் சொல்லிக்கொள்வதும், குடிகாரர்களும், கூத்திலோலர்களும் மற்றும் பல து₃ராசாரமுள்ளவர்களும் நிறைந்த சினிமாக்காரர்களும், நாடகக்காரர்களும், தினசரி, வார, மாதப் பத்திரிகைகள் பலவும் இவர்களை நடமாடும் தெய்வங்களாகச் சித்திரிப்பதும் கலியின் விசித்திரமே.

R. பார்த்தசாரதி, சென்னை-50.

20. துக்ளக் ஆசிரியர் "சோ" எழுதிவரும் "எங்கே பிராமணன்" என்னும் தொடர்கதையில் (1) கடவுளைத் (தென்மொழியான) தமிழில் வழிபடுபவர்கள் தென்கலையார்கள், வடமொழியில் வழிபடுபவர்கள் வடகலையார்கள் என்றும், (2) வைஷ்ணவர்களுக்கு வர்ணாஶ்ரமத₄ர்மங்கள் கிடையாது. ஸ்ரீராமாநுஜர் வர்ணாஶ்ரமத₄ர்மங்களை ஆதரிக்கவில்லை என்றும்

http://acharya.org

பொருள்பட—தம் கதையில் கதாநாயகனுகத் தாம் கற்பனை செய்திருக்கும் (வசிஷ்டரின் அவதாரமான!) அசோக் என்னும் பாத்திரத்தின் மூலம் எழுதியுள்ளார். இது பற்றிய உண்மையை விளக்கவேண்டுகிறேன்.

மத நூல்களில் அறைகுறை அறிவுள்ளவர்கள் மதவிஷயங்களைப்பற்றி எழுத முற்படுவதால் வரும் வினை இது. (1) இரண்டு கலையினரும் இருமொழியிலுமே திருமாலை வழிபடுவதால் "சோ" எழுதியிருப்பது அப₃த்₃த₄மாகும். இருகலையினருக்கும் இலக்கணம் என்ன? எனில்: மதக்கருத்துக்களை விளக்குகையில், ஆழ்வார்களுடைய தமிழ்வேத₃ங்களாகிய தி₃வ்ய ப்ரப₃ந்த₄ங்களுக்கும், அவற்றுக்குப் பூர்வாசார்யர்கள் அருளிய விரிவுரைகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்து, அவற்றுக்கு அநுகு₃ணமாக வேத₃ஶாஸ்த்ர வசனங்களுக்குப் பொருள் கூறியவர்கள் தென்கலை வகுப்பு என்றும், வடமொழி வேத₃ ஶாஸ்திரங்களுக்கு முக்கியத்துவங்கொடுத்து, அவற்றுக்கு அநுகு₃ணமாக தி₃வ்யப்ரப₃ந்த₄ங்களுக்குப் பொருள் கூறியவர்கள் வடகலை வகுப்பு என்றும் கொள்ளலாம். (2) பொதுவாக ஸ்ரீ வைஷ்ணவர்களும், குறிப்பாக ஸ்ரீ ராமாநுஜரும், வர்ணாஶ்ரமத₄ர்மங்களை ஆத₃ரிக்கவில்லை என்று எழுதியது—வடமொழியில் அமைந்த ஸ்ரீ ராமாநுஜரின் நூல்களைப் படிக்காமல், அவரைப் பற்றிய சரித்திரங்களை அறைகுறை அறிவுள்ளவர்களிடமிருந்து கேட்டதால் வந்த வினை. *'வர்ணாஶ்ரமத₄ர்மங்களின்படி ஒழுகினுல்தான் மனிதன் உய்வுபெறமுடியும்' என்று ஸ்ரீராமாநுஜர் தம் நூல்களில் நூற்றுக்கணக்கான இடங்களில் முழங்கியிருக்கிருர். (இவ்விஷயம்—ஆதி₃ஶங்கரர், மத்₄வர் முதலான மற்ற வைதி₃கமதத்தலைவர்களும் இசைந்ததாகும்.) ஆயினும், வர்ணாஶ்ரமத₄ர்மங்களின்படி* ஒழுகவேண்டும் என்று சாஸ்திரங்களிலுள்ள பொதுவிதி₄க்கு **(rule)**, ஒரு முக்கியமான விதி₄விலக்கு **(exception)** சாஸ்திரங்களிலேயே கூறப்பட்டுள்ளது என்பது ஸ்ரீராமாநுஜர் முதலான ஸ்ரீவைஷ்ணவாசார்யர்களின் கருத்தாகும். *"ந ஶூத்₃ரா ப₄க₃வத்₃ப₄க்தா: விப்ரா பா₄க₃வதா: ஸ்ம்ருதா: । ஸர்வவர்ணேஷு தே ஶூத்₃ராயே ஹ்யப₄க்தா ஜநார்த்த₃நே ॥"* [ஸ்ரீமந் நாராயணனுடைய ப₄க்தர்கள் (ஶூத்₃ரஜாதியில் பிறந்திருந்தாலும்) ஶூத்₃ரர்க

ளல்லர் ; அந்தணர்களேயாவர். விஷ்ணுப₄க்தியில்லாதவர்கள் உயர்ந்த வர்ணத்தவர்களாயினும் ஶூத்₃ரர்களேயாவர். "விப்ராத் த்₃விஷட்₃கு₃ணயுதாத் அரவிந்த₃நாப₄ பாத₃ாரவிந்த₃ விமுக₂ாத் ஶ்வபசம் வரிஷ்ட₂ம்" [பன்னிரண்டு ஆத்மகு₃ணங்கள் நிறைந்தவனுயிருந்தும் பத்₃மநாப₄னுடைய திருவடித்தாமரையில் ஈடுபாடில்லாதவனுன அந்தணனைக் காட்டிலும் நாய் மாமிசம் தின்னும் சண்ட₃ாளன் மேற்பட்டவன்.] முதலான ஶாஸ்த்ரவசனங்களிலும், "குலந்தாங்குசாதிகள்" [திருவாய் மொழி 3-7-9], திருமாலை 39. 40, 41, 42, 43 பாசுரங்களிலும், இந்த விதிவிலக்கு கூறப்பட்டுள்ளது. ஆகையால், பொதுவான வர்ணுஶ்ரமவிதி₄கள் உண்மையான ப₄க₃வத்₃ப₄க்தர்கள் விஷயத்தில் செல்லாது என்று ஸ்ரீ வைஷ்ணவாசார்யர்கள் கொண்டு அதன்படி நடந்தார்கள். விதி₄விலக்கு விதி₄யை வலியுறுத்துமேயன்றி, அதை அழித்துவிடாது என்பது சட்டவல்லுநரான "சோ"வுக்குத் தெரியாததல்ல. ஆனுல், நாம் எடுத்துக் காட்டியபின்பும் நேர்மையுடன் அவர் இத்தவறை ஒப்புக் கொள்ளமாட்டார், ஏற்கனவே நமக்கு இவ்விஷயத்தில் அநுப₄வமுண்டு. 1—2—76 துக்ளக்கில் [பக்கம் 23 to 27] ஓர் கட்டுரையில் "*யாக்கியவல்கியர் ஸ்ம்ருதிக்கு விக்னேஸ்வரன் என்ற ஒரு பண்டிதர் விளக்கம் எழுதினுர்*" என்றும், "*குழப்பங்களை நீக்க 'மீமாம்சம்' என்ற விரிவுரையை எழுதிய ஜாமினி என்பவர். ஸ்ம்ருதிக்களிடையேயும், அவற்றின் விளக்கங்களிடையேயும், முரண்பாடுகள் தெரியும்போதெல்லாம் வேதத்தின் உதவியை நாடினுர்*" என்றும் "சோ" எழுதியிருந்தார். இதில் பல தவறுகள் உள்ளன :— (1) யாஜ்ஞவல்க்யருடைய ஸ்ம்ருதிக்கு விளக்கம் எழுதியவர் *விஜ்ஞாநேஶ்வரரே*யொழிய விக்னேஸ்வரனல்ல. (2) பூர்வமீமாம்ஸா ஸூத்ரங்களை எழுதியவர் *ஜைமினி*யேயொழிய ஜாமினியல்லர். (3) அவர் வேத வாக்யங்களில் மேலெழத்தோன்றும் முரண்பாடுகளைத் தம் நூலில் ஸ்ம்ருதிகளையும். நியாயங்களையுங்கொண்டு போக்கினுரே யொழிய, ஸ்ம்ருதிகள், அவற்றின் விளக்கங்களிடையே தோன்றும் முரண்பாடுகளைப்போக்க வேத₃த்தின் உதவியை நாடியவரல்லர். ஸம்ஸ்க்ருதம் தெரியாத சட்ட வல்லுநரான "சோ"விற்குக் கடிதம் எழுதி இவ்விஷயங்களை விளக்கி

வாசகர்களும் உண்மையை உணரலாம்படி கடிதத்தை துக்ளக்கில் வெளியிடும்படி கேட்டுக்கொண்டிருந்தேன். நம் கடிதத்தை வெளியிட்டோ, வெளியிடாமலோ தவறைத் திருத்திக்கொள்ளும் நேர்மை "சோ" விடமில்லை. தமக்கு அடியோடு தெரியாத வைஷ்ணவ மத விஷயத்திலாவது தவறைத் திருத்திக்கொள்கிறாரா என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

S. வேங்கடம், சமயபுரம்.

21. சென்னை-17 வானதி பதிப்பகம் வெளியிட்டுள்ள கவிஞர் கண்ணதாசனின் பகவத்கீதையுரை சரியான முறையில் அமைந்துள்ளதா ?

கவிஞர் கண்ணதாசன் குடிகாரர், கூத்திலோலர் என்பது உலகறிந்தது. அவராலும் இசையப்பெற்றது. ஒழுக்கத்தால் உயர்ந்த ஆதிஶங்கரர், ஸ்ரீராமாநுஜர். ஸ்ரீ மத்₄வர் முதலான மஹாசார்யர்களால் உரையெழுதப்பெற்ற மோக்ஷஶாஸ்த்ரமான கீ₃தைக்கு இவர் உரையெழுதுவதும், நம்நாட்டு இளைஞர்கள் அதைக்கொண்டு கீ₃தைக்குப் பொருளுணரவேண்டிய நிலையிலிருப்பதும் நம் நாட்டின் தௌ₃ர்ப்பா₄க்₃யமே. காளிதாசனும், கம்பனும் செய்யத்துணியாத கார்யத்தை இவர் செய்யத் துணிந்தது ஒருபுறமிருக்கட்டும்; வடமொழி நூலான கீ₃தைக்கு உரையெழுதுவதற்கு அடிப்படையாக வேண்டிய வடமொழி யறிவே இவரிடம் இல்லையே. தம் நூலின் முன்னுரையில் "இதில் வித்தியாசம் என்னவென்றால், 'பிரும்மம்' 'பிரம்மம்' என்று இரண்டு வார்த்தைகள் தனித்தனியாகப் பொருள் தருவதுதான். என்னைப்போன்ற சாதாரண மனிதர்களை இது குழப்புவதில் ஆச்சரியமில்லை." என்றும், " 'பிரும்மம்', 'பிரம்மம்' என்ற இரண்டு சொற்களும் வேறுவேறு பொருள்களைத் தருவதுபோல, 'கருமம்', 'கர்மம்' இரண்டும் வேறுவேறு பொருள்களைத் தருகின்றன. கருமம், 'முன்வினை' என்றும், கர்மம். 'செய்தொழில்' என்றும் காட்டப்படுகின்றன. ஆனால் இரண்டுமே பல இடங்களில் ஒரே 'செய்தொழில்' என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளன." என்றும், "வடமொழியில், 'சூத்ரன்' 'ஷூத்ரஹ' என்றழைக்கப்பட்டாலும், 'இயக்கு

http://acharya.org

வோன்' என்ற பொருளில் 'சூத்திரதாரி' என்று கொள்வதே பொருந்தும். சூத்திரம் என்பது விதிமுறை; சூத்திரன் என்பவன் செயல்படுபவன்'' என்றும் இவர் எழுதி யிருப்பதைப் படிப்பார்க்கு இவருடைய வடமொழியறிவு படுமோசமானது என விளங்கும். கீதைக்கு ஆங்கிலத்திலும், தமிழிலும் உள்ள மொழிபெயர்ப்புகளைத் துணைகொண்டு தம் மனம்போனபடி இவர் பொருள் உரைத்திருக்கிறார் என்பது இவர் நூலைப் பார்க்கும்போது தெளிவாக விளங்குகிறது. கீதையைக் கற்பதற்கு அடிப்படைத் தகுதிகளான ஞானமோ, பக்தியோ, வைராக்யமோ அற்ற லக்ஷக்கணக்கானவர்கள் கண்ணதாசனுடைய காமரசக் கதைகளையும், கவிதைகளையும் கொண்டு போதுபோக்குவதுபோலே, இந்நூலைக்கொண்டும் போதுபோக்குவதற்காக ஏராளமாக வாங்குவார்களாகையாலே இந்நூல் மிக விரைவில் பல பதிப்புகள் ஏறுமாகையால், கண்ணதாசனுக்கும், வானதி பதிப்பகத்தாருக்கும் இந்நூல் ஒரு பணச்சுரங்கமாய் அமையும். காஞ்சி(சிறிய)காமகோடி பீடாதி பதியின் அருளுரையை நூலுக்கு முகவுரைபோலே கொடுத் திருப்பது புத்தகம் ஏராளமாக விற்பதற்கு மிகவும் உதவும். ஆகையால், நாம் உண்மையை எழுதியிருப்பது கண்டு கண்ணதாசனோ, வானதி பதிப்பகத்தாரோ கவலைப்பட வேண்டாம்.

R. ராஜகோபாலாச்சாரி, M. A., தமிழ்ப்பேராசிரியர்,
காரைக்கால் (22 to 24 கேள்விகள்)

22. அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழாராய்ச்சித்துறை விரிவுரையாளராக இருந்த திரு. தி. வை. சதாசிவ பண்டாரத் தார் என்பவரால் எழுதப்பட்டு, 1974-ல் அப்பல்கலைக் கழகம் வெளியிட்ட, "பிற்காலச் சோழர் சரித்திரம்'' என்ற நூலின் 344-ஆம் பக்கத்தில் கீழே உள்ள வரிகள் காணப்படுகின்றன:— "கி. பி. எட்டாம் நூற்றாண்டில் நந்திவர்மப் பல்லவ மல்லனால் தில்லையம்பலமுன்றிலில் நிறுவப்பெற்று அந்நாள் முதல் நிலை பெற்றிருந்த திருமால் மூர்த்தத்தைக் கடலில் எறிந்த இவன் செயல் வைணவர்களின் உள்ளத்தைப் பெரிதும் புண்படுத்தி விட்டது.'' — *இப்படி, திரு. பண்டாரத்தார் அவர்கள் எழுதி யிருப்பதிலிருந்து, "தில்லையம்பலம்'' என்று சைவர்கள் குறிப்*

http://acharya.org

பிடும் இடத்தில், முதன்முதலாக நந்திவர்மன் "திருமால் மூர்த்தத்தைக்" கொண்டுவந்து பிரதிஷ்டை செய்தான் என்று ஏற்படுகிறதே. இதன் உண்மையை வரலாற்று ரீதியில் விளக்கி அருளவேணும்.

பண்டாரத்தார் இப்படி எழுதியிருப்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை. தில்லைத் திருச்சிற்றம்பலம் என்று நடராஜர்கோவிலும், தில்லைத் திருச்சித்திரகூடம் என்று கோவிந்தராஜர் கோவிலும் (முறையே) நாயன்மார்களாலும், ஆழ்வார்களாலும் பாடப் பெற்றிருப்பதால், இரண்டும் தனித்தனிக் கோவில்களாகவே அவர்கள் காலத்தில் இருந்தன என விளங்குகிறது. சிற்றம் பலம் என்று அழைக்கப்பெற்ற சிவன் கோவில் சிறியகோவிலாகவும், சித்திரகூடம் என்று அழைக்கப்பட்ட விஷ்ணு கோவில் பெரியகோவிலாகவும் விளங்கிவந்தன என்பது அவற்றின் பெயரிலிருந்தே விளங்குகிறது. இது கண்டு வயிறெரிந்த கிரிமிகண்டன் திருச்சித்திரகூடத்தை இடித்து, அவ்விடத்தையும் சுற்றிவளைத்துச் சிவன்கோவிலாக்கினான் என்பது வெளிப்படையாக விளங்குகிறது. நந்திவர்மன் சிவன் கோவிலுக்குள் சித்திரகூடத்தைக் கட்டினான் என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை. ஆழ்வார்கள் பாடலிலோ, அல்லது வேறு நூல்களிலோ, கல்வெட்டுகளிலோ இப்படியில்லை. "பைம்பொன்னும் முத்தும் மணியும் கொணர்ந்து படைமன்னவன் பல்லவர்கோன் பணிந்த, செம்பொன் மணிமாடங்கள் சூழ்ந்த தில்லைத் திருச்சித்திரகூடம்" [பெரியதிருமொழி 3-2-3] என்னும் பாசுரத்தில் திருமங்கையாழ்வார் பல்லவ அரசன் ஒருவன் ஏராளமான காணிக்கைகளைத் திருச்சித்திரக்கூடத்து எம்பெருமானுக்கு சமர்ப்பித்ததைக் கூறுகிறாரேயொழிய, புதிதாகக் கோவிலைக் கட்டியதாகக் கூறவில்லை. ஆகையால், பண்டாரத்தார் நந்திவர்மனால் சிவன்கோவிலுக்குள் விஷ்ணு கோவில் புதிதாகக் கட்டப்பட்டதாகக் கூறியிருப்பது அபாண்டப் புளுகுகளில் தலையானதாகும்.

23. ஷை நூலில் 345-346-ஆம் பக்கத்தில், "நம் குலோத்துங்கன், திருமாலிடத்து வெறுப்புக்கொண்டு, வைணவர்களுக்குத் தீங்கிழைத்தான் என்று கூறுவது எவ்வாற்றானும் பொருந்துவதன்று. இவன் உண்மையில் திருமால் சமயத்தில்

http://acharya.org

வெறுப்புடையவனாய் இருந்திருப்பின் இவன் தன் ஆட்சிக்குட்பட்ட சோழ இராச்சியத்தில் உள்ள எல்லாத் திருமால் கோயில்கட்கும் இடையூறு புரிந்திருத்தல் வேண்டுமன்றோ? ஆனால் தில்லையிலன்றி வேறு எவ்விடத்தும் இவன் அங்ஙனம் செய்ததாகத் தெரியவில்லை. எனவே, இவன் தில்லைச் சிற்றம்பலவாணரிடத்து ஈடுபாடு உடையவனாய், அப்பெருமான் எழுந்தருளியுள்ள கோயிலை மிகப்பெரிதாக அமைக்கக் கருதித் திருப்பணி தொடங்கியபோது, தில்லைக் கோவிந்தராசனை வழிபட்டுவந்த வைணவர்கள் அத்திருப்பணிக்கு முரண்பட்டு நின்றமையோடு தம்மாலியன்ற சில இடையூறுகளைச் செய்தும் இருக்கலாம். அதுபற்றிச் சினம்கொண்ட இவ்வேந்தன் அத்திருமால் மூர்த்தத்தைப் பெயர்த்துக் கடலில் போடச்செய்து, பிறகு தான் மேற்கொண்ட திருப்பணியை நிறைவேற்றியிருத்தல் வேண்டும். இவன் தில்லைத் திருப்பணி நிகழ்த்திய போது அதற்குத் திருமால் சமயத்தினர் செய்த இடையூறுகளை ஒரு பொருட்படுத்திக் கூற விரும்பாத ஆசிரியர் ஒட்டக்கூத்தர், இவன், மன்றிற்கு இடம்காணவேண்டித் திருமாலை அவருக்குரிய பழைய கடலுக்கே அனுப்பிவிட்டான் என்று தம் தக்கயாகப்பரணியில் (777) கூறியுள்ளார். பிற்காலத்தெழுந்த திவ்யசூரி சரிதம், கோயிலொழுகு முதலான சில வைணவ நூல்கள் இவன்புரிந்த இச்செயலை மிகைபடக் கூறி இவன்மீது அடாத பழிகளைச் சுமத்தியும் இவனைக் கிருமிகண்ட சோழன் என்று இழித்துரைத்தும் உள்ளன. அவையெல்லாம் வெறும் கற்பனைக் கதைகளேயன்றி வேறல்ல என்பது நுணுகி ஆராய்வார்க்குப் புலப்படாமற்போகாது. இவன் செயல்பற்றிச் சோழ இராச்சியத்தில் அமைதியின்மையும் கலகமும் யாண்டும் ஏற்படவில்லை; பொதுமக்கள் எல்லோரும் அமைதியாகவே இனிது வாழ்ந்து வந்தனர்; எனவே, அவர்கள் இதனை நாட்டிற்குத் தீங்குபயக்கும் கொடுஞ்செயலாகக் கருதவில்லையென்று தெரிகிறது. எனினும், பெருவேந்தனாகிய குலோத்துங்கன் இங்ஙனம் செய்தமைக்குத் தக்க காரணங்கள் இருப்பினும், இச்செயல் இவனது பெரும்புகழுக்குச் சிறிது இழுக்குண்டுபண்ணிவிட்டது என்பதில் ஐயமில்லை."—என்று எழுதப்பட்டுள்ளது. இதன் உண்மையை விரிவுக்கு அஞ்சாமல் விளக்கியருளவேணும்.

இக்கேள்விக்கு பதிலுரையை சரித்திரம் வல்ல அன்பர்கள் 15–1–78க்குள் எழுதியனுப்பினால், அவற்றில் சிறந்தவை அடுத்து வெளியிடப்படும்.

http://acharya.org

நமது அன்பர் நெல்லை அட்வகேட் ஸ்ரீ உ வே. பக்ஷிராஜய்யங்கார் ஸ்வாமி தமது கடிதத்தில். "மூதறிஞர் பி ஸ்ரீ. யின் / ஸ்ரீராமாநுஜர் புத்தகத்தில் பக்கம் 336 முதல் 349 வரையுள்ள பக்கங்களில் பண்டாரத்தாருக்கு விரிவாகப் பதிலுரைக்கப்பட்டுள்ளது." என்று எடுத்துக்காட்டியுள்ளார். வேறு யாரும் எழுதவில்லை. ஆகையால், திரு பி ஸ்ரீ ஆசார்யா அவர்கள் நடுநிலைநின்று எழுதியுள்ள ஆராய்ச்சியில் முக்கியமான பகுதிகளைக் கீழேகொடுத்து. அதன்கீழே நாம் சில வார்த்தைகளும் எழுதுகிறோம். இவ்விஷயம்பற்றி விரிவாக அறிய விரும்புவோர், சாகித்ய அகடமியின் பரிசுபெற்ற பி. ஸ்ரீ. யின் /' ஸ்ரீராமாநுஜர் ' நூலை வரவழைத்துப் படித்து அறியலாம். புத்தக விமர்சனம் / கீழே தரப்பெற்றுள்ளது.

சாகித்ய அகடமி பரிசுபெற்ற 'ஸ்ரீராமாநுஜர்' நூலில் பண்டாரத்தாரின் பொய்யாராய்ச்சிகளுக்கு, தற்போது நெல்லை மாவட்டம் விட்டலாபுரத்தில் வாழும் முதுபெரும் தமிழ் எழுத்தாளர் ஸ்ரீ.பி ஸ்ரீ. ஆசார்யா அவர்களுடைய மறுப்புரையின் முக்கியமான பகுதிகள்

"தில்லைத் திருமன்றில் முன்றில்—சிறுதெய்வத்
தொல்லைக் குறும்பு தொலைத் தெடுத்து..."

/ புத்தக விமர்சனம் — ஸ்ரீராமாநுஜர்

[ரு 10-00 விலையில்—"பாரி நிலையம்", 59, பிராட்வே, சென்னை-1" என்னும் பதிப்பகத்தாரிடம் கிடைக்கும்.]

சாகித்ய அகடமியின் பரிசுபெற்ற இந்நூல் — ஸ்ரீராமாநுஜரின் வாழ்க்கை வரலாற்றை ஆராய்ந்து அழகிய எளிய இனிய தமிழ்நடையில் முதுபெரும் எழுத்தாளரான பி ஸ்ரீ ஆசார்யா அவர்களால் எழுதப் பெற்றுள்ளது. வார்த்தாமாலை, வடிவழகியநம்பியின் குருபரம்பரைக் கவிதை நூல், பன்னீராயிரப்படி முதலான பழைய நூல்களில் 'உந்துமதகளிற்றன்' பாசுரம் விஷயமான ஐதிஹ்யம் திருக்கோட்டியூர் நம்பி திருமாளிகையில். அவர் குமாரத்தி தேவகிப் பிராட்டியார் விஷயமாக நடந்தது என்றிருப்பதற்கு முரணாக, மிகப் பிற்பட்டவரான திருப்பாவை மூவாயிரப்படியரும்பதவுரைகாரர் பெரிய நம்பி திருமாளிகையில் அத்துழாய் விஷயமாக நடந்ததாக எழுதியிருப்பதைத் தழுவியுள்ளது போன்ற ஒரு சில குறைகளிருந்த போதிலும், நடுநிலை நின்று ஆராய்ச்சி மனப்பான்மையுடன் கவிதையை ஒத்த வசன நடையில் எழுதப்பெற்றிருக்கும் இந்நூல் சமீபகாலத்தில் வெளிவந்துள்ள ஸ்ரீ ராமாநுஜர் வாழ்க்கை வரலாற்று நூல்களில் தலைசிறந்து விளங்குகிறது. படித்துப் பயன்பெறத்தக்க நூல்.

http://acharya.org

என்ற (ஒட்டக்கூத்தன்) வாக்கை முதல் முதல் கூர்ந்து பார்க்கலாம். இதில் 'தேவாதி தேவன்' என்று ஆழ்வார் போற்றியுள்ள தில்லைத்திருமால் 'சிறு தெய்வ'மாகக் குறிக்கப் பெற்றிருப்பதைக் காணலாம். இரண்டாம் குலோத்துங்கனின் சமயப்பற்றை வெளியிடுவதைக் காட்டிலும் சமய வெறியை வெளியிடுவதுதான் இந்த வாக்கு. ஸ்ரீவைஷ்ணவர்களின் குருபரம்பரைகள் இச்செயல் விஷயமாகக் குறிப்பிடுவதை இந்த வாக்கும் ஆதரிக்கிறது.

'குறும்பு அனைத்தும் முன்னர்க் கடல் அகழில் மூழ்குவித்த' என்ற ஒட்டக்கூத்தன் வாக்கும் மேலே சொன்னதை உறுதிப் படுத்துகிறது. இனி, திரு. பண்டாரத்தார் தக்கயாகப் பரணித் தாழிசை ஒன்றை ஆதாரமாகக் கொண்டுதான் தம் கருத்தை வெளியிட்டிருக்கிறாரோ என்று பார்க்கலாம். தக்கயாகப் பரணியில் 777-வது தாழிசையாக வருவது இது:

''முன்றில் கிடந்த கருங்கடல் போய்
முன்னைக் கடல்புகப் பின்னைத் தில்லை
மன்றிற்கு இடம் கண்ட கொண்டல்...''

இந்த வாக்கின் போக்கும், இரண்டாம் குலோத்துங்கனின் சமயப் பொறுமையுணர்வையோ, பரந்த மனப்பான்மையையோ காட்டுவதாக இல்லை. 'மன்றிற்கு இடம் கண்ட' என்று வருவதைக் கொண்டுதான் பண்டாரத்தார், தில்லைத் திருக்கோயிலில் நடராஜ சந்நிதிக்குப் போதுமான இடம் வேண்டும் என்ற நோக்கத்துடன் முற்றத்திலிருந்த திருமால்—மூர்த்தத்தைப் பெயர்த்தெடுத்தான் என்ற தம் கருத்தை வலியுறுத்தப் பார்க்கிறார். ஆனால் இந்தப் பொருளை இந்தத் தாழிசையில் தமிழறிஞர்கள் காண்பது சாத்தியமா?

'முன்றில் கிடந்த கருங்கடல்' என்பது, தில்லைத் திருமன்றத்தின் முற்றத்தில் சயனித்திருந்த திருமால் என்று பொருள் படும். 'கருங்கடல்' என்றால், கருநிறமுள்ள திருமால். 'திருமாலே! நீ முன்னாளில் கடலில் கிடந்தாய் (பள்ளி கொண்டிருந்தாய்); இப்போது எங்கள் கூத்தப்பெருமானின் முற்றத்தில் கிடக்கிறாய்; இனி நீ மறுபடியும் பழைய கடலுக்குப் போக வேண்டியதுதான்; அந்த அலைகடலில் சக்ரவர்த்தி

http://acharya.org

யாகிய நாம் கிடத்திவிடுவோம்!' என்று உள்ளத்திலே திட்டமிட்டுச் செய்தான் இரண்டாம் குலோத்துங்கன் என்பதுதான் தக்கயாகப் பரணித் தாழிசையின் முற்பாதிக்கு நேரான பொருளாகும். 'பின்னைத் தில்லை மன்றிற்கு இடம் கண்ட' தாகத்தான் ஒட்டக்கூத்தன் தன் பரணித் தாழிசையில் கூறியுள்ளான். தில்லைச் சிற்றம்பலமாகிய மன்றுக்கு இடம் காண்பதன்று முக்கிய நோக்கம். 'சிறு தெய்வத் தொல்லைக் குறும்பு' தொலைப்பதற்காகக் கடலில் மூழ்குவித்தான் குலோத்துங்கன் என்பதே இத்தாழிசைக்கும் உயர்நிலைச் செய்தியாக அமைந்திருக்கிறது.

'கி. பி. எட்டாம் நூற்றுண்டில் நந்திவர்ம பல்லவ மன்னனால் தில்லையம்பல முன்றிலில் நிறுவப்பெற்று அந்நாள்முதல் நிலைபெற்றிருந்த திருமால் மூர்த்தத்தைக் கடலில் எறிந்த இவன் செயல், வைணவர்களின் உள்ளத்தைப் பெரிதும் புண்படுத்தி விட்டது. அதுபற்றி வைணவ சமயத்தினர் எல்லாரும் இவனுக்குப் பகைஞர் ஆயினர் எனலாம்' என்று வரலாற்றுப் பெரும்புலவரான பண்டாரத்தாரே கூறியிருப்பதும் கவனிக்கத் தக்கது. ஆனால் இந்த ஆராய்ச்சிப் புலவர், 'இவன் (இரண்டாம் குலோத்துங்கன்) தில்லைச் சிற்றம்பலவாணனிடத்து ஈடுபாடு உடையவனாய் அப்பெருமான் எழுந்தருளியுள்ள கோயிலை மிகப் பெரிதாக அமைக்கக் கருதித் திருப்பணி தொடங்கியபோது, தில்லைக் கோவிந்தராசரை வழிபட்டுவந்த வைணவர்கள் அத்திருப்பணிக்கு முரண்பட்டு நின்றமையோடு தம்மால் இயன்ற சில இடையூறுகளைச் செய்தும் இருக்கலாம். அதுபற்றிச் சினங்கொண்ட இவ்வேந்தன் அத்திருமால் மூர்த்தத்தைப் பெயர்த்துக் கடலில் போடச்செய்து பிறகு தான் மேற்கொண்ட திருப்பணியை நிறைவேற்றியிருத்தல் வேண்டும்' என்று ஊகஞ்செய்திருப்பதற்குத் துளியும் சான்று கிடைக்கவில்லை; வரலாற்றிலோ இலக்கியத்திலோ அகச்சான்றுமில்லை, புறச்சான்றுமில்லை.

இந்த வரலாற்றுப் பேராசிரியரின் ஊகம் சரியாக இருக்க வேண்டுமென்றால், ஒட்டக்கூத்தன் குறிப்பாகவோ வெளிப்படையாகவோ இது குறித்தும் சொல்லியிருக்கலாமே — ஏன் சொல்லவில்லை? இதற்கும் சமாதானம் சொல்லுகிறார் அறிஞர்

http://acharya.org

பண்டாரத்தார்: 'இவன் தில்லைத் திருப்பணி நிகழ்த்தியபோது, அதற்குத் திருமால் சமயத்தினர் செய்த இடையூறுகளை ஒரு பொருட்படுத்திக் கூற விரும்பவில்லை ஒட்டக்கூத்தன்' என்கிறார். 'மன்றிற்கு இடம் காணவேண்டித் திருமாலை அவருக்கு உரிய பழைய கடலுக்கே அனுப்பிவிட்டான் என்று தம் தக்கயாகப் பரணியில் கூறியுள்ளனர்' என்று திரு. பண்டாரத்தார் கூறியிருப்பதிலேயே இரண்டாம் குலோத்துங்கனின் வைஷ்ணவ வெறுப்புக்குத்தான் சான்று கிடைத்தது.

'பிற்காலத்து எழுந்த திவ்யசூரி சரிதம், கோயிலொழுகு முதலான சில வைணவ நூல்கள் இவன் புரிந்த இச்செயலை மிகைபடக்கூறி இவன்மீது அடாத பழிகளைச் சுமத்தியும், இவனைக் கிருமிகண்ட சோழன் என்று இழித்துரைத்தும் உள்ளன. அவையெல்லாம் வெறுங் கற்பனைக் கதைகளே யன்றி வேறல்ல என்பது நுணுகி ஆராய்வார்க்குப் புலப்படாமற் போகாது' என்று, திரு. பண்டாரத்தார் துணிந்து கூறியிருப்பது ஆச்சரியமாகவேயிருக்கிறது. பொதுவாக இந்த நூல்களில் காணப்படும் ஐதிகங்களை ஆராய்ச்சியாளர் பலரும் சரித்திர அடிப்படை வாய்ந்தவை என்று ஒப்புக்கொள்கிறார்கள். மேலும், கிருமிகண்ட சோழன் என்று குருபரம்பரைகளும் வேறு வைஷ்ணவ நூல்களும் குறிப்பிடுவது இரண்டாம் குலோத்துங்கனை அல்ல, முதலாம் குலோத்துங்கனைத்தான் என்பதை நாம் நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும்.

'இவன் செயல்பற்றிச் சோழ இராச்சியத்தில் அமைதி யின்மையும் கலகமும் யாண்டும் ஏற்படவில்லை; பொது மக்கள் எல்லோரும் அமைதியாகவே இனிது வாழ்ந்துவந்தனர்; எனவே அவர்கள் இதனை நாட்டிற்குத் தீங்கு பயக்கும் கொடுஞ்செயலாகக் கருதவில்லை என்று தெரிகிறது' என்று இந்த வரலாற்றுப் புலவர் கூறி நம்மைத் திடுக்கிடச்செய்கிறார். படையெடுத்து வந்த புறச்சமயிகளே செய்வதுபோன்ற ஒரு கொடுஞ்செயலை இரண்டாம் குலோத்துங்கன் செய் திருந்தும், ஒரு வரலாற்றுப் பெருநூலில் ஒரு வரலாற்றுப் பெரும் புலவர் 'சமாதானம்' கூறப்பார்ப்பது ஆராய்ச்சி மனப்பான்மையைக் காட்டுவதாகத் தோன்றவில்லை. இதை

http://acharya.org

இவரே ஓரளவு உணர்ந்திருக்கவேண்டும் என்பதற்கு இவரது பின் வரும் வாக்கியமே சான்றாகும்: 'பெருவேந்தனாகிய குலோத்துங்கன் இங்ஙனம் செய்தமைக்குத் தக்க காரணங்கள் இருப்பினும் இச்செயல் இவனது பெரும்புகழுக்குச் சிறிது இழுக்கு உண்டு பண்ணிவிட்டது என்பதில் ஐயமில்லை.'—(பிற்காலச் சோழர் சரித்திரம் இரண்டாம் பகுதி, பக்கம் 96.)

[ஸ்ரீராமாநுஜர் நூலில் (இரண்டாம் குலோத்துங்கன்பற்றிய) 342–345 வரையுள்ள பகுதிகள் இதுவரை கொடுக்கப்பட்டன. 348,349 பக்கங்களில் முதல் குலோத்துங்கனை கிருமிகண்டன் பற்றி எழுதப்பெற்றிருப்பவை பின்வருமாறு:–]

எனினும், குருபரம்பரைகளும் பிற வைஷ்ணவ நூல்களும் ஒருமுகமாகக் கூறும் அடக்குமுறைச் செய்தியை மறுப்பதற்குரிய ஆதாரம் ஒன்றும் மேலே சொன்ன செய்திகளில் நமக்குக் கிடைக்கவில்லை. பொதுவாக வைஷ்ணவம் உள்ளிட்ட பல சமயங்களையும் அரசாங்கக் கொள்கையை முன்னிட்டு இந்த அரசன் ஆதரித்துவந்தபோதிலும், ராமாநுஜரின் புதுமைப் பேரியக்கத்தால் ஆபத்து வந்துவிடுமோ என்று அஞ்சி அடக்குமுறைக் கொடுஞ்செயல் ஒன்றில் இவன் தலையிட்டிருக்கவும் கூடுமே. இவன் நேராகத் தலையிடவில்லை என்பதற்கு ஆதாரம் கிடைத்தாலும்கூட, இவன் ஆட்சிக் காலத்தில் கூரேசனும் பெரியநம்பியும் கண், உயிர் இழக்க நேர்ந்த கொடுஞ்செயல் நிகழ்ந்திருக்கவேண்டும் என்பது திண்ணம். எப்படியும் இச்செயலுக்குக் காரணமான அரசனை 'அணிமிடறு புழுத்தான்' என்று 'திருவரங்க நாயகர் ஊசல்' என்ற நூல் குறிப்பிடுவதையும் காண்கிறோம்: இது திவ்யகவி பிள்ளைப் பெருமாளையங்காரின் அஷ்டப்பிரபந்தங்களில் ஒன்று. இக் கவிஞர், கூரேசனின் புதல்வரான பட்டரின் சீடர்களில் ஒருவர்.

முதலாம் குலோத்துங்கனைக் காட்டிலும் இரண்டாம் குலோத்துங்கன் ஸ்ரீவைஷ்ணவத்தை வெறுத்தான் என்பது வெளிப்படை. வைணவத்தை வெறுத்த இவ்வரசன். கோவிந்தராசர் உருவச்சிலையைக் கடலில் எறிந்ததாகக் கூறப்படுகிறது.

http://acharya.org

வைணவ இலக்கியம் கூறும் "கிருமிகண்ட சோழன்" இவனே என்று 'சிலர் கருதுவர்' என்று அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீடாக வந்திருக்கும் 'இந்திய வரலாறு; கி. பி. 1200 வரை' என்ற நூல் கூறுகிறது. ஆனால் கிருமிகண்ட சோழன் முதற்குலோத்துங்கன்தான் என்பதற்கே சான்றுகள் கிடைக்கின்றன. [ஸ்ரீராமாநுஜர் நூல் பக்கம் 348, 349]

23-ம் கேள்விக்கு ஸுதர்சனர் பதில்

கி. பி. 1070முதல் கி. பி. 1118வரை ஆண்டுவந்த முதல் குலோத்துங்கனே கிருமிகண்டன் என்பதையும், கோவிந்தராஜரின் மூலவிக்ரஹத்தைக் கடலில் இட்டவன் 1133 முதல் ஆட்சி செலுத்திய இராண்டாங்குலோத்துங்கனே என்பதையும் ஸ்ரீ. பி. ஸ்ரீ. ஆசார்யா தெளிவுபடுத்தியுள்ளார். பக்கம் 349ல் "115வயதுக்கு மேற்பட்ட ஸ்ரீராமாநுஜர் தாமே நேரில் போய்த் திருமலையின் அடிவாரத்தில் கோவிந்தராஜரின் திருவுருவைப் பிரதிஷ்டை செய்தார் என்று கருதுவது பொருந்துமா?" என்று பி. ஸ்ரீ ஐயமுறுகிறார். யதிராஜ வைபவத்தில் 107-வது ச்லோகத்தில் 'எம்பெருமானார் தமது கடைசிக்காலத்தில் கோவிந்தராஜ ப்ரதிஷ்டையைச் செய்தார்' என்று எம்பெருமானாருடைய ப்ரியசிஷ்யரான வடுகநம்பி அருளியுள்ளதால் இதில் ஐயமுற இடமில்லை. நிற்க. யதிராஜவைபவமும், திவ்யசூரிசரிதமும் எம்பெருமானார் காலத்திலேயே எழுந்தவை. கோவிலொழுகும் அவர்காலத்தில் எழுதத்தொடங்கப்பெற்றது. பட்டர் சிஷ்யரான பிள்ளைப்பெருமாளையங்கார் எம்பெருமானாருக்கு மிக சமீபகாலத்தில் இருந்தவர். ஆறுயிரப்படி குருபரம்பரையும் எம்பெருமானாருக்கு 100 வருஷத்திற்குள் எழுதப்பெற்றது. அதற்கும் முற்பட்ட ஈட்டில் "நண்ணா அசுரர்" [திருவாய் 10-7-5] என்னும் பாசுர வ்யாக்யானத்தில் கிருமிகண்டனுடைய அடாதசெயல்கள்பற்றி நம்பிள்ளையே குறித்துள்ளார். இப்படி இவ்வளவுபேரும் குறித்துள்ள விஷயம் பண்டாரத்தார் கூறுவதுபோல் பொய்யாயிருந்தால் அதை அக்காலத்தில் எவராவது மறுத்திருக்கவேண்டுமே. அப்படி எவரும் மறுக்காததிலிருந்தே இது அசைக்கமுடியாத வரலாற்று உண்மை என நடுநிலையாளர்க்கு நன்கு விளங்கும்.

http://acharya.org

24. ஷை 261-ஆம் பக்கத்தில், "இராமானுசர் தமிழ்நாட்டைத் துறந்து, மைசூர் நாட்டிற்குப்போய்த் தங்க நேர்ந்தது என்றும், அந்நாட்களில் *அவர்செய்த மாரண மந்திரத்தினால் அவ்வரசன் இறந்தனன்* என்றும், வைணவர் அவனையே கிருமிகண்ட சோழன் என்பர் என்றும் திவ்யசூரி சரிதம், யதிராஜ வைபவம், இராமானுசாசார்ய திவ்யசரிதை ஆகிய வைணவ நூல்கள் கூறுகின்றன. அன்றியும், அவன் வைணவர்கட்கு இன்னல் இழைத்தமை பற்றிச் *சோழர் மரபையே ஒழித்து அழித்துவிடுவதாகத் திருவாரூர்த் தியாகராசப் பெருமான் உரைத்தருளினர்* என்றும் அத்திவ்யசூரி சரிதம் உணர்த்துகின்றது."—என்று *காணப்படுகிறது. கிருமி கண்டனின் அழிவுக்காக பகவத்ராமாநுஜர் "மாரண மந்திரம்" ஜபித்தார் என்பது உண்மையா? "திருவாரூர் தியாகராசப் பெருமான்" பற்றித் திவ்யசூரி சரிதம் குறிப்பிடுகிறதா? உடையவர் மைசூருக்கு எழுந்தருளும்போது அவர் வயது என்ன? ஸ்ரீரங்கம் திரும்பும்போது அவர் வயது என்ன?*

க்ருமிகண்ட₃ன்பற்றிய செய்தி தி₃வ்யஸூரி சரிதத்தில் பதினெட்டாவது ஸர்க்க₃த்தில் உள்ளது. அதில் 83-வது ஶ்லோகத்தில்,

'சாரோக்தம் ஶ்ருதிபி₄து₃ரம் நிஶம்ய வ்ருத்தம்
ஶோகாந்தே₄ா யதிதிலகோ ருஷாऽர்க்₄யகாலே।
த₃த்தார்க்₄யோऽதி₄கமபி₄ வேங்கடேந்து₃ சோள-
ஸ்யாரேபே₂ ப்ரளயக்ருதே விநாऽபி₄சாரம்॥'

[ஒற்றர் மூலமாக (கூரத்தாழ்வான் கண்ணிழந்தது, பெரியநம்பி உயிர் இழந்தது முதலான) செவியைப்பிளக்கும் செய்தியைக் கேட்டு ஶோகத்தினால் மயங்கியவராய், (ஸந்த்₄யாவந்த₃னத்தில்) அர்க்₄யம் அளிக்கும்போது, அபி₄சார யாக₃மில்லாமலே சோழனை அழிப்பதற்காக, திருவேங்கடமுடையானைக் குறித்து அதி₄கமாக ஓர் அர்க்₄யம் அளிக்கத்தொடங்கினார்] என்று ஸ்ரீராமாநுஜர் செய்த கார்யமும், 84-வது ஶ்லோகத்தில்,

'த்யாகே₃ஶ: புரஜிது₃பேந்த்₃ரப₄க்தமுக்₃ய:
சோளேஶாந்வயவஸு₃தா₄தி₄பத்யமுத்₃ராம்!

http://acharya.org

அத்₁யாத₃ாமிதி கமட₂ாலயே ஶரீரம்
வாக்₃பே₄ரீம் முக₂ரயதி ஸ்ம கே₃ாபுராக்₃ரே ||'

[புரமெரித்தவரும், விஷ்ணுப₄க்தர்களில் தலைவருமான தியாக₃ ராஜன் (தன் கோவில்) கே₃ாபுரத்தின் முன் உள்ள கமட₂ாலயம் என்னும் குளத்தில் 'சோழர்குலத்திற்குரிய சக்ரவர்த்தி முத்₃ரையை இன்று எடுத்துக்கொண்டேன்' என்று அஶரீரி வாக்கை முழங்கினார்.] என்று திருவாரூர்த் தியாகராஜன் செய்த முழக்கமும், 85-வது ஶ்லோகத்தில்

"ஸ்ரீராமாநுஜ விபு₃த₄ாக்₃ர்யசோதி₃த: ஸந்
ப்ரஹ்லாதே₃ாத்ஸுகங்ருஹரிர் யதா₂ ஹிரண்யம் |
வ்யாத₄ க்ஷிதிபதிமாயுதே₄ந கண்டே₂
நித்₃ராணம் நிஶி நிஶிதேந வேங்கடேஶ: ||"

[அறிவாளிகளில் தலைவரான ஸ்ரீராமாநுஜரால் தூண்டப்பட்ட திருவேங்கடமுடையான், ப்ரஹ்லாத₃னிடம் அன்புடைய நரசிங்கன் ஹிரண்யனைக் கிழித்ததுபோல், இரவில் சோழராஜா தூங்கும்போது அவனது கழுத்தில் கூரான தன் ஆயுத₄த்தினால் கீறினான்.] என்று திருவேங்கடமுடையான் அளித்த தண்டனையும் காட்டப்பட்டன. இதிலிருந்து ஸ்ரீராமாநுஜர் திருவேங்கடமுடையானைக் குறித்து அர்க்₄யமளிப்பதன்மூலம் பிரார்த்தித்தாரேயொழிய மாரணமந்திரம் எதுவும் ஜபிக்கவில்லை என்றும், திருவாரூர்ச் சிவன் தான்கொடுத்த சக்ரவர்த்தி முத்₃ரையைத் திருப்பிப்பெற்றுக்கொண்டாரேயொழிய பண்டாரத்தார் கூறுவதுபோல் சொல்லவில்லை என்றும் விளங்குகிறது. 86-வது ஶ்லோகத்தில் அரசன் கழுத்து புழுத்ததும், க்ருமிகண்ட₂ன் என்று அவனுக்குப் பெயர் ஏற்பட்டதும் கூறப்பட்டது. 'ஸ்ரீராமாநுஜர்' நூலில், பக்கம் 147-ல் ஸ்ரீராமாநுஜர் கி. பி. 1096-ம் ஆண்டை ஒட்டி மைசூருக்குச் சென்றதாகக் கூறுகிறார் பி. ஸ்ரீ. மற்ற பல ஆராய்ச்சியாளர்களும் ஏறக்குறைய இதே காலத்தைக் கூறுகிறார்கள். ஆகையால் உடையவர் மைசூருக்கு எழுந்தருளும்போது அவருக்கு சுமார் 80 திருநக்ஷத்திரங்கள் ஆகியிருக்கவேண்டும். கி. பி. 1118-ல் க்ருமிகண்ட₂ன் இறந்தபின் எம்பெருமானார் தமது 101-வது திருநக்ஷத்திரத்தின்போது ஸ்ரீரங்கம் திரும்பியிருக்க வேண்டும் என்றும் ஆராய்ச்சியாளர்கள் அறுதியிடுகிறார்கள்.

http://acharya.org

வித்வான் துரைதிருவேங்கடம் B. Lit., திருநாகேச்வரம்
(25 to 28 கேள்விகள்)

25. (1) "கண்ணபிரான் காலத்தில் கோபிகாஸ்த்ரீகள் மார்கழி மாதந்தோறும் பிரார்த்தனை செய்துவந்ததாக வரலாறு கூறுகிறது. அக்காலத்தில் அதிகாலையில் எழுந்து நீராடி பார்வதியை வழிபட்டு நல்ல கணவனை அடையவேண்டும் என்று பிரார்த்தனை செய்துவரவேண்டும் என்பதற்காக நடக்கும் பூஜையாகும்" என்றும், *(2)* "முன் காலத்தில் கிராமங்களில் எல்லாக்கோவிலின் ஒரு பகுதியில் பெருமாளும் மறுபுறம் சிவனையும் வைத்து வழிபடுவர். இதற்குத்தான் அக்ரஹாரம் என்று பெயர்; அக்ரஹாரம் என்பதன் உட்பொருள் சிவனும் பெருமாளும் என்பதாகும். இதைத்தான் தற்காலத்தில் பொருளை மாற்றி அந்தணர் அதிகம் வாழும் பகுதிக்கு அக்ரஹாரம் என்று தவருக அழைக்கின்றனர்." என்றும், *(3)* "இந்து சமயத்தின் ஒரு பகுதி சைவம். மறுபகுதி வைணவம். ஒரு மனிதனுக்கு எப்படி இரண்டு கண்கள் இரண்டு காதுகள் இரண்டு கைகள்போன்று எல்லாம் இரண்டிரண்டு தேவையோ அதுபோல இந்து சமயத்தின் இரு பிரிவுகளே சைவமும் வைணவமும்." என்றும், *(4)* "சைவ வைணவ வழிபாடுகள் வேறுபட்டவை. அவை இரண்டும் ஒன்ருகமுடியாது. இருப்பினும் துவேஷம் இல்லாமல் வழிபடவேண்டும்" என்றும் காஞ்சீ சின்னவர் திண்டுக்கல்லில் (ஜனவரி 27) பேசியதாக தினமணியில் செய்திகள் வந்திருக்கின்றன. அவைபற்றிய உண்மைகள் என்னென்ன?

(1) கோபிகா ஸ்த்ரீகள் கண்ணபிரானை அடைவதற்காகக் காத்யாயநீவ்ரதம் அநுஷ்டித்ததாகப் புராணங்களில் உள்ளது. 'இது எம்பெருமானை வழியல்லாத வழியிலாகிலும் முயன்று பெற்றுவிடவேண்டும் என்னும் ப்ராப்ய த்வரையாலே கலங்கிச் செய்வதாகையாலே சிறப்புற்றதே' என்று நம் ஆசார்யர்கள் நிர்வஹித்துள்ளனர். ஆண்டாள் நாச்சியார் திருமொழியில் முதல் பதிகத்தில் காமனை ஆச்ரயித்ததும் இத்தகையதே. இதனால் அற்பபலனைக் கொடுக்கக்கூடியவள் என்னும் பெருமை பார்வதிக்குத் தேறுமேயொழியப் பரத்வம் தேருதே. இவ்வற்பபலன்களைக் கொடுக்கும் சக்தியும் எம்

http://acharya.org

பெருமான் கொடுத்த வரத்தினாலேயே மற்ற தெய்வங்களுக்கு ஏற்பட்டன என்று ஸகல ஶாஸ்த்ரங்களும் முழங்குவதைக் காண மனமில்லாதவர்கள் இது கொண்டு திருப்தியடைகிறார்கள்! அடையட்டுமே!

(2) "முன்காலத்தில் எல்லாக் கோவிலிலும் ஒரு பகுதியில் பெருமாளும் மறுபுறம் சிவனையும் வைத்து வழிபடுவர்' என்பது முழுப்பொய். 'அக்₃ரஹாரம்' எனும் பெயரே இதை விளக்கும். ஹரியின் கோயிலும், ஹரனின் கோயிலும் ஹாரங்கள் எனப்படுபவை. இரு அக்₃ரத்திலும் (முனைகளிலும்) ஹாரங்களை உடையது அக்₃ரஹாரம் எனப்பட்டது. ஆனால், அக்₃ரஹாரத்தில் ஹரியின் கோயில் எப்படி அமைந்திருக்கிறது. ஹரனின் கோவில் எப்படி அமைந்திருக்கிறது என்பதைக் காணவேணும். ஹரியின் கோயில் மேல்திசையில் அக்₃ரஹாரத்திற்கு நடுநாயகமாய், அக்₃ரஹாரத்திற்கு ஹரிவீக்ஷணம் அமையும்படி கட்டப்பெற்றிருக்கும். ஹரனின் கோவில் ஈசான்ய (வடகிழக்கு) மூலையில், ஹரனின் பார்வை அக்₃ரஹாரத்தின் மேல் விழாபடி கட்டப்பட்டிருக்கும். இதிலிருந்து முன்னோர்கள் ஹரிக்கே ப்ராத₄ாந்யம் அளித்தார்கள் என்பது விளங்கும். க்₃ராமத்துக்கு வெளியிலேயே பிடாரி கோவில் கட்டப்பட்டிருக்கும். அந்தக் காளிக்குக் கூசாது பரத்வம் சொல்லுபவர்கள் நிறைந்திருக்கும் இக்காலத்தில், இவற்றை நாம் எடுத்துக்கூறினாலும் செவிடன் காதில் ஊதிய சங்கேயாகும்.

(3) நமது மதத்தின் இருபகுதிகள் வைஷ்ணவமும், சைவமும் என்பது உண்மையே. ஆனால், அவற்றை இரு கண்கள் முதலானவற்றுக்கு ஒப்பிடுவதைக் காட்டிலும், உயிராயிருப்பது வைஷ்ணவமென்றும், உடலாயிருப்பது சைவம் என்றும் ஒப்பிடுவதே நேர்மையாகும். ஆத்மஹிதமான மோக்ஷத்தை விரும்பும் நிவ்ருத்திபரர்களுக்காக ஏற்பட்டது வைஷ்ணவம். உடலைப்பூண்கட்டும் இவ்வுலகச்செல்வங்களை எப்படியாவது பெற்றுவிடவேண்டும் என விரும்பும் ப்ரவ்ருத்திபரர்களுக்காக ஏற்பட்டது சைவம். இது சாஸ்திரங்களையும், உலகநடைமுறையையும் நடுநிலை நின்று ஆராய்ந்தவர்களுக்கு எளிதில் விளங்கும். உயிருக்கு நன்மையை விரும்புகிறவர்களைக் காட்டிலும், உடலுக்கு நன்மையை விரும்புகிறவர்களே

http://acharya.org

மிகுதியாயிருக்கிருர்கள் என்னும் பொருத்தமும் உள்ளது. உயிர் பகுதியற்ற ஒரே பொருளாயிருப்பதுபோல், வைணவம் விஷ்ணு ஒருவனுக்கே பரத்வம் கூறுகிறது. உடல் பல பகுதிகளாயிருப்பதுபோலே, சைவம்—சிவன், சக்தி, க₃ணபதி, முருகன் முதலான பலர்க்குப் பரத்வங்கூறும் பகுதிகளாகப் பிரிந்து நிற்கிறது.

(4) "சைவ வைணவ வழிபாடுகள் வேறுபட்டவை. இரண்டும் ஒன்ருகமுடியாது. இருப்பினும் துவேஷமில்லாமல் வழிபடவேண்டும்" என்பது நேர்மையான வார்த்தையே. இதன்படி பார்க்கும்போது, இதைக்கூறியவர் விஷ்ணுகோவில்களில் விஷ்ணுவை தூ₃ஷிக்கும் திருவெம்பாவை மாநாடுகளைப் புகுத்தாமல் வழிபடவேண்டும் என அவர் வார்த்தையிலிருந்தே விளங்கும். இதன்படி அவர் ஒழுகுகிருரா என்பதை நடுநிலையாளர்கள் கவனிக்கவேண்டும்.

26. வேதத்தில் தள்ளவேண்டிய பகுதிகளும் உண்டு என்று காஞ்சீ பெரியவர் கூறியுள்ளதாக சமீப "இதயம் பேசுகிறது" என்ற வார இதழில் ஒரு குறிப்பு கூறுகிறதே!

வேத₃த்தில் மோக்ஷஸாத₄னத்தை விளக்கும் பகுதிகளும் உண்டு. க்ஷுத்₃ர ப₂லன்களை அளிக்கும் ஸாத₄னங்களை விளக்கும் பகுதிகளும் உண்டு. இதில் ஒவ்வொருவர்க்கு ஒரு பகுதி கொள்ளத்தக்கதாகவும், மற்ற பகுதி வேண்டாததாகவும் உள்ளது. இதைச் சொல்லியிருந்தால் குற்றமில்லை. பே₄த₃ ஶ்ருதிகள் தள்ளத்தக்கவை; அபே₄த₃ஶ்ருதிகள் கொள்ளத்தக்கவை என்னும் பொருளில் கூறியிருந்தால் இது தவறு. "எல்லா ஶ்ருதிகளுமே கொள்ளத்தக்கவை; பே₄த₃ ஶ்ருதிகளுக்கும், அபே₄த₃ஶ்ருதிகளுக்கும் மேலெழத்தோன்றும் முரண்பாட்டை க₄டகஶ்ருதிகளைக்கொண்டு போக்கலாம்" என்று எம்பெருமானுர் தம் கிரந்தங்களில் நிலைநாட்டினுர்.

27. நவக்கிரஹங்கள் இருக்குமிடம் சிவன்கோவில். எனவே சிவன்தான் முழுமுதற்கடவுள் என்கின்றனரே!

ஶ்ருதிஸ்ம்ருதி இதிஹாஸ ஸாத்விகபுராணங்களைக்கொண்டு, சிவனுக்குப் பரத்வத்தை ஸாதி₄க்க இயலாமையாலே, இத்தகைய

http://acharya.org

அசட்டுவாதங்களைக்கொண்டு சிவபரத்வம் ஸாதி₄க்க முயல்கிருர்கள்போலும்! நவக்கிரஹங்கள் சிவன் கோவிலிலேயே யிருப்பது — சைவம் உடலுக்கு உறுதியைத்தேடும் மதம் என்பதையே வலியுறுத்துகிறது.

28. தசாவதாரங்களை காலக்கிரமமாகவோ சம்பிரதாயக் கிரமமாகவோ தெரிவிக்கவேண்டும். திருப்பராய்த்துறை ஸ்ரீராமகிருஷ்ண தபோவனத்தின் சென்ற மார்கழி மாத தர்ம சக்கர இதழின் அட்டையில் தசாவதாரங்கள் குறிக்கப்பட்டுள்ளன. அதில் புத்தர் இடம் பெற்றிருக்கிருர். பலராமரைக் காணவில்லை. இதுபற்றிய உண்மைக் கருத்து என்ன?

(1) மத்ஸ்யம் (மீன்), (2) கூர்மம் (ஆமை), (3) வராஹம், (4)நரஸிம்ஹம் என்னும் நாலும் க்ருதயுக₃த்திலும், (5)வாமனன் (த்ரிவிக்ரமன்), (6) பரசுராமன், (7) ராமன் என்னும் மூன்றும் த்ரேதாயுக₃த்திலும், (8) ப₃லராமன், (9) க்ருஷ்ணன் என்னும் இரண்டும் த்₃வாபரயுக₃த்திலும்,(10)கல்கியவதாரம் கலியுக₃த்தின் கடைசியிலும் ஏற்படும் அவதாரங்கள் என்பதே ஆழ்வார்களும், ஆசார்யர்களும், பெரும்பாலான இதிஹாஸபுராணங்களும் ஆத₃ரித்த த₃ஶாவதாரமாகும். சில புராணங்களில் ப₃லராமனை விட்டு பு₃த்₃த₄ரைச் சேர்த்து த₃ஶாவதாரக்கணக்கு சொல்லப்பட்டிருக்கிறது. அஸுரர்களை மயக்கி அழிப்பதாகிற து₃ஷ்ட நிக்₃ரஹத்தைச் செய்வதற்காக எம்பெருமான் பு₃த்₃த₄ாவதாரமெடுத்தான் என்று "கள்ளவேடத்தைக் கொண்டுபோய்ப் புரம் புக்கவாறும்"[திருவாய்5-10-4] என்னும் பாசுரத்தில் நம்மாழ்வார் காட்டிஞர்.

N. வேங்கடபதி, கூடுவாஞ்சேரி.

29. திருமாலின் சக்கரத்தைப் பிள்ளையார் விழுங்கியதாகவும், தோப்பிக்கரணம் போட்டுப் பெற்றதாகவும் காமகோடி கதையளந்திருப்பது இதயம் பத்திரிகையில் உள்ளது. இதன் ஸ்வரூபத்தை விளக்கவும்.

இந்த அண்டப்புளுகுக்கதை ஏற்கனவே கல்கியில் வந்து ஸுத₃ர்ஶனப்ரயோக₃ம் பெற்றுமடிந்தது. கல்கி காலக₃தியான பிறகு புல்லுருவிபோல் முளைத்திருக்கும் இதயம் பத்திரிகையில் மறுபடி வருகிறது. செத்தபாம்பை மறுபடி அடிப்பார்களோ?

http://acharya.org

ஸ்ரீ T. ஸ்ரீநிவாஸராகவன், அட்வகேட், மதுரை.
V. K. வீரராகவரெட்டி, தாம்பரம் முதலான பலர்.

30. 29-வது கேள்விக்கு பதில் ஏற்கனவே ஸுதர்சனத்தில் வெளிவந்துள்ளது என எழுதியுள்ளீர்கள். அப்போது வாசகரா யில்லாத எங்களுக்கு மறுமுறை அச்சிடவேண்டுகிறோம்.

பதின்மூன்று வருஷங்களுக்கு முன் ஸுதர்சனம் சோதி 17, ஒளி-12 (எண் 204) 'பொய் கூறி மதம் மாற்றும் மடமைத் தொழில் புரியும் கல்கியின் மமதை மாறுமா?'' என்னும் தலைப்புள்ள தலையங்கத்தில் ஒரு பகுதியாக வெளிவந்திருக்கும் இவ்விஷயத்தை அன்பர்களின் விருப்பத்தையொட்டி வெளியிடுகிறோம்:—

''வைஷ்ணவர்களைப் புண்படுத்தவேண்டும்; பாமர வைஷ்ணவர் களை மதம் மாற்றவேண்டும்'' என்னும் கருத்தையே கொண்டு அண்டப் புளுகுகளும், ஆகாசப் பொய்களும் நிறைந்த கந்த புராணக் கட்டுக் கதைகளை வெளியிடத்தொடங்கியுள்ளது கல்கி. 16—12—64 இதழில் வெளிவந்திருக்கும் ஒரு கதையைப் பாருங்கள். ''தட்ச யக்ஞத்தை அழிக்கச் சென்ற வீரபத்திரர் மீது திருமால் சக்ராயுதத்தை ஏவினார். அதனை வீரபத்திரர் அணிந்திருந்த வெண்தலை (கபாலம்) ஒன்று கவ்விக்கொண்டது. அதனைத் திரும்பப் பெறும்பொருட்டுத் திருமாலின் சேனைத்தலைவர் விஷ்வக்ஸேனர் வீரபத்திரர் முன் விகடக்கூத்தாடினார். அதுகண்டு அனைவரும் சிரித்தார்கள். (கபால) மாலையில் இருந்த வெண்டலையும் சிரித்தது அப்போது அதன் வாயிலிருந்த சக்ராயுதம் வெளியே வந்தது; அதை விஷ்வக்ஸேநர் எடுப்பதற்கு முன் விநாயகப் பெருமான் எடுத்து மறைத்து வைத்துக்கொண்டார். விஷ்வக்ஸேநர் மீண்டும் ஒருமுறை விநாயகப் பெருமானுடைய திருமுன் விகடக் கூத்தாடி அவரை மகிழ்வித்து, அவரிடமிருந்து சக்கரத்தை வாங்கித் திருமாலிடம் தந்தார்.'' என்னும் சிறு பிள்ளைகளும் வெறுக்கக் கூடிய கதையை வெட்கமில்லாமல் வெளியிடுகிறது கல்கி. இத்தகைய கதைகளால் தெய்வங்களிடமும், மதங்களிடமும் ஜனங்களுக்கு வெறுப்பு ஏற்பட்டு நாஸ்திகமே வளரும். தெய்வங்களே சிறுபிள்ளைத்தனமாக நடந்து கொள்ளும்போது நாமும் அப்படி நடந்தால் என்ன என்று தான் பாமரஜனங்கள் நினைப்பார்கள். இத்தகைய கதைகளை லட்சக் கணக்கான ஜனங்கள் படிக்கும் பத்திரிகையில் வெளியிடுவது என்ன மடமை!

வைஷ்ணவர்களுக்கு ஒரு வார்த்தை. கல்கியைப் போன்ற பத்திரிகைகள், தங்களுக்கு ஆள்பலம் இருக்கிறது என்னும் மமதையாலே

http://acharya.org

இத்தகைய பொய்ப் பிரசாரங்களைச் செய்துகொண்டுதானிருக்கும். அவற்றை நாம் லட்சியம் செய்யவேண்டாம். நம் சமூகத்தில் மத விஷயங்களைக் கற்காமலிருக்கும் மக்களிடம் சென்று, 'இத்தகைய பிரசாரங்களை நம்பாதீர்கள்' என்று அறிவுறுத்தவேண்டியது மத ஞானமுள்ள வைஷ்ணவன் ஒவ்வொருவனுக்கும் கடமையாகும். ஆயிரக்கணக்கான பக்கங்களில் விஷ்ணுசித்த விஜயம் முதலான நூல்களில் இவர்களுடைய பொய்ப்பிரசாரங்களுக்கெல்லாம் எளிய தமிழில் பதிலுரைத்து வருகிறோம் நாம். இவற்றை வைஷ்ணவர்கள் அனைவர்க்கும் எட்டச் செய்யவேண்டியதுதான் வைஷ்ணவன் என்று பெருமை கொள்ளும் ஒவ்வொருவனுக்கும் தலையான கடமை என்று உணர்த்தி நிற்கின்றோம்.

வித்வான் துரை திருவேங்கடம், திருநாகேச்வரம்.

31. (1) வாரியார் 12—3—78 முதல் திருச்சி வானொலி நிலையத்தில் வில்லிபாரதச் சொற்பொழிவு நிகழ்த்தினார். தொடக்கவுரையிலேயே "இதிகாசங்கள் மூன்று—(1) சிவரகசியம், (2) இராமாயணம், (3) மகாபாரதம் என்று முழுப்பொய்யில் மூழ்கி எழுந்திருக்கிறார். ஏழு நாட்களிலும் கண்ணனுக்குக் கௌபீநம் நழுவிய கதை போன்ற பல பொய்க்கதைகளை அள்ளி வீசியிருக்கிறார். "முதன் முதல் புல்லாங்குழல் வாசித்தவர் முருகன்; கண்ணன் முந்தாநாள் வந்தவர்" என்று புளுகுகிறார். (2) பங்குனி மாத ஸ்ரீராமகிருஷ்ண விஜயத்தில் வாரியார் "சிவராத்திரி" என்னும் கட்டுரையில் அடிமுடிதேடிய கதையை எழுதி, "நதிகளில் சிறந்தது கங்கை; விண்மீன்களில் சிறந்தது கதிர்; மரங்களில் சிறந்தது கற்பகம்; தேவர்களிற்சிறந்தவர் திருமால்; பசுக்களில் சிறந்தது காமதேனு; யானைகளில் சிறந்தது ஐராவதம்; மலர்களில் சிறந்தது தாமரை; புதல்வர்களில் சிறந்தவர் குமரக்கடவுள்; மலைகளில் சிறந்தது இமயம்; இப்படியே விரதங்களில் சிறந்தது சிவராத்திரி" என்று குறிப்பிடுகிறார். (3) "கயிலாயவாசியின் சிரத்திலிருந்து இறங்கி, உலகளந்தவனின் பாதத்தைத் தழுவும் கங்கை" என காமகோடிச் சின்னவர் தென்காசியில் பேசியிருக்கிறார். பாகவதம் முதலான ஸாத்விக புராணங்களில் உலகளந்தவனின் திருவடி விளக்கிய நீரான கங்கையைச் சிவன் தாங்கியதாகவுள்ளதற்கு முரண்படுகிறது இது. இப்படி—ப்ரஸித்₃த₄ நூல்களுக்கு முரணாகவும், தம் பேச்சிலேயே முன்னுக்குப் பின் முரணாகவும் புளுகு புராணங்களைப் பிரசாரம் செய்யும் இவர்கள் திறத்தில் ஸ்ரீவைஷ்ணவர்கள் நடந்து கொள்ளவேண்டிய முறை என்ன?

http://acharya.org

ஸ்ரீராமதாஸ T. N. கிருஷ்ணமாச்சாரி, வள்ளியூர்.

32. (1) "இதயம்" பத்திரிகையில் "தேவிதரிசனம்" (அபிராம வல்லி) என்னும் தொடரில் "பொன் பாஸ்கரத் தொண்டமான்" என்பவர் பல புளுகு புராணக்கதைகளை அடுக்குகிறாரே. நாம் என் செய்வது ?

(2) 1978 மார்ச் (பிங்கள பங்குனி) கலைமகள் இதழில் பெரிய காமகோடி பீடாதிபதி பின்வருமாறு பேசியதாக வெளிவந்துள்ளது:

(1) புருஷர்களுக்குக் கழுத்தில் ஓர் எலும்பு நீட்டிக்கொண்டிருக்கும். பகவான் விஷத்தைச் சாப்பிட்ட காலத்தில் கழுத்தில் உருண்டையாகத் தங்கிவிட்டது. அதைப்போன்று நமக்கும் இருக்கிறது. புருஷர்கள் எல்லாம் சிவாம்சம், ஸ்திரீகள் சக்தியம்சம் என்று சொல்வது உண்டு. பரமேசுவரன் காலகூட விஷபட்சணம் செய்த காலத்திலிருந்து, தான் ஸர்வாத்மகன் என்பதைக் காட்ட - புருஷர்களுடைய கழுத்திலும் இப்படி ஓர் உருண்டை நிற்க ஆரம்பித்து விட்டது.

(2) பிட்டுக்கு மண்சுமந்த கதையிலே...பகவான் சர்வாத்மகன்... பாண்டியன் ஸ்வாமியைப் பிரம்பால் அடிக்க, ஸர்வலோகங்களில் உள்ளவர்களின் மீதும் பிரம்படி பட்டதாம். எல்லோரும் பிரமித்துப் போய் நிற்க, பார்வதி பரமேசுவரர்கள் தரிசனம் கொடுத்தார்கள்.

(3) பரமேசுவரன் கழுத்திலே ஆலம் உருண்டை நின்றதனால் தான் சிவாம்சமாக விளங்குகிற புருஷர்கள் அத்தனைபேர் கழுத்திலும் ஓர் எலும்பு உருண்டைபோல் நிற்கிறது. கிறிஸ்துவர்கள் "ஆடம்ஸ் ஆப்பில்" என்று இதைச் சொல்கிறார்கள். புருஷர்களுக்கு மட்டும்...கண்டத்தில் இருக்கிறது. அந்த எலும்பு இல்லாதவர்கள் ஸ்திரீகள், அவர்கள் சக்தியம்சம்.

இதுபோலவே மற்றும் பல அன்பர்கள் வானொலி, பொதுஜன தினசரி, மாத, வாரப்பத்திரிகைகளில் இடைவிடாது விஷ்ணுத்வேஷ விஷத்தைக் கக்கிவரும் பொய்ப்பிரசாரங்களைப்பற்றிக் கேள்வி கேட்கிறார்கள். "விஷ்ணுப₄க்தியுள்ளவர்கள் தை₃வப்ரக்ருதிகள்; விஷ்ணுத்₃வேஷமுள்ளவர்கள் ஆஸுரப்ரக்ருதிகள்" என்பது கீ₃தை முதலான ஸகல ஸாத்விக ஶாஸ்த்ரங்களும் கண்ட முடிவு. ஆகையால், ஆஸுரப்ரக்ருதிகளின் விஷ்ணு த்₃வேஷப் பிதற்றல்களுக்கு தை₃வப்ரக்ருதிகளான நாம் அதிக முக்கியத்துவம் கொடுக்காமல், நம் சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கு 'இவை பொய்க்கதைகள்' என்பதை உணர்த்தி வந்தால் போதுமானது. நாம் இவற்றைக் கண்டித்து எவ்வளவு எழுதினாலும், 'அஸுரராக்ஷஸப₃லம் இருக்

http://acharya.org

கிறது' என்னும் ஆணவத்தாலே அவர்கள் மேன்மேலும் இத்தகைய பொய்களையே அடுக்கிக்கொண்டு போகிறுர்கள். அவைகளைப் பார்க்கும்போதே விவேகிகளுக்கு 'இவை எத்தனை அபத்தமானவை' என்பது விளங்கும். உதாரணமாக, ஆண்களில் பலருக்குக் கழுத்தில் உருண்டை இல்லை. பெண்களில் பல கிழவிகளுக்கு இருக்கிறது. கழுத்தில் உள்ள சதையைப் பொருத்துக் குரல்வளை சிலர்க்குத் தெரிந்தும், சிலர்க்குத் தெரியாமலுமுள்ளது. "அந்தர் பஹிஸ்ச தத் ஸர்வம் வ்யாப்ய நாராயண: ஸ்தித:" முதலான வேத வேதாந்தங்களையும், ஸ்ம்ருதீதிஹாஸங்களையுங்கொண்டு விஷ்ணு சித்தவிஜயத்தில் நாம் நிலைநாட்டியிருப்பதையும். "சாதிமத ஆராய்ச்சி" "சங்கரரும் வைணவமும்" முதலானவற்றில் வைஷ்ணவமே அநாதிஸித்த வைதிகமதம் என்று கையிலங்கு கனியாகக் காட்டியிருப்பதையும் ப்ரசாரம் செய்வதொன்றே இத்தகைய அபத்தவாதங்களை அடக்கப் பரிஹாரம். நாராயணனுடைய ஸர்வாத்மகத்வத்தை விளக்கும் நரஸிம்ஹாவதார வ்ருத்தாந்தம் முதலானவை வேதவேதாந்தங்களிலும், சங்கவிலக்கியங்கள் போன்ற ப்ராசீநக்ரந்தங்களிலும் எடுக்கப்பட்டிருப்பதுபோலே 'பிட்டுக்கு மண்சுமந்த கதை' எடுக்கப்படவில்லை என்று ஸாமாந்யஜநங்களுக்கு எடுத்துக் கூறவேண்டும். அஸுர ராக்ஷஸ பலமுள்ள பத்திரிகைகள், வானொலி முதலானவற்றின் பொய்ப்பிரசாரங்களுக்கிடையே நமது உண்மைப் பிரசாரம் சிறிது சிறிதாக வெற்றிகண்டே வருகிறது என்று அன்பர்கள் பலர் அவ்வப்போது நேரிலும், கடிதங்கள் மூலமாகவும் நமக்கு உணர்த்தி வருகிறுர்கள். அவ்வப்போது இக்கடிதங்கள் பலவற்றை வெளியிட்டுமிருக்கிறோம். சமீபத்தில் திருநெல்வேலி மாவட்டம் விஜயநாராயணத்தில் சைவகுலத்தைச் சேர்ந்த "சண்முகசுந்தரத்தேவர்" என்னும் நேர்மையாளர் ஒருவர் எழுதியிருக்கும் கடிதங்களில் பின்வரும் பகுதிகளைப் பார்ப்பவர்களுக்கு இவ்வுண்மை விளங்கும். ஆகையால், நமது விஷ்ணுசித்தவிஜயம், சாதிமத ஆராய்ச்சி, சங்கரரும் வைணவமும், ஸுதர்சனர்பதில் முதலான நூல்களை தெய்வநம்பிக்கையும், பகுத்தறிவும் உள்ளவர்களிடம் பிரசாரம் செய்வதொன்றே வலிதான பொய்ப்பிரசாரங்களை முறியடிக்கச் சிறந்த வழியாகும்.

சண்முகசுந்தரத்தேவரின் கடிதங்களிலிருந்து சில பகுதிகள்:—

முதல் கடிதம்

அடியேன் சுவாமிகளின் "சங்கரரும் வைணவமும்" எனும் புத்தகத்தைப் பார்த்த பிறகு ஸ்ரீ விஷ்ணுவே பரம்பொருள் என்று

http://acharya.org

டுணர்ந்தேன். பாசண்ட சமயங்களில் இதுநாள்வரை வீணுகக் காலத்தைக் கழித்தேன். தங்களுடைய மற்ற புத்தகங்களைப் படிக்க மிகவும் ஆவலுடையவனுய் உள்ளேன். கிருபைகூர்ந்து "ஸ்ரீவிஷ்ணு சித்த விஜயம்" இரண்டு பாகமும், "சாதிமத ஆராய்ச்சி" என்ற புத்தகமும் V. P. P. யில் ஏதாவது ஓர் சகாயம் செய்து மலிவு விலையில் அருளவும், அருளினுல் அடியேன் பாக்கியம் பெற்றவன் ஆவேன். தங்களுடைய ஸுதர்சன பத்திரிகையை திரு. மாடசாமி யிடமிருந்து படிக்கும் பாக்கியமும் சென்ற மாதத்திலிருந்து பெற்றேன். அதுவும் எம்பெருமானுர் திருவுள்ளமே. தங்களுடைய அனைத்துப் புத்தகமும் படிக்கும் அவா உடையேன். எப்படியாவது முயன்று படித்துவிடுவேன்.

இரண்டாம் கடிதம் 6—2—78

சுவாமிகளுடைய ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனத்தையும், "சங்கரரும் வைணவமும்" என்ற புத்தகத்தையும் பிறவிப்பயனுல் படிக்கும் பேறு பெற்றேன். பாத்மபுராணத்தில் சிவன்-பார்வதி உரையாடல்களையும் பிற விஷயங்களையும் அதில் உணர்ந்தேன். பிறவிச் சைவனுன அடியேன் பாஷண்ட மார்க்கத்தைப் பின்பற்றி என வாழ்வின் பெரும் பகுதியை அழித்துவிட்டதற்கு வருந்துகிறேன். தங்கள் புத்தகங்களைப் படித்த பிறகு ஸ்ரீவைணவ சமயத்தை அறியத் துடிக்கிறேன். ஸ்ரீமந் நாராயணன் எனக்கு அருளுவானு ? என ஏங்குகிறேன். தங்களுடைய புத்தகங்களை மேலும் படித்துப் பயன்பெற அடியேன் விரும்புகிறேன். ஆனுல் அதற்கு உரிய பொருள் வசதி இல்லை. பரம ஏழையான அடியேனை ரட்சிக்கத் தங்களுடைய பதிப்புக்களை ஏதாவது ஒரு சலுகை செய்து தரும்படி வேண்டுகிறேன். பாதிவிலைக்கோ அல்லது படித்து விட்டுத் திருப்பி அனுப்புவதற்கோ, அல்லது குறைந்த விலைக்கோ அடியேனுக்குக் கிருபைகூர்ந்து அருளும்படி வேண்டுகிறேன். ஸ்ரீவிஷ்ணுசித்தவிஜயம், சாதிமத ஆராய்ச்சி, ஸ்ரீ விசிஷ்டாத்வைத விஜயம், பகவத்விஷயம், ஆழ்வார் அருளிச்செயல்களையும் படிக்க ஆவலுடையேன். அடியேன் மீது கிருபைகூர்ந்து அருளவும்.

மூன்ரும் கடிதம் 25—2—78

தாங்கள் அடியேன்மீது கிருபை கூர்ந்து அருளிய புத்தகங்கள் கிடைக்கப்பெற்றேன். ஸ்ரீ விஷ்ணுசித்தவிஜயத்தின் பெருமை என்னுல் எழுதமுடியாதபடி கடல்போல் கரைகடந்தது. எத்தனைகோடிரூபாய்

[இவர் விலாசம்:- சு. சண்முகசுந்தரத்தேவர், சிவன்கோவில் தெரு, வடக்கு விஜயநாராயணம் P. O. நாங்குனேரி வட்டம், நெல்லை மாவட்டம்.]

http://acharya.org

கொடுத்தாலும் அதற்குத் தரும்.' ஆதித்தமிழனின் சமயம் ஸ்ரீவைஷ்ண வமே' என்பதை சாதிமத ஆராய்ச்சியில் உள்ளங்கை நெல்லிக்கனி யாக ஆக்கிவிட்டீர்கள். எங்கள் ஊரில் "ஸ்ரீ விஷ்ணுசித்தவிஜய சங்கம்" என்று நிறுவ முயல்கின்றேன். சங்கம் அமைத்ததும் சுவாமிகட்குத் தெரிவிக்கின்றோம். ஆசி அருளவேண்டுகிறேன்.

நாலாம் கடிதம் 13—3—78

நீங்கள் முன்பு அனுப்பிய புத்தகங்களைப் பல சைவ அன்பர் களுக்குப் படிக்கக்கொடுத்தேன். பலர் புகழ்ந்தார்கள். ஸ்ரீமந் நாராயணனே பரம்பொருள் என்பதைப் பலர் ஒப்புக்கொண்டார்கள்.

K. வரததேசிகன், அட்வகேட், விழுப்புரம் (33 to 36) கேள்விகள்,

33. ஸ்ரீமத் பாகவதத்தில் காணப்பெறும் ப்ரஹ்லாத சரித்திரத்தில், பிராட்டி ந்ருஸிம்ஹருடைய உருவத்தைக் கண்டு அஞ்சி அருகில் செல்லாமல், அவரின் கோபத்தைப் குறைக்கப் பிரஹ்லாதனையே நேரில் அணுகிப் பிரார்த்திக்கும்படி கூறினாள் என அறிகிறோம். இதனால் பிராட்டியின் புருஷகாரத்வம் தலையெடுக்காமல் குலைந்தது என்று ஏற்படுகிறதா? அல்லது பிராட்டிக்குப் புருஷகாரத்வமே இல்லை என்று ஏற்படுகிறதா? அங்கு புருஷகாரத்வம் தோன்றாததன் காரணம் என்ன?

பாகவதாபசாரத்தாலே, புருஷகாரபூதையான பிராட்டியும் பயப்படும்படியான சீற்றத்தை உடையவனானன் நரசிங்கன் என்றும். சில சமயங்களில் புருஷகாரத்தையும் எதிர்பாராத ஸ்வாதந்த்ரியத்தை உடையவன் எம்பெருமான் என்றும் இதிலிருந்து விளங்குகிறது. புருஷகாரத்தை முன்னிடுமவர்களுக்கே எம்பெருமான் அருள்புரிவான் என்பது பொதுவிதி (rule). எம்பெருமான் தன் ஸ்வாதந்த்ர்யத்தாலே விதிவிலக்காகச் சிலரைத் தான் நேரிலேயே ஏற்றுக் கொள்வதும் உண்டு. "நாஹம் புருஷகாரேண ந சாப்யந்யேந ஹேதுநா। கேவலம் ஸ்வேச்சயைவாஹம் ப்ரேக்ஷே கஞ்சித் கதாசந॥" [நான் புருஷ காரத்தினாலோ, வேறு காரணத்தினாலோ அடையத்தக்கவனல்லன். எனது நிர்ஹேதுக கிருபையினாலேயே எப்போதாவது எவனையாவது கடாக்ஷிக்கிறேன்] என்னும் வசநம் இவ்விதிவிலக்கைத் தெரிவிக்கிறது.

34. எல்லோரும் கேள்வி கேட்கிறார்கள். ஸுதர்ஶனர் பதில் சொல்லுகிறார். ஏற்கனவே ஒரு ஆழ்வார் கேள்விகேட்டு பதில்சொல்லாமல் விட்டுவிட்டார். அவ்வாழ்வார் யார்? அவர் கேள்விகேட்ட பாசுரம் எது? அதற்கு ஸுதர்ஶனர் பதில் என்ன?

ஆழ்வார்கள் எம்பெருமானைப் பல கேள்விகள் கேட்டுள்ளனர். அவற்றில்—பொய்கையாழ்வார் அருளியதான,

வரத்தால் வலிநினைந்து மாதவ! நின்பாதம்
சிரத்தால் வணங்கானுமென்றே—உரத்தினால்
ஈரரியாய் நேர்வலியோனாய இரணியனை
ஓரரியாய் நீயிடந்த தூன்? [முதல்-திருவ 90]

எனும் பாசுரம் ஒன்று. இதற்கு எம்பெருமான் அருளியிருக்கக்கூடிய பதிலை

"யத₃பராத₄ஸஹஸ்ரமஜஸ்ரஜம்
த்வயி ஶரண்ய! ஹிரண்ய உபாவஹத்!
வரத₃! தேந சிரம் த்வமவிக்ரிய:
விக்ருதிமர்ப்ப₄கநிர்ப்ப₄ஜநாத₃கா₃:||" [வரத₃ராஜஸ்தவம் 68]

[ஶரணமடையத்தக்க வரத₃னே! ஹிரண்யகஶிபுவானவன் உன் விஷயத்தில் இடையறுது செய்துவந்த ஆயிரக்கணக்கான அபசாரங்களை நெடுநாள் பொறுத்துவந்த நீ, பிள்ளையான ப்ரஹ்லாத₃ாழ்வானுக்கு நேர்ந்த நலிவுகாரணமாகப் பெருஞ்சீற்றத்தை அடைந்தாயன்றோ] என்று கூரத்தாழ்வான் அருளியிருக்கிறார்.

35. ந்ருஸிம்ஹாவதாரத்தின் வெற்றி, அத்₃வைதத்தின் வெற்றியா? விசிஷ்டாத்₃வைதத்தின் வெற்றியா?

"நானே பரம்பொருள்" என்ற ஹிரண்யனின் படுதோல்வியைக் காட்டும் ந்ருஸிம்ஹாவதாரம், "ஜீவர்கள் எல்லாரும் பரம்பொருள்" என்னும் அத்₃வைதத்திற்கும் படுதோல்வியேயாகும். எம்பெருமான் ஸர்வவ்யாபி, ஸர்வஜ்ஞன், ஸர்வஶக்தன் என நிருபிக்கும் இவ்வவதாரம் விஶிஷ்டாத்₃வைத ஸ்ரீவைஷ்ணவ ஸித்₃த₄ாந்தத்தின் விஜயத்₄வஜமேயாகும்.

36. "ஸ்ரீவைஷ்ணவர்கள் ஆசாமிகளை 'ஸ்வாமி' 'ஸ்வாமி' என்று பரஸ்பரம் கூப்பிட்டுக்கொண்டு, தங்கள் ஸ்வாமியான மகாவிஷ்ணுவை 'பெரும் ஆள்' (பெருமாள்) என்றே கூப்பிடுகிறார்கள்" என்று காமகோடிப் பெரியவர் குறிப்பிட்டதாக நஜன் எழுதிய "ஏன் பள்ளிகொண்டீர்?" என்கிற புத்தகத்தில் 75ம் பக்கத்தில் கண்டுள்ளது. அதற்குத் தங்கள் சமாதானம் என்ன?

"பெருமாள்" என்பது 'ப்₃ரஹ்மம்' என்னும் வடசொல்லின் அழகிய தமிழ்வடிவம். ஜீவர்களையெல்லாம் 'ஸ்வாமி' 'ஸ்வாமி'

http://acharya.org

என்று கூப்பிட்டுக்கொண்டு, தம்மைப் 'பெரியவாள்' என்னும் அவச்சொல்லாலே தம் பக்தர்களை வழங்கச் செய்துவரும் காமகோடிக்குப் 'பெருமாள்' என்னும் அழகிய சொல் ருசிக்காதது வியப்பல்ல. அந்தச் சொல்லின் நயத்தைக் கண்டு முருகனுக்கும் அதை உபயோகப்படுத்தத் தொடங்கிய அருணகிரியையும் காமகோடி மறந்துவிட்டது விசித்திரமே.

R. விமலாதித்தன், ஸ்ரீரங்கம் (37, 38 கேள்விகள்)

37. (1) ப்ரஹ்லாதனுக்கு அருள்செய்ய நரஸிம்ஹமூர்த்தி அவதாரம் செய்தது ஸ்வாதிநக்ஷத்திரமாக இருக்க, பெரியாழ்வார் திருப்பல்லாண்டில் "திருவோணத் திருவிழவில் அந்தியம்போதில் அரியுருவாகி" என்பது முரண்பாடாக உள்ளதே? (2) ஸ்ரீகிருஷ்ணவதாரம் ரோஹிணீ நக்ஷத்திரமாயிருக்க, "நீ பிறந்த திருவோணமின்று" என்று அஸக்ருத் (பலவிடங்களில்) பெரியாழ்வார் அருளிச்செய்திருப்பதை எங்ஙனம் பொருந்த விடுவது?

அஸ்தாநே பயசங்கை (பயப்படவேண்டாத விஷயத்திலும் அபாயம் ஏற்படுமோ என்று பயப்படுகை) பெரியாழ்வாரின் இயல்பு. அதனால் "அவதாரநக்ஷத்ரம் வெளியில் தெரிந்தால் யாராவது அபிசாரயாகம் செய்துவிடுவார்கள்" என்று நக்ஷத்திரத்தை மாற்றிச்சொல்கிறார் என்பது பூர்வாசார்ய நிர்வாஹம். திருவோண நக்ஷத்ரம் விஷ்ணுவுக்குரியதுமாகும்.

38. குபேர புத்திரர்களான நளகூபரனும் மணிக்ரீவனும் நாரத சாபத்தாலே இரட்டை மருதமரமாகப் பிறந்ததாகப் புராணங்களில் உள்ளது. கம்ஸனின் அசுரர்கள் அந்த மரங்களானதாக இதிகாஸ புராணங்களில் இல்லையே. அப்படியிருக்க "பொய்ம் மாய மருதான அசுரரைப்பொன்றுவித்து இன்று நீ வந்தாய்" என்று பெரியாழ்வார் பாடியது முரண்பாடாக உள்ளதே?

இதிஹாஸபுராணங்களில் இல்லாவிடிலும், ஆழ்வார் அருளியதால் அஸுராவேசமும் உண்டென்று கொள்ளலாம். 'க்ருஷ்ணவதாரத்தில் முளைக்கும் பூண்டுகளெல்லாம் அஸுராவேசமுள்ளவை' என்பது ஆழ்வார்கள் திருவுள்ளமாகையாலே. அஸ்தாநே பயசங்கையாலே அருளினர் என்றும் கொள்ளலாம்.

http://acharya.org

V. கிருஷ்ணசாமி, டெக்னிஷியன், டெலிபோன்ஸ், திருச்சி-8.

39. அட்வகேட் ஸ்ரீ K. N. ஸ்ரீநிவாஸன் அவர்கள் மதுராந்தகருடைய "ஸ்ரீரங்க ஸ்ரீ விவேசனம்" என்னும் பொய்கள் நிறைந்த சுவடிக்கு ஆங்கிலத்தில் எழுதியிருக்கும் முன்னுரையைக் கண்டேன். ஸுதர்சனர் பதிலில் இரண்டாவது சதகத்தில் முதல் கேள்விக்குத் தாங்கள் பல ஆதாரங்கள்காட்டி எழுதியிருக்கும் ஏழு பக்கங்கொண்ட பதிலுக்குத்தக்க முறையில் பதிலளிக்கத் திறமையோ, தான் திருந்த நேர்மையோ இல்லாமையால், சம்பந்தமில்லாதபடி K. N. S. 7 வரிகள் எழுதியிருப்பதை விமர்சிக்கவேண்டுகிறேன்.

K. N. S. எழுதியிருக்கும் 7 வரிகளும் அவற்றின் தமிழ் மொழி பெயர்ப்பும் பின்வருமாறு:–

While I was getting amused at this, another piece of amusement appeared. An advocate who could command a press and journal of his own chose to criticise my study admitting that he had not gone through the book I had commented upon! What was worse, the advocate who had been a class-mate of mine and practising in the same courts as I do, disowned my acquaintence! He hurried to use his pen in preference to the telephone probably as the latter would cost him more! Blind religious beliefs were substituted by him for historical inquisity.

[நான் தத்வார்த்த நிருபணத்தைப் பார்த்து ஹாஸ்யச் சுவையை அநுபவித்துக் கொண்டிருக்கையில், ஹாஸ்யச் சுவையை விளைக்கும் மற்றொன்றும் வெளிவந்தது. தமக்கென ஒரு அச்சகமும், பத்திரிகையும் உடைய ஒரு அட்வகேட், எனது ஆராய்ச்சியை மறுக்க முற்பட்டார். ஆனால், அவர் நான் எந்த நூலைப்பற்றி ஆராயமுற்பட்டுள்ளேனோ, அந்த நூலைத் தான் பார்த்ததில்லை என்று ஒப்புக்கொள்கிறார்! இதைவிட வேடிக்கை என்னவென்றால், என்னோடு ஒரே வகுப்பில் படித்து, ஒரே நீதிமன்றங்களில் தொழில்புரிந்த அவர் என்னோடு பரிசயமில்லை என்றும் எழுதியிருக்கிறார்! தம்மிடம்

http://acharya.org

உள்ள டெலிபோனை உபயோகப்படுத்தாமல், அவசரமாகத் தமது பேனுவை உபயோகப்படுத்திவிட்டார் அவர். ஒரு வேளை டெலிபோனை உபயோகப் படுத்துவது தமக்கு அதிகச் செலவாகும் என்று கருதினார்போலும்! சரித்திர ஆராய்ச்சி மனப்பான்மைக்கு பதிலாகக் குருட்டுத்தனமான மத நம்பிக்கைகளைப் பற்றிக்கொண்டிருக்கிறார் அவர்.]

ஆரியர்களே! நடுநிலையாளர்களே! நீங்கள் அனைவரும் இந்த நூலில் முதல்கேள்விக்கு பதிலைப் பார்த்திருக்கிறீர்கள். அதில், "K. N. S. உடைய தகப்பனும், தமையனும் நமக்குச் சிறந்த நண்பர்கள். ஸ்ரீநிவாஸனோடும் நமக்குப் பரிசயம் உண்டு' என்று நாம் எழுதியிருக்கிறோம். அப்படியிருக்க, அவரோடு பரிசயமே இல்லை என்று நாம் எழுதியிருப்பதாக அப்பட்டமான பொய்யை எழுதியிருக்கிறார் இவர். இச்சிறு விஷயத்திலேயே இப்படிப் பொய்யெழுதுமிவர், ஸம்ப்ரதாய விஷயங்களில் எத்தகைய பொய்களை எழுதவும் ஆதரிக்கவும் துணிவார் என்பதை ஊகித்துக்கொள்ளலாம். பொய்யல்லது வேறு அறியாத * அஹோ நண்பருடைய அபத்த நூலுக்கு முகவுரை எழுத, உண்மையில் *அஹோசிஷ்யரான இவரே தகுதிபெற்றவர் என விளங்குகிறது.

நாம் Dr. ராமனுடைய நூலைப் பார்க்கவில்லையாகையால், அதுபற்றிய விமர்சனத்தில் இறங்கவில்லை என்பதையும், நாம் பார்க்கநேரிட்ட K. N. S. நூலில் நடுநிலைமை உள்ளதா இல்லையா என்பதுபற்றியே விமர்சிக்கப்போகிறோம் என்றும் நமது முதல் பதிலில் குறிப்பிட்டுள்ளோம். அதன்படி விமர்சித்து மஹாசார்யரான பெரியவாச்சான்பிள்ளைக்கு ஸ்ரீபாஷ்யம்

* ஸ்ரீவைஷ்ணவத்திற்கும், தேசிகன் முதலான எல்லாப் பூர்வாசார்யர்களுக்கும் "வரலாற்றில் பிறந்த வைணவம்" எனும் நூலெழுதி துரோகம் செய்து. அதனாலேயே "அஹோ" என்று பெயர்பெற்ற அக்நிஹோத்ரியை ஸம்ப்ரதாய விபாகமற எல்லா வித்வான்களும் கண்டித்திருக்க, அவரைக் கண்டிக்காததோடன்றியில் இன்றளவும் அவரோடு நட்புபூண்டிருக்கும் அவ்யபதேஶ்ய (பெயரிட்டுக் குறிக்கத்தகாத) வித்வான் அஹோ நண்பராவர். அந்த அஹோவிற்கு சிஷ்யராயிருந்து ஆராய்ச்சியெழுதியவராய், அஹோ நண்பருடைய அபத்தச்சுவடிக்கு முகவுரை எழுதிய K.N S. அஹோ சிஷ்யராவர்.

http://acharya.org

தெரியாதென எழுதும் இவருக்கு 'ஸ்ரீபாஷ்யமென்றால் என்ன? அதற்கு மூலமான ப்ரஹ்மஸூத்ரம் என்றால் என்ன?' என்பதே தெரியாது என்னும் விஷயத்தை, இவர் நூலில் ஸ்ரீபாஷ்யத்தைப் பற்றி எழுதியிருக்கும் வாக்கியங்களைக்கொண்டே நிலைநாட்டியிருக்கிறோம். இந்த நமது நிரூபணங்கள் வெளிவந்து ஏழு மாதங்கள் வரை வாய்மூடி மௌனியாயிருந்துவிட்டு. அவற்றை வாசகர்கள் மறந்திருப்பார்கள் என்னும் துணிவிலே, தம் அறியாமையை ஒப்புக்கொள்ளும் நேர்மையில்லாமல் சம்பந்தமில்லாத விஷயங்களை எழுதும் இவரது தன்மையை நடுநிலையாளர்கள் எளிதில் உணரலாம், 'வடக்குத்திருவீதிப் பிள்ளை நடாதூரம்மாளுடைய சிஷ்யர். அவர் நம்பிள்ளையின் குமாரர், அவரது குமாரர்களிருவரும் பெரியவாச்சான்பிள்ளையின் பேச்சைக் கேட்டுக்கொண்டு அவருக்கு த்ரோஹம் செய்துவிட்டார்கள். அதனால் அவர் அவர்களைக் கைவிட்டு அப்புள்ளாரின் குமாரரான ரங்கராஜரின்மூலம் தம் கொள்கைகளைப் பரப்பினார். எம்பெருமானாருக்குக் காஞ்சிவரதராஜப் பெருமாளோடு சம்பந்தம் கிடையாது" முதலான ஆதாரமற்ற அண்டப்புளுகுகளை அள்ளிவீசிவிட்டு, உபயஸம்ப்ரதாயத்திலுமுள்ள அறிவாளிகள் அனைவரும் அதைக்கண்டு கைகொட்டிச் சிரிப்பதைக் கண்டும் லஜ்ஜையில்லாமல் எழுதும் இவர், குருட்டுத்தனமான மதநம்பிக்கைகளைப் பற்றி நிற்பதாக நம்மைக்குறித்து எழுதுவது.

"பஶ்யதி பரேஷு தோஷாந்
அஸதோऽபி ஜந: ஸதோऽபி நைவ குணாந் ।
விபரீதமிதம் ஸ்வஸ்மிந்
மஹிமா மோஹாஞ்ஜநஸ்யைஷ: ॥"

[பாமரமனிதன் பிறரிடம் இல்லாத குற்றங்களைக் காண்கிறான்: இருக்கும் குணங்களை ஒருபோதும் காண்பதில்லை. தன் விஷயத்தில் இது நேர்மாறாயுள்ளது. (அதாவது இல்லாத குணங்களை இருப்பதாகக் காண்கிறான்; இருக்கும் குற்றங்களை ஒருபோதும் காண்பதில்லை.) இது மோஹம் (மயக்கம்) என்னும் மையின் மஹிமையாகும்.] என்னும் ஸ்ரீதேஶிகனுடைய ஸுபாஷிதநீவி ஸ்ரீஸூக்திக்கு இவரே முக்யலக்ஷ்யமானவர் எனக்காட்டுகிறது.

http://acharya.org

அன்பர்களே! நமது பதிலில் "இவரும் அக்₃நிஹோத்ரியும் சேர்ந்து இந்த வ்யாக்யானங்களை அலசி ஆராய்ந்து எந்தெந்த இடங்களில் ஆருயிரப்படியும், ஈடும் ஸ்ரீ ப₄ாஷ்யத்தை ஒட்டியிருக்கின்றன; இருபத்தினாலாயிரப்படி அதற்கு முரணாயிருக்கிறது என்பதைக் காட்டமுடியுமானால் காட்டி நமக்கு எழுதட்டும்; அதை நாமே நமது ஸுதர்சனத்தில் அச்சிட்டு, நமது விமர்ஶத்தையும் எழுதி நடுநிலையாளர்களின் தீர்ப்புக்கு விடுவோம்" என்பது நாம் இவருக்கு விடுத்திருக்கும் சவால். அந்தச் சவாலை ஏழேழு பிறவியெடுத்துத் தலைகீழ் நின்று தவம் புரிந்தாலும் இவராலோ, அக்₃நிஹோத்ரியாலோ நிறைவேற்ற இயலாதாகையால், நாடக விதூ₃ஷகனைப் போலே "ஒரே வகுப்பில் படித்தோம். ஒரே நீதிமன்றத்தில் தொழில் புரிந்தோம். அதிகச் செலவாகுமாகையால் (!) டெலிபோனை உபயோகிக்காமல் பேனாவை உபயோகப்படுத்திவிட்டார்" இத்யாதி₃களை எழுதி அறிவாளிகள் சிரிக்க நிற்கின்றார். நேர்மை சிறிதாவது இருந்தால், "Dr. ராமனுடைய நூலை விமர்சிக்கப் புகுந்த நான், அதற்குச் சம்பந்தமில்லாமல் நம்பிள்ளை, பெரியவாச்சான் பிள்ளை முதலான மஹாசார்யர்களுக்கு ஸ்ரீ ப₄ாஷ்யம் தெரியாது இத்யாதி₃களை எழுதியது மிகத்தவறு. அஹோ என்னை அப்படி எழுதும்படி செய்துவிட்டார். உண்மையில் எனக்கு ஸ்ரீப₄ாஷ்யமும் ப்₃ரஹ்மஸூத்ரமும் எதைப்பற்றியவை என்றே தெரியாது. மஹாசார்யர்களைக் குறித்து அஸஹ்யாபசாரமான வசைமொழிகள் என் பெயரால் வெளிவந்தது குறித்து வருந்துகிறேன்". என்று இவர் எழுதியிருக்கவேண்டும். நேர்மை அணுவளவும் இல்லாமையாலே, ஏழு பக்கங்கொண்ட நமது பதிலில் எதையும் தொடாமல், பொய்வார்த்தையும், சம்பந்த மற்ற (irrelevant) வாக்கியங்களுமாக ஏழு வரிகள் எழுதி பதில் எழுதிவிட்டதாக மனப்பால் குடிக்கும் இவரது பேதமையைக் கண்டு பேதையர்கூடக் கைகொட்டிச் சிரிப்பார்கள்.

நல்ல பரம்பரையில் தோன்றிய இவர், அஹோவைப் போன்ற து₃ஷ்டர்களின் ஸஹவாஸத்தால் அஸஹ்யாபசாரத்திலிழிந்து அழியாமலிருக்கவேண்டும் என்னும் நல்லெண்ணத்தாலேயே இவ்வளவும் எழுதப்பட்டது.

http://acharya.org

T. N. கிருஷ்ணமாச்சாரி, வள்ளியூர்.

40. "ஆனந்தவிகடன்" 6—8—78 இதழ் பக்கம் 79ல் சங்கரிபுத்திரன் என்பவர் எழுதியிருப்பது :-

"சைவ சமயமும் வைணவ சமயமும் ஒன்றுபட்டு இந்து மதம் சிறப்புறவேண்டும் என்ற நோக்கம் 'திருப்பாவை' இயற்றிய ஆண்டாளுக்கும் திருவெம்பாவை' இயற்றிய மாணிக்க வாசகருக்கும் இருந்திருக்கவேண்டும். திருப்பாவையில் முதற் பாட்டில் முதல்அடி 'மார்கழித்திங்கள்' இதில் மா என்ற முதல் எழுத்து மாணிக்கவாசகரைக் குறிப்பதாகக் கொள்ளலாம். திருவெம்பாவையில் முதற்பாட்டின் முதல்அடி 'ஆதியும் அந்தமும்'. இதில் ஆ என்ற முதல் எழுத்து ஆண்டாளைக் குறிப்பதாக வைத்துக்கொள்ளலாம். 'ஹரியும் ஹரனும் ஒன்று' என்ற கேள்விக்கு 'ஆமா" என்று இருவரும் ஆமோதித்திருக்கிறார்கள்." காசி விசுவநாதர் கோயிலில் முக்கூர் ஸ்ரீனிவாசாச்சாரியார் புராணச் சொற்பொழிவில் கூறியது இது. இதுபற்றி விமர்சிக்க வேண்டுகிறேன்.

இதைக் கூறியவர் காமகோடிப் பெரிய பீடாதி₄பதியின் அத்யந்தப₄க்தர். இவரிடமிருந்து இத்தகைய பிதற்றல்களைத் தவிர வேறு எதுவும் எதிர்பார்க்கமுடியாது. வருடந்தோறும் காமகோடிக் கூட்டத்தில் இரு பாவைகளையும் சேர்த்து, உபந்யஸித்து, இத்தகைய அப₃த்₃த₄ங்களைச் சொல்லிப் பணம் பெற்று ஜீவித்துவந்த இவர், இப்போது பீடாதி₄பதியின் ஆலோசனைப்படி அஷ்டலக்ஷ்மி கோயில்கட்டி பணக்கஷ்ட மில்லாமல் வாழ்ந்து வருகிறார். அவரிடம் நன்றிப்பெருக்கினால், இவர் வைஷ்ணவத்துக்கும், ஆழ்வார்களுக்கும், ஆசார்யர்களுக்கும் எந்த த்₃ரோஹத்தையும் செய்யத் தயங்கமாட்டார். "'வைஷ்ணவம் தான் உண்மையான மதம்' என்னும் நம்பிக்கை எனக்கு இல்லை" என்று ஒரு பத்திரிகையில் வெளியிட்டுக் கொண்ட வைஷ்ணவ த்₃ரோஹியான இவரிடம் வேறு எதை எதிர்பார்ப்பது? இத்தகைய செய்திகளை வெளியிடும் விகடன் போன்ற பத்திரிகைகள் மதத்துறையில் உண்மைக்கும், நேர்மைக்கும், த₄ர்மத்திற்கும், நியாயத்திற்கும் பெருத்த தீங்கு செய்துவருகின்றன. உண்மையான மத ஒற்றுமை ஏற்படு

http://acharya.org

வதைத் தடுக்கும் விரோதி,கள் இப்பத்திரிகைகளே சினிமாச் செய்திகளையும், அரைநிர்வாணப்படங்களையும், சோரம்போகும் கதைகளையும், காமகோடிபீடாதி,பதியின் படங்களையும் வெளியிட்டுப் பணம்பண்ணும் இவை மதத்துறையில் புகுந்து கருத்துக்கள் வெளியிடுவதற்கு எத்தகுதியும் அற்றவை.

V. ஸ்ரீநிவாஸன், திருச்சி-17.

41. 1978 ஆகஸ்டு கலைமகளில் காமகோடி பீடாதி,பதி (பெரியவர்) 'உமாமகேசுவரன்' என்னும் பெயர்தான் 'உம்மாச்சி' என்று குழந்தைகள் வாயில் வருகிறது என்றும், குழந்தைகள் பேச்சு எப்போதும் மாருமல் இருக்கும் என்றும், இதிலிருந்து உமாமகேசுவரன்தான் பரம்பரையாகக் குழந்தைகளின் குலதெய்வமாக இருந்து கொண்டிருக்கிருன் என்றும், எழுதியிருப்பதை விமர்சிக்க வேண்டுகிறேன்.

குழந்தைகள் எல்லாம் பரம்பொருளை 'உம்மாச்சி' என்று கூறுவதாகவும், அது குழந்தைகள் பாஷை என்றும் கூறுவதே அப,த்,த,ம். வடதேசக் குழந்தைகளும், வெளிநாட்டுக் குழந்தைகளும் 'உம்மாச்சி' என்று கூறுகிறதா? என்று பீடாதி,பதியிடம் கேட்டுப்பார்த்தால், அவர்'திருதிரு'வென்று விழிப்பது தவிர வேறு எதுவும் செய்யமுடியாது. மூத்திரத்தை மூச்சி என்றும், பாலைப் பாச்சி என்றும் பேசும் ரீதியில், 'ஒன் (உன்) பெருமாள்' என்று வைணவத் தாய் தந்தையர் சொல்லிக் கொடுத்தால் அவை 'ஒம்பாச்சி' என்று கூறும். சைவர்கள் 'உம்மாச்சி என்று சொல்லிக்கொடுத்தால் அவர்கள் குழந்தைகள் அப்படிக்கூறும். பிறமதக் குழந்தைகள் அவர்கள் தாய் தந்தையர் சொல்லிக்கொடுத்தபடி தம் மழலைச்சொல்லில் மாற்றிச்சொல்லும். விஷ்ணுபரத்வமே விளங்கிநிற்கும் ஶ்ருதி ஸ்ம்ருதிதிஹாஸ ஸாத்விக புராணங்களைக்கொண்டும், ஶாங்கர பா,ஷ்யங்களைக்கொண்டும் சிவபரத்வத்தை ஸ்த,ாபிக்கமுடியாமையினுல், இத்தகைய அசட்டு வாத,ங்களில் பீடாதிபதி ஈடுபடுகிருர். சில நூற்ருண்டுகளுக்குள் இட்டுக்கட்டப்பெற்று, ஆதிஶங்கரர் பெயரில் ஏறிடப்பெற்று, ப்ராசீனர் எவரும் கையாளாத துதிநூல்களைக்கொண்டு சிவபரத்வம் ஸ்த,ாபிக்க முயல்கிருர். 'ஐயோ பாவம்!' என்று இரங்கத்தக்கவர்.

http://acharya.org

S. வேங்கடம், சமயபுரம், (42.43 கேள்விகள்)

42. 'பரணீதரன்' என்பவர் 13–8–78 விகடனில் தமது 'கேரளவிஜயம்' கட்டுரையில் கேரளத்தில் பகவதி அம்மனுக்கு மாதவிடாய் உண்டாவதாக எழுதியிருக்கிருரே. இது உண்மையாயிருக்குமா ?

இது உண்மையா பொய்யா என்னும் விசாரம் ஒருபுறமிருக்கட்டும். இதிலிருந்தே தாங்கள் பராசக்தி என்று கொண்டாடும் தெய்வம் மாதவிலக்காகும் ஓர் கர்மவசப்பட்ட ஸ்த்ரீ என்று இவர்களே ஒப்புக்கொண்டதாக ஆகிறதே! 'இந்த தெய்வத்திற்குப் பரத்வம் கூறுவது எத்தனே மடமை!' என்று ஆலோசிக்கவேண்டாமா ?

43. 20–8–78 விகடனில் பரணீதரன்—திருவல்லவாழ், திருவாறன்விளை முதலான தி₃வ்யதே₃ஶங்களில் சில வருஷங்களாக விபூதிகொடுக்கப்படுவதாகவும், "திருவல்லவாழ் கோயிலில் பக்தர்களுக்கு விபூதி அளிக்கப்பட்டாலும், அர்ச்சகர்கள் அதை நெற்றியில் அணிவதற்கே அனுமதிக்கப்படுவதில்லை ; அப்படி யாராவது தவறி அணிந்துவிட்டால் அவர் உடனேயே ஸ்நாநம் செய்துவிடவேண்டும் ; இந்தப் பழக்கத்திற்கான காரணமும் விளங்காத புதிராக இருக்கிறது. இதைப்பற்றி நன்கு தெரிந்தவர்களிடமிருந்து தக்க விளக்கம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறேன்" என்றும் எழுதியிருக்கிருர். விளக்கம் அளிக்க வேண்டுகிறேன்.

ப்₃ராஹ்மணர்கள், அதிலும் குறிப்பாக விஷ்ணுவை ஆராதி₄ப்பவர்கள் ஊர்த்₄வபுண்ட்₃ரமே இடவேண்டும் என்றும், குறுக்குப் புண்ட்₃ரம் இடக்கூடாது என்றும், ப₄ஸ்மத்தைக் கையாலும் தொடக்கூடாது என்றும், தொட்டால் ஸ்நாநம் செய்யவேண்டும் என்றும் ஸ்ம்ருதிகளிலும், ஸாத்விகபுராணங்களிலும், வைஷ்ணவாக₃மங்களிலும் பலவிடங்களில் உள்ளது. விஷ்ணுசித்தவிஜயம் முதலான க்₃ரந்த₂ங்களில் நாம் எடுத்துக் காட்டிவருகிறோம். சிவன்கோவில்களில் விபூ₄தியும், விஷ்ணு கோவில்களில் ஊர்த்₄வபுண்ட்₃ரமும் த₄ரித்தே ஆராத₄னம் செய்யும் பழக்கம் உள்ள தமிழ்நாட்டில் பிறந்து வளர்ந்த ப₄ரணீத₄ரன் சாஸ்திரங்களை அறியவில்லையானுலும், தமிழ்

http://acharya.org

நாட்டுக் கோயில்களின் அநுஷ்டானத்தைக்கொண்டே இவ் விஷயத்தைத் தெரிந்துகொண்டிருக்கலாம். அவருடைய விபூதி பக்ஷபாதம் அவரைத் தெரிந்துகொள்ள விடவில்லை போலும்! சிவன்கோவில் குருக்கள் திருநாமம் தரித்து ஆராதித்தால் என்ன நடக்கும் என்பதையாவது சிந்தித்திருந்தால் புதிர் விடுபட்டிருக்கும்.

K. நாராயணன், திருச்சி-17 (44, 45 கேள்விகள்)

44. "கோகுலம்" என்ற சிறுவர் வாரப்பத்திரிகையின் 30—7—1978 இதழின் 3-ம் பக்கத்தில் "வஞ்சம் பேசேல்" என்ற ஆத்திசூடி விளக்கத்தில் சின்ன சங்கராசார்யர் ராமாயணத்தில் இராவணன் ராமர் வேடம் பூண்டு சீதையைக் கவர்ந்து சென்றதாகக் கூறப்பட்டதுபோலே சொல்லியுள்ளார். இது மாதிரி எந்த ராமாயணத்திலும் நான் படிக்கவில்லையே. இது உண்மையா!

ராவணன் ஸந்யாஸி வேடம்பூண்டு சீதையை அபஹரித்தான் என்றே ப்ரஸித்தமான எல்லா ராமாயணங்களிலும் உள்ளது. இதற்கு மாறாக ஓர் மடாதிபதி பொய்க்கதையெழுதுவதும், அதை ஓர் சிறுவர் பத்திரிகை வெளியிட்டுச் சிறுவர்களுடைய அறிவைக் கெடுப்பதும் நம் தமிழ்நாட்டிலேயே நடக்கக்கூடிய விசித்திரங்கள்.

45. 'இவ்வுடம்பு சாம்பலாகப் போகவேண்டியது' என்று அறிவுறுத்துவதற்காக சைவர்கள் உடம்பில் விபூதியைப் பூசிக்கொள்கிறார்கள்; 'இவ்வுடம்பு மண்ணாகப் போகவேண்டியது' என்று உணர்த்துவதற்காக வைஷ்ணவர்கள் உடம்பில் திருமண்ணை இட்டுக்கொள்கிறார்கள் என்று காமகோடி பீடாதிபதிகள் கூறுவதாகச் செய்திகள் வருகிறது. இது உண்மையா?

இவ்வுடம்பு சாம்பலாகவோ, மண்ணாகவோ போகிறது என்கிற அனைவருமறிந்த உண்மையை அறிவுறுத்துவதற்காக தினந்தோறும் உடம்பில் மந்திரம்சொல்லி சிவவிஷ்ணுசின்னங்களை அணியவேண்டிய அவச்யமில்லை. சைவர்கள் தாங்கள் சிவனடியார்கள் என்று காட்டிக்கொள்வதற்காக, சைவாகம புராணங்களில் சொல்லியபடி சிவ சின்னமான விபூதியை தரிக்கிறார்கள்; ஸ்ரீவைஷ்ணவர்கள் ச்ருதிஸ்ம்ருதிகளில் விதித்த

http://acharya.org

படி, தாங்கள் திருமாலடியார்கள் என்று விளங்குவதற்காக விஷ்ணுவின் திருவடி யுருவில் ஶுத்₃த₄மான வெள்ளைமண்ணு லும் ஸ்ரீதே₃வியைக்குறிக்கும் ஸ்ரீ சூர்ணத்தாலும் உடம்பில் இட்டுக் கொள்கிறார்கள் என்பதே உண்மை.

ஸ்ரீலோலன், திருவல்லிக்கேணி. (46 to 51 கேள்விகள்)

46. ஸ்ரீ வைஷ்ணவப் பெண்களுக்கு இருக்கவேண்டிய குண நலன்கள் என்னென்ன ?

ஸ்ரீ பராசர ப₄ட்டர் தமது ஸ்ரீ கு₃ணரத்னகோஶம் என்னும் லக்ஷ்மீஸ்துதி நூலில் (1) மென்மை (2) கணவனுக்கு அடங்கி நடக்கும் கற்புடைமை (3) கருணை (4) பொறுமை முதலான கு₃ணங்கள் பெண்களிடம் இருக்கவேண்டியவை என்றும், அவை ஸ்ரீ தே₃வியிடம் நிறைந்திருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார். இக்குணங்களை உடைய பெண்களை ஸ்ரீதே₃வியின் அம்ஶம் என்றே கொள்ளலாம்.

47. ஒரு ஸ்ரீ வைஷ்ணவனுடைய மனைவியானவள் தனது ஆசாரங்களாக நடைமுறையில் கொள்ளவேண்டியவை எவையெவை ?

(1) எம்பெருமானைத்தவிர மற்ற தெய்வங்களைத் தொழாமை (2) ஸ்ரீவைஷ்ணவப் பெண்களுக்குரிய முறையில் புடவையுடுப்பது, திருமண் ஸ்ரீசூர்ணங்கள் த₄ரித்துக்கொள்வது (3) ஸாத்விகாஹாரங்களையே சமைத்து எம்பெருமானுக்கு அமுது செய்வித்துக் குடும்பத்திற்குப் படைப்பது (4) பா₄க₃வதாராத₄னத்தில் ஊன்றியிருக்கை முதலானவை ஸ்ரீவைஷ்ணவஸ்த்ரீகளின் ஆசாரங்களாகும். பார்ப்பவர்கள் 'இவள் மஹாகாளியின் அம்ஶம்' என்று சொல்லாமல், 'மஹாலக்ஷ்மியின் அம்ஶம்' என்று சொல்லும்படி நடந்துகொள்வதே பெண்களுக்கு, குறிப்பாக ஸ்ரீவைஷ்ணவப் பெண்களுக்கு ஒழுக்கமாகும்.

48. "திருவேங்கடத்தான் குடியைக்கெடுத்தான்" "நடுத்தெரு நாராயணன்" போன்ற வாசகங்கள் வழக்கில் உள்ளனவே. இவை நம் வைஷ்ணவ சம்பிரதாயத்தை இழித்துரைப்பது போன்று உள்ளதே ! இவை எப்படி ஏற்பட்டன ?

இவையும், 'நாமம் போட்டுவிட்டான்' 'நூற்றுப்பதினொன்று' முதலான கேலிப்பேச்சுக்களும் நம்நாட்டில் பெரும்பான்மையினராயிருக்கும் அவைஷ்ணவர்களால் ஏற்படுத்தப்பட்ட வழக்குச் சொற்களாயிருக்கலாம். "நடுத்தெருவிலிருப்

http://acharya.org

பவனும் நாராயணனின் அம்ஶமே" என்னும் கருத்தில் 'நடுத் தெரு நாராயணன்" என்னும் வழக்கு ஏற்பட்டிருக்கலாம். எம்பெருமானை ஏழை பங்காளன், த₃ரித்₃ரநாராயணன் என்று வழங்குவதையும் காணலாம். "இளையவர்கட்கு அருளுடையாய்' [பெருமாள்திருமொழி 8-9] என்றார் குலசேகரரும்.

49. சில ஸ்ரீவைஷ்ணவ த்வேஷிகள் "குன்று உள்ள இட மெல்லாம் குமரனிருக்கும் இடம்" என்று சொல்லுகின்றனர். திருவேங்கடத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீநிவாஸனை வேங்கட சுப்ரமணியன் என்று கூறுகின்றனர். சிலர் சிவன் என்றும் கூறுகின்றனர். இதற்குத் தக்க பதிலுரை தரவேண்டுகிறேன்.

போ₄தா₄யந ஸூத்ரத்தைச் சேர்ந்தவர்கள் அநுஷ்டி₂க்கும் ஜயாதி₃ ஹோமத்தில் "*விஷ்ணு: பர்வதாநாம் அதி₄பதி:*" [விஷ்ணுவே பர்வதங்களுக்கு அதி₄பதி] என்னும் வேத₃ மந்திரம் ஒன்று எடுக்கப்பட்டுள்ளதைக் காணலாம். இதற்கு முரணாகவும், ப்ரமாணமில்லாமலும் முருகப₄க்தி வெறியினால் சிலர் கூறுவதும், திருவேங்கடமலையை ஆக்ரமிக்கப் பார்ப்பதும், இன்று மாத்திரமல்ல, எம்பெருமானார் காலத்திலேயே இருந்துவந்தது. எம்பெருமானார் ப்ரமாணங்களைக் கொண்டு திருவேங்கடவன் திருமாலே என்று நிலைநாட்டிய முறை— அவர் சிஷ்யர் அநந்தாழ்வானால் "வேங்கடாசல இதிஹாஸ மாலா' எனும் வடமொழி நூலில் விளக்கப்பட்டுள்ளது. சிலப்பதிகாரம் முதலான இலக்கிய ஆதாரங்களைக் காட்டி, 12—2—76 குமுதத்தில் கேள்வி பதிலில் நம்மாலும் நிலை நாட்டப்பட்டது. முருகப₄க்தி வெறியினால் சைவர்கள் அழகர் மலையை ஆக்ரமிக்க முயலும் அவலத்தையும் இன்று தமிழ் நாட்டில் காண்கிறோம். வெளியில் 'சமரசம்' பேசிக்கொண்டே வைஷ்ணவத்தை அழிக்கும் இதுபோன்ற கணக்கற்ற முயற்சிகள் தமிழ்நாட்டில் அரசாங்கம், பொதுஜனப் பத்திரிகைகள் ஆதரவுடன் நடந்துவருகின்றன. ஸாத்விகர்களான நாம் செய்வதறியாமல் நிற்கிறோம்.

50 'திருவல்லவாழ்" என்னும் திவ்யதேசத்தில் உள்ள எம்பெருமானை ஸ்ரீகிருஷ்ணன் ப்ரதிஷ்டை செய்துள்ளான் என்றும், விமானத்தின் பின்புறம் உள்ள சக்கரத்தாழ்வார் சன்னிதியில் விபூதி பிரசாதமாகக் கொடுக்கப்படுகின்றது என்றும் திவ்யதேச விவரணத்தில் அச்சிட்டுள்ளீர்கள். இதன் காரணமென்ன என்பதைக் கூறவும்.

http://acharya.org

20—8—78 விகடனில் "கேரள விஜயம்" கட்டுரையில் பரணீதரன் சில ஆண்டுகளாகவே கேரள விஷ்ணுகோயில்கள் சிலவற்றில் விபூதிகொடுக்கும் பழக்கம் ஏற்பட்டிருப்பதாக எழுதியிருக்கிறார். ஆழ்வார்கள் காலத்தில் தமிழ்நாட்டுடன் சேர்ந்திருந்து தமிழே மக்கள் ப₄ாஷையாயிருந்தபோது மோக்ஷமளிக்கும் வைஷ்ணவம் கேரளத்தில் தலைதூக்கி நின்றது. பிற்காலத்தில் படிப்படியாகக் கேரளம் வாமாசாரமாக மாறிய போது, தாழ்ந்த ப₂லன்களை அளிக்கும் பகவதி, ஐயப்பன் கோவில்களுக்கு முக்கியத்துவம் ஏற்பட்டது. விஷ்ணு கோயில்களிலேயே ஶாஸ்தா (ஐயப்பன்) கோவில்கள் ஏற்பட்டன. மிகச் சமீபகாலத்தில் விஷ்ணு கோயில்களில் விபூதிகொடுக்கும் வழக்கமும் ஏற்பட்டுவருகிறது. தமிழ்நாட்டிலும் ப்ரதிஷ்டையில்லாத தூண்களில் ஸமீபகாலமாக து₃ர்க்கை, பிள்ளையார் கோவில்கள், விஷ்ணுகோவில்களினுள் ஏற்பட்டுவருகின்றன. சிறிது காலத்தில் இங்கும் விபூதிகொடுக்கும் பழக்கம் ஏற்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. தூங்கினவன் தொடையில் திரித்தமட்டும் லாபமன்றோ.

51. பூதநாவத₄மானவுடன் கண்ணன் பயங்கொள்ளாமலிருப்பதற்காக நந்த₃கோ₃பன் கோ₃மயசூர்ணத்தைக் கண்ணன் நெற்றியில் இட்டதாக விஷ்ணுபுராண மொழிபெயர்ப்பு ஒன்றில் உள்ளது. சைவர்கள் இது விபூதியென்று சொல்லுகிறார்கள். உண்மையை விளக்க வேண்டுகிறேன்.

விஷ்ணுபுராணத்தில் "*கோ₃புரீஷமுபாத₃ாய*" [5-5-13] என்று தொடங்கும் ஶ்லோகத்தில் இந்த விஷயம் உள்ளது. "கோ₃புரீஷம்" என்பது பசுஞ்சாணத்திற்குப் பெயர். "கோ₃கரீஷம்" என்றும் ஒரு பதிப்பில் உள்ளது. காயவைக்கப்பட்ட பசுஞ்சாணம் (விராட்டி) என்று இதற்குப் பொருள். கோ₃மய சூர்ணம் என்று இங்கு இல்லை. ஆகையால் சைவர்கள் கூறுவது கற்பனையே.

வீ. கு. வீரராகவ ரெட்டி, சென்னை-600045.

52. ஆறாயிரப்படி குருபரம்பராப்ரபாவம் நம்பிள்ளை வைபவத்தில் 384-வது பக்கம் கடைசியில் — "பிள்ளையை ஒருவன், 'எம்பெருமானையொழிந்த தே₃வதாந்தரங்களை பூ₄ஜிக்கலாகாதென்கிற நீங்கள் நித்யநைமித்திகாதி₃களிலே அக்₃நீந்த்₃ராதி₃ தே₃வதைகளை பூ₄ஜிப்பானென்? ஆலயங்களை பூ₄ஜியாதொழிவா

http://acharya.org

னென் ?' " என்று நம்பிள்ளையைக்குறித்து ஒருவன்கேட்ட கேள்வியைக் கொடுத்து, 385-வது பக்கத்தில் அதற்கு நம்பிள்ளை அருளிய பதில் தரப்பெற்றுள்ளது. அந்த பதிலின் ஸாராம்ஶத்தை எளிய தமிழ்நடையில் விளக்கவேண்டுகிறேன்.

வைதிகர்கள்—நெருப்பு ஒன்றேயானாலும், அக்₃நிஹோத்ரம் செய்யும் அக்₃நியைக் கைக்கொண்டும், சுடுகாட்டிலுள்ள நெருப்பை விலக்கியும் வாழ்கிறார்கள். அதுபோலே வேத₃ம் விதி₄த்த வைதி₃ககார்யங்களில் மற்ற தெய்வங்களுக்கு அந்தர்யாமியான எம்பெருமானுக்கே அவை சேருவதாக அநுஸந்தி₄த்து, அவர்களைக் குறித்து ஹோமம் முதலானவற்றைச் செய்தும். வேத₃விருத்₃த₄மான சைவம், சாக்தம் முதலான ஆக₃மங்களைக்கொண்டு எம்பெருமானுக்கு எதிர்த்தட்டாக மற்றொரு தெய்வத்தை ஸ்வதந்த்ரதே₃வதையாக ஆக்கி, எம்பெருமானைப் பரிவார தே₃வதையாகவே ஆக்கி. அந்தந்த தே₃வதைக்குரிய மந்த்ரதந்த்ரங்களாலே வழிபடுமிடமான சிவன் முதலானவர்களுக்கான கோயில்களில் வழிபடுவதை விலக்கியும் பரமவைதி₃கர்களான ஸ்ரீவைஷ்ணவர்கள் வாழ்வதும் பொருந்தும். ருத்₃ராதி₃களைக் குறித்து நித்யநைமித்திக கர்மங்களில் ஹோமம் முதலானவற்றைச் செய்யும்படி வேத₃விதி₄யிருப்பதுபோலே சிவாலயம் முதலானவற்றில் வழிபடும்படி வேத₃விதி₄யும் இல்லை. மேலும், சிவன் ஸத்வகு₃ணத்துக்கு நேர்மாறான தமோகு₃ணத்தை உடையவனாய், அதை வளர்ப்பதற்காக ஏற்பட்டவனாகையாலே. சிவனும், அவனுடைய குடும்ப₃மும், அவர்களுடைய கோயில்களும் ஸாத்விகர்களுக்கு மிகவும் விலக்கத்தக்கவை. இதைமீறி, "நித்யகர்மங்களிற்போலே, நாங்கள் சிவாலயங்களுக்குச் சென்று சிவனுக்கு அந்தர்யாமியான நாராயணனை உபாஸிக்கிறோமே" என்று கூறிக்கொண்டு அக்கோவில்களுக்குப்போனால், காலக்ரமத்தில் தமோகு₃ணம் வளர்ந்து விஷ்ணுத்₃வேஷமே உண்டாகிவிடும். "வைதி₃ககாரியங்களில் மற்ற தெய்வங்களுக்கு அந்தர்யாமியைக் குறித்து ஹோமாதி₃கள் செய்வதைப்போலே, அத்தெய்வங்களுடைய ஆலயங்களுக்கும், அந்தர்யாமியை வழிபடுவதற்காகச் செல்லலாம்; இது கூடாதென்றால் அதுவும் கூடாது" என்று வாத₃ம் செய்வது—"ஶாஸ்த்ரங்களில் செய்யென்று விதி₄க்கப்பட்டவற்றைச் செய்யாதே; ஶாஸ்த்ரங்களில் செய்யாதே என்று தடுக்கப்பட்டவற்றைச் செய்" என்று விதண்ட₃ாவாத₃ம் செய்வதேயாகும். இதுவே நம்பிள்ளை அருளிய பதிலின் ஸாரம்.

http://acharya.org

V. ஸ்ரீநிவாஸன், திருச்சி-17.

53. 1978 செப்டம்பர் கலைமகளில் (தண்டமும் விபூதியும்—பெரும்பாலானவர்கள் பரமேசுவரனையே வழிபட்டவர்கள் என்பதற்கு எத்தனை சாட்சிகள்!) என்னும் தலைப்பில் — ஆயிரம் வருடங்களுக்கு முற்பட்ட சார்வாக க்3ரந்த2ம் ஒன்று, ஜைந க்3ரந்த2ம் ஒன்று, பஞ்சதந்த்ரக்கதைகள் ஆகியவற்றிலிருந்து அந்தக்காலத்திலேயே விபூ4தியிடும் பழக்கமும், சிவ பஞ்சாக்ஷரம் ஓதும் பழக்கமும் நம்நாட்டில் இருந்துவந்தது என்று பீடாதி4பதி எழுதியிருப்பது பற்றித் தங்கள் கருத்து என்ன? த்ரித3ண்ட3த்தைப் பற்றிச் சொல்லியிருப்பதையும் பார்த்தீர்களா?

நம்நாட்டில் வழங்கிவரும் சைவாக3மங்கள் ப்3ரஹ்ம ஸூத்ரம் எழுதிய வேத3வ்யாஸராலும், அதற்கு உரையெழுதிய ஆதிசங்கரராலும் வேத3விருத்3த4மானவை என்று கண்டிக்கப் பட்டுள்ளன. ப்3ரஹ்மஸூத்ரம் 2000 வருடங்களுக்கு முற்பட்டது என்று எல்லா ஆராய்ச்சியாளர்களாலும் இசையப் பெற்றது. ஆகையால் சைவாக3மங்களில் சொல்லப்பட்ட அவைதி3கமான ப4ஸ்மதா4ரணமும், சிவ பஞ்சாக்ஷர மந்த்ர ஜபமும் 2000 வருஷங்களுக்கு முன்பாகவே நம்நாட்டில் சிலரால் கைக்கொள்ளப்பட்டிருந்தன என்று ஶாங்கரபா4ஷ்யத்திலிருந்தே விளங்கும்போது, இதற்காக 1000 வருஷங்களுக்கு முற்பட்ட சார்வாக ஜைநாதி3க்3ரந்த2ங்களில் பாடுபட்டுத்தேடி எழுதியிருப்பது வீண்முயற்சியே. சைவாக3மங்களை ஆதி3ஶங்கரர் பஶுபத்யதி4கரணபா4ஷ்யத்தில் முழுவதும் க2ண்டி3த்திருப்பதையும், பாஞ்சராத்ராதி4கரணபா4ஷ்யத்தில் நாராயணபரத்வத்தை ஏற்றுக்கொண்டிருப்பதையும் (நாம் பலகால் காட்டியிருப்பதை) மறைத்து இப்படி எழுதிவருவது ஆதி3ஶங்கரத்3ரோஹம் தவிர வேறில்லை. இந்நூற்றுண்டின் தொடக்கத்தில் வாழ்ந்த ராமசுப்பாசாஸ்த்ரிகள், தமது "அநுபா4ஷ்ய கா3ம்பீ4ர்யம்" என்னும் நூலில் (28-வது பக்கத்தில்) ஆதி3ஶங்கர ஶிஷ்யரான பத்3மபாதா3சார்யர், தாம் இயற்றிய பஞ்சபாதி3கா என்னும் பா4ஷ்யவ்யாக்2யானத்தில் மங்க3ள ஶ்லோகத்தில் ஆதி3ஶங்கரருக்கு "நிரஸ்தபூ4திம்" என்று விஶேஷணமிடுவதன் மூலம், ஆதி3ஶங்கரர் விபூ4தியிடாதவர் என்று தெளிவாகத்

http://acharya.org

தெரிவித்திருப்பதைக் காட்டியிருக்கிருர். இவ்விஷயம் ஸுத₃ர்ஶனம் 322 & 323 (ஆனந்த-ஞு புரட்டாசி ஐப்பசி யிதழில்) சாதிமத ஆராய்ச்சிப் பகுதியில் விரிவாக நம்மால் விளக்கப்பட்டுள்ளது. ஆசார்ய த்₃ரோஹம் செய்வதே தமக்குத் தலைவிதியாய் விட்டபடியால், ஶாங்கரபா₄ஷ்யத்தி லிருந்தும், அதன் வ்யாக்₂யானங்களிலிருந்தும் ஆதாரங்காட்ட இயலாமல், சார்வாக ஜைநாதி₃ பா₃ஹ்யக்₃ரந்த₂ங்களிலிருந்து ஆதா₄ரங்காட்டுவது பீடாதி₄பதியின் வருந்தத்தக்க நிலையைக் காட்டுகிறது. நிற்க; சங்க இலக்கியங்களில் "முக்கோற்பகவர்" என்று ஸ்ரீவைஷ்ணவரான த்ரித₃ண்ட₃ஸந்யாஸிகளைப் பேசி யிருப்பதுபோலே, ஏகத₃ண்டி₃களைப் பழைய இலக்கியங்களில் எங்கும் பேசவில்லை என்று நாம் பலகால் எடுத்துக்காட்டி வருவதை — சார்வாகக்₃ரந்த₂த்திலும் த்ரித₃ண்ட₃மே கூறப் பட்டுள்ளது என்று எடுத்துக்காட்டுவதன்மூலம் நிலைநாட்டுகிருர் பீடாதி₄பதி. தாம் த₄ரித்திருக்கும் ஏகத₃ண்ட₃த்துக்குப் பழைய இலக்கியங்களிலும், நூல்களிலும் ஆதாரமில்லை என்பதை ஒப்புக்கொண்டதுதான் இக்கட்டுரையிலிருந்து ஸாரமாகத் தேறிநிற்கிறது. "வைஷ்ணவ சந்யாசிகள் த்ரித₃ண்ட₃த்தைப் பரமஹம்சம் என்றுதான் சொல்லுகிருர்கள்; த்ரிதண்டம் என்று சொல்லவில்லை" என்று பீடாதி₄பதி எழுதியிருப்பது உண்மைக்கு முரணுனது.

ஜோஸ்யர், S. ராமஸ்வாமி அய்யங்கார்,
ராமாநுஜ மிஷன் பிரதம அமைப்பாளர், சிதம்பரம்.

54. (1) சைவ ஸ்மார்த்த மட₂ாதி₄பதிகளைப்போலே, நமது ஸ்ரீவைஷ்ணவ மட₂ாதி₄பதிகள் தீவிர மத ப்ரசாரம் செய்வ தில்லையே; (2)சில வைஷ்ணவர்கள் வயிறு வளர்க்கும் பொருட்டுத் தங்களது குல மரபைக் குறைத்துக்கொண்டு, பிற மதத்தின ரைப் போற்றிப் புகழ்ந்து காலங்கழித்து வருகிருர்களே! இதற்குப் பரிஹாரம் உண்டா?

(1) மட₂ாதி₄பத்யம் பலவகைப் பாசங்களில் சிக்க வைக்கு மாகையால், பொதுவாக ஸந்யாஸிகள் மட₂ாதி₄பதியாகக் கூடாது என்பது சாஸ்த்ரவிதி₄. ஆனுல், ப₄க₃வத₃ாராத₄னத் திற்கு உறுப்பாகுமானுல், வைஷ்ணவ ஸந்யாஸிகள் மட₂ாதி₄

பத்யத்தை ஏற்கலாம் என்பது இதற்கு விதிவிலக்கு. [*'மாட₂ா பத்யம் யதி: குர்யாத் விஷ்ணுபூஜாऽபி₄வர்த்த₄நே'* என்னும் *ஶாஸ்த்ர* வாக்யம் காண்க.] வைஷ்ணவ மட₂ாதி₄பதிகள் அனைவரும் ஒவ்வொரு கோயில் கைங்கர்யத்திற்காகவே முக்கியமாக ஏற்பட்டவர்கள். 'மதப்ரசாரம்' என்பது இதற்கடுத்தபடியாக சக்தியுள்ள மட₂ாதி₄பதிகள் செய்யக் கூடியது. வைஷ்ணவ மட₂ாதி₄பதிகளில் சக்தியுள்ளவர்கள் ஒரு சிலரே. அவர்களைத் தீவிரமாக மதப்ரசாரத்தில் ஈடுபடும் படி ஸ்ரீ வைஷ்ணவ சிஷ்ய ஸமூஹம் ப்ரார்த்திக்கவேண்டும். மேலும், லக்ஷக்கணக்கான பொதுமக்களோடு தொடர்புடைய பொதுஜனப் பத்திரிகைகளும், வானொலியும் சைவாத்₃வைதிகளின் வசத்திலிருக்கிறபடியால், அவர்கள் காமகோடி பீடாதி₄பதியின் ப்ரசாரத்திற்கே அப்பத்திரிகைகளிலும் வானொலியிலும் இடமளிக்கிறார்கள். வைஷ்ணவ மட₂ாதி₄பதிகளுக்கு இடமளிப்பதில்லை. இதனால் வைஷ்ணவ மட₂ாதி₄பதிகளின் ப்ரசாரம் பொதுமக்களை எட்ட வாய்ப்பில்லாமற் போகிறது. ஸ்ரீ வைஷ்ணவ பத்திரிகைகளும், ப்ரசாரகர்களும் இவ்விஷயத்தைப் பத்திரிகை நிர்வாகிகளுக்கும், மத்திய அரசுக்கும் எடுத்துக் காட்டி, ஸ்ரீ வைஷ்ணவ மட₂ாதி₄பதிகளுக்கும், ப்ரசாரகர்களுக்கும் பத்திரிகைகளிலும், வானொலியிலும் உரிய இடமளிக்கும்படி போராடவேண்டும். (2) எந்த மதத்தைச் சேர்ந்தவர்களிலும் மதத்₃ரோஹிகள் இருக்கிறார்கள். அதுபோல் ஸ்ரீ வைஷ்ணவர்களிலும் சிலர் இருக்கிறார்கள். வைஷ்ணவ மதப்பத்திரிகைகளும், வித்₃வான்களும், உண்மையான வைஷ்ணவ மத நம்பிக்கையுள்ளவர்களும் அவர்களைப் புல்லென மதித்து, அவர்களுடைய ஸ்வரூபத்தை ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு எடுத்துக்காட்டி அவர்களால் மதத்திற்குத் தீங்கு நேராதபடி ஜாக்₃ரதையாகப் பார்த்துக்கொள்ள வேண்டும். இதுவே பரிஹாரம்.

ஸ்ரீ R. ராஜகோபாலாச்சாரி M. A., தமிழ்ப்பேராசிரியர், காரைக்கால்.

55. ஸுதர்ஶநம் 366 & 367 (பொன்விழாமலர்) பக்கம் 121-ல், ''வைதிகமுறையில் மணம் செய்துகொண்ட எல்லா ஸ்த்ரீகளுக்குமே மணமான முதல் மூன்று நாட்களில் தேவதைகளோடு தொடர்பு உண்டாகையால் பாதிவ்ரத்யத்தில் குறை

http://acharya.org

யுண்டு"—என்ற வாக்யம் காணப்படுகிறது. இது உண்மையானல் வைதிகமுறையில் விவாஹம் செய்துகொள்ளும் பெண்ணைக் "கற்பின் கனலி" என்றும், "கொண்டானை அல்லால் அறியாக் குலமகள்" என்றும் அழைப்பது எப்படிப் பொருந்தும் ?

கற்பிழத்தல் என்பது "ஸூக்ஷ்மம்" என்றும், "ஸ்தூலம்" என்றும் இருவகைப்படும். ஸ்தூலமான கற்பிழத்தலாவது—ஓர் பெண் தானே விரும்பிப் பரபுருஷன் ஒருவனேடு மனம் மெய்மொழிகளாலே தொடர்புகொள்வதேயாகும். திருமணத்தின்போது தேவதைகளோடு ஸூக்ஷ்மமாகப் பெண்ணுக்கு ஏற்படும் தொடர்பாகிற கற்பிழத்தல் பெண் விரும்பிக்கொண்டதன்று; அவளறியாமலே ஸூக்ஷ்மமாக அவளுக்கு ஏற்படுகிறதென்று ஶாஸ்த்ரங்கொண்டு அறியப்படுவது. ஸ்தூலமான கற்பிழத்தல் பெண்ணுல் புத்திபூர்வகமாகக் கொள்ளப்படுகிறதாகையால் அது ஏற்பட்டவளுக்கு இகழ்ச்சியும், அது இல்லாதவளுக்குப் பாராட்டும் கிடைக்கிறது. ஸூக்ஷ்மமான கற்பிழத்தல் பெண்ணுக்கு, அவளறியாமலே ஶாஸ்த்ரவிதியினுல் ஏற்படுகையால், அது ஏற்பட்டவளுக்கு எந்தவிதமான இகழ்ச்சியுமில்லை. கற்பின் கனலியான ஸீதாபிராட்டி அப்ராக்ருதையாய், ஶாஸ்த்ரவிதிக்கு அப்பாற்பட்டவளாகையாலே, விவாஹகாலத்திலும் ஸர்வாந்தர்யாமியான எம்பெருமானேடல்லது சில க்ஷுத்ரதேவதைகளோடு தொடர்பு ஏற்பட்டிருக்க இயலாது. ஆகையால், அவளுக்கு இருவகைக் கற்பிழத்தலுக்கும் இடமேயில்லை. ப்ராக்ருத ஸ்த்ரீகளுக்கு ஶாஸ்த்ரவிதியினுல் ஏற்படும் ஸூக்ஷ்மமான கற்பிழத்தலால் அவர்களுக்குப் பழியில்லை. இந்த ஸூக்ஷ்மமான கற்பிழத்தலையிட்டு, அவர்களுக்கு ஸூக்ஷ்மமாய் அவர்களறியாததோர் பாதிவ்ரத்யஹானி ஏற்படுகிறது என்று காட்டி ஆக்கியாழ்வானை மடக்குவதற்கு ஆளவந்தார்க்கு இது பயன்பட்டது என்றே கொள்ளவேண்டும்.

N. வெங்கடபதி, கூடுவாஞ்சேரி (56, 57 கேள்விகள்)

56. ஸப்தாவரணம் என்ருல் என்ன ? அதற்கு "விக்ரஹம்" எப்படி ? ஸப்தாவரணத்தன்று ஸந்நிதிகளில் நடக்கும் கார்யங்களை வைத்துப்பார்த்து ஆராய்ந்ததில் அடியேனுக்கு எதுவுமே

http://acharya.org

தெளிவாகப்படவில்லை. இதுபற்றிய விளக்கத்தைத் தந்தருள வேணும்.

"ஸப்தாநாம் ஆவரணாநாம் ஸமாஹார: ஸப்தாவரணம்" [ஏழு சுற்றுக்களின் கூட்டரவு] என்பது ஸப்தாவரண ஶப்₃த₃த்தின் பொருள். பரமபுருஷனான விஷ்ணுவின் கோயில்களில் ஏழு ஆவரணங்கள் (ப்ராகாரங்கள்-சுற்றுக்கள்) இருக்கலாம் என்பது வைஷ்ணவாக₃ம விதி₄. இந்திரன் வரையிலுள்ள தெய்வங்களுக்குத் தலைவனான சிவனுடைய கோயிலில் ஐந்து ப்ராகாரங்கள் வரையில் இருக்கலாம் என்பது சைவாக₃மவிதி₄. ப்₃ரஹ்மோத்ஸவபூர்த்தியன்று எம்பெருமான் இவ்வேழு ஆவரணங்களிலும் எழுந்தருள்வது ஸப்தாவரண உத்ஸவமாகும். இதே போல் சிவன்கோவில்களில் பஞ்சப்ராகார உத்ஸவம் நடக்கிறது. ஏழு (அல்லது ஐந்து) சுற்றுக்களிலும் ஊர்வலம் வருவது ஶ்ரமமாயிருந்தபடியால் பிற்காலத்தில் கௌ₃ணபக்ஷமாக மூன்று சுற்றுக்களில் ஊர்வலம் வந்தால் போதும் என்னும் நிலை ஏற்பட்டுவிட்டது.

57. வேத₃த்திற்கு அபௌருஷேயத்வத்தை ஸ்த₂ாபிப்பது எங்ஙனம் என்பதை விவரிக்கவேணும். ஏனெனில் வேதத்திலேயே ரிஷிகளைப்பற்றிய ப்ரஸ்தாவம் வருவதால் அநாதி₃ என்று சொல்லும்போது ஷை ரிஷிகளுக்கு முன்பு வேதம் இருந்ததா இல்லையா? இருந்தால் இவர்கள் பெயர் நுழையக் காரணம் எப்படி? தங்கள் பெயரைத் தாங்களே ஓதிக்கொண்டிருந்தனரா?

வேத₃ங்களில் காணப்படும் வ்யாஸர் பராஶரர், வாமதே₃வர் முதலான ரிஷிகள் அதி₄காரிபுருஷர்கள். அதாவது—ஒவ்வொரு கல்பத்திலும் ஒவ்வொரு ஸம்ஸாரி ஜீவன் பிரம்மபதவியையும், சிவபதவியையும் அடைவதுபோலே. ஒவ்வொரு ஸம்ஸாரிகள் தம் புண்ணிய மிகுதியாலே இந்த ரிஷிபதவிகளை அடைந்து. தம் தவச்சிறப்பாலே நித்யமான வேத₃மந்திரங்களை ஸாக்ஷாத்கரிக்கிறார்கள். ஆகையால் அந்த ரிஷிகளுக்கு முன்பு வேத₃ம் இருந்ததா இல்லையா, தங்கள் பெயரைத் தாங்களே ஓதிக்கொண்டிருந்தனரா? என்னும் கேள்விகளுக்கு இடமில்லை. இதற்குமேல் ஓர் கேள்வியும் எழுவதுண்டு. ஶப்₃த₃மெல்லாம் அநித்யமாயிருக்கும்போது வேத₃ஶப்₃த₃மும் அநித்யந்தானே;

http://acharya.org

அது எப்படி நித்யமாகமுடியும்? என்பது அக்கேள்வி. வேத₃ ஶப்₃த₃ங்களின் ஆநுபூர்வி (முன்பின் அமைப்பு) நித்யமாயிருப்பதையிட்டு வேத₃ம் நித்யம் என்று சொல்லப்படுகிறதேயொழிய. வேத₃ஶப்₃த₃த்தை உச்சரித்தால், அது நித்யமாகக்கேட்டுக் கொண்டிருக்கும் என்னும் பொருளில் வேத₃த்தை நித்யமென்று கூறவில்லை என்பது இதற்கு பதில். அதாவது—"இஷே த்வா" என்று தொடங்கும் வேதமந்திரம் எந்தக் கல்பத்திலும் "இஷே த்வா" என்று தொடங்குமேயொழிய "த்வா இஷே" என்றோ. வேறுவிதமாகவோ தொடங்காது என்பதே வேத₃ங்களுக்கு நித்யத்வமாகும். வேத₃மந்திரங்கள் எல்லாமே இப்படி ஆநுபூர்வீ நித்யத்வத்தை உடையவை.

S. வேங்கடம் சமயபுரம் (58,59 கேள்விகள்)

58. பழனி கோவிலில் திருவேங்கடமுடையான்பற்றியும், ஐயப்பன்பற்றியும் துதிப்பாடல்கள் ஒலிபெருக்கி மூலம் ஒலி பரப்புவதை நிறுத்தவேண்டாமா? என்று சென்னை சட்டசபையில் ஓர் அங்கத்தினர் கேள்வி கேட்டிருப்பதையும். "பக்தர்களின் மதவுணர்ச்சிகளுக்கு மதிப்பு அளிக்கப்படும்" என்று மந்திரி பதிலளித்திருப்பதையும் பத்திரிகைகளில் பார்த்தேன். ஏராளமான விஷ்ணுகோயில்களில் முருகன், ஐயப்பன், சிவன் முதலானோரைப் போற்றியும், விஷ்ணுவைத் தாழ்த்தியும் பாடல்கள் ஒலிபரப்பப்படுகின்றன. அத்தகைய பாடல்கள்கொண்ட கச்சேரிகளுக்கு ஏராளமாகச் செலவழிக்கப்படுகிறது. இதற்கும் விமோசனம் உண்டா?

சட்டசபையில் வைஷ்ணவர்களின் உணர்ச்சியைக் காட்டிக் கேள்வி கேட்கக் கூடியவர் ஒருவரும் இல்லையாகையால் இதற்கு விமோசனம் இல்லையென்றே தோன்றுகிறது. தங்களுக்குத் தெரிந்த சட்டசபை அங்கத்தினர்களைக் (M. L. A.) கொண்டு இப்பிரச்னையைச் சட்டசபையில் எழுப்பச்செய்ய வேண்டியது வைஷ்ணவர்களின் கடமை. இக்கடமையை எவராவது நிறைவேற்றினால் விமோசனம் பிறக்கலாம். இத்தகைய அநீதிகள் விஷ்ணுகோயில்களில் ஏராளமாக நடப்பதைத் தடுக்கவே "விஷ்ணுகோயில்களில் திருநாமம் த₄ரித்த வைஷ்ணவர்களையே நிர்வாக அதிகாரிகளாக ஆக்கவேண்டும்" என்னும் தீர்மானத்தை நாம் கொண்டுவந்து திருச்சி ஆலயப்

http://acharya.org

பாதுகாப்பு மகாநாட்டில் நிறைவேறச் செய்தோம். ஆனுல், அதை மந்திரிகளிடம் எடுத்துச் சொல்லி வைஷ்ணவர்களின் மதவுணர்ச்சியை அரசு மதிப்பதற்கு ஏற்பாடுசெய்ய ஆலயப் பாதுகாப்புக் குழு முன்வருமா? என்பது கேள்விக்குறியாகவே நிற்கிறது.

59. சமீபத்தில் காலஞ்சென்ற முருகபக்தரும் சினிமா அதிபருமான தேவர் ''முருகனைமட்டுமே கும்பிடுவார்; வள்ளி தெய்வானை சமேதராய் இல்லாத முருகன் படங்களைத்தான் அவர் வீட்டில் மாட்டி வைத்திருப்பார். 'பெண்டாட்டியுடன் இருந்தால், நாம் கூப்பிட்ட குரலுக்கு வரவிடாமல் தடுத்தாலும் தடுப்பார்கள். ஸோலோ(தனி) முருகன்தான் எனக்குப் பிடிக்கும்' என்பார்'' என்று 21—9—78குமுதத்தில் செய்தி வந்துள்ளது. இக்கூற்று சரியா? வைஷ்ணவத்தில் இப்படி அநுபவம் உண்டா?

பிராட்டியைப் பிரித்துப் பெருமானை மாத்திரம் பற்றினுல் சூர்ப்பணகை பட்டது படுவார்கள் என்பது ஸ்ரீராமாயணத்திலே காணப்படும் உண்மை. பரமாத்மாவான திருமால் எதைக் கொடுத்தாலும் அது வாங்கிக்கொள்பவனுக்கும் உலகிற்கும் நன்மை பயப்பதாயிருக்கும்; அத்தகைய வரங்களைக் கொடுப்பதற்குப் பிராட்டிமார் புருஷகாரம் (சிபாரிசு) செய்வார்களேயொழியத் தடுக்கமாட்டார்கள் என்கிறது வைஷ்ணவம். மற்ற தெய்வங்கள் ப்ராக்ருதர்களாகையாலே பெண்டாட்டியோடு கூடியிருக்கும்போது, அவர்களிடம் ஈடுபாட்டால் பக்தர்களுக்கு வரங்கொடுக்கமாட்டார்கள் என்னும் தேவரின் அநுபவத்தில் உண்மையிருக்கலாம். ஆனுல், முருகன் முதலான தெய்வங்கள் தேவர் போன்ற சினிமா அதிபர்களுக்கு அருள்புரிந்து ஏராளமான சினிமாப் படங்களை எடுக்க உதவியதால் உலகுக்கு நன்மை அதிகமா? தீமை அதிகமா? என்பதை விவேகிகள் (நன்மை தீமைகளைப் பகுத்தறிய வல்லவர்கள்) ஆராயவேண்டும்.

S. முரளி, ஜமால்முகம்மது கல்லூரி, திருச்சி-20.(60 to 62 கேள்விகள்)

60. எம்பெருமான் ஆசார்யனிடம் சாந்நித்யம் செய்கிறபடியால், ஆசார்யன் எம்பெருமானேயொழிய வேறில்லை என்று வைஷ்ணவம் கூறுகிறது. அப்படியானுல், திருமந்திரத்தில்

http://acharya.org

கூறப்படும் நவவித₄ஸம்ப₃ந்த₄மும் (ஒன்பது வித₄மான உறவுகளும்) ஆசார்யனோடு நமக்கு உண்டா ?

ஆசார்யனுக்கும், எம்பெருமானுக்கும் ஸ்வரூபைக்யத்தை வைஷ்ணவம் கூறவில்லை. எம்பெருமான் தனக்கு ஜீவர்களை ஆளாக்கித் தரும் ஆசார்யனிடம் ஸாந்நித்₄யம் செய்வது அவனுடைய ஜ்ஞாநப₄க்திவைராக்₃யங்களை வளர்ப்பதற்காகவே. இது இருவர்க்கும் பே₄த₃த்தைக் காட்டுமேயொழிய அபே₄த₃த்தைக் காட்டாது இருவர்க்கும் அபே₄த₃த்தையும், எம்பெருமானைக் காட்டிலும் ஆசார்யனுக்கு உயர்வையும் கூறும் வசனங்கள், எம்பெருமான் ஆசார்யனைத் தன் திருவடியாகவும், உயிராகவும் அபி₄மானிப்பதையும், எம்பெருமானைக் காட்டிலும், ஆசார்யன் ஜீவர்களைத் திருத்துவதில் வல்லவனாயிருப்பதையும், ஆசார்யனுடைய ஸௌலப்₄யஸௌசீல்யாதி₃ கு₃ணச்சிறப்பையும் காரணமாகக்கொண்டு ஏற்பட்டவை. ஆகையால், நவவித₄ஸம்ப₃ந்த₄மும் பூர்ணமாகவும், முக்₂யமாகவும் உள்ளது எம்பெருமான் ஒருவனிடமே. அவனருளாலே ஆசார்யனிடமும் சில பெருமைகள் ஏற்பட்டுள்ளன.

61. (எம்பெருமானை ஒதுக்கிவிட்டு) எம்பெருமானேயான தன் ஆசார்யனுடைய திருமேனிக்கே திருவாராத₄னம் செய்யலாமா ?

ஸ்வரூபைக்யமில்லையாகையாலும், இது ஆசார்யனுக்கே அஸஹ்யமாகுமாகையாலும், செய்யத்தகாதது.

62. மதுரகவிகள், வடுகநம்பிகள் போன்று அடியேனும் எனக்குப் பஞ்சஸம்காரம் செய்வித்த ஆசார்யனையே ஸ்ரீமந் நாராயணனாகக்கொண்டு அவர் உகப்பே உத்₃தே₃ச்யமாய், எல்லாவித அடிமைகளையும் முக்கரணங்களாலும் செய்துகொண்டு, அவரையே பல்லாண்டு பாடிக்கொண்டு, உண்ணுஞ்சோறு பருகுநீர் தின்னும்வெற்றிலை எல்லாம் அவர் திருவடிகளே என்று இருக்கலாமா ?

தாராளமாக இருக்கலாம். இப்படி ஒருவர் இக்காலத்தில் இருந்தால், அவரை மதுரகவிகளையும், வடுகநம்பியையும் கொண்டாடுவதுபோலே கொண்டாடலாம்.

http://acharya.org

A. வேங்கடாத்ரி அய்யங்கார், திருக்கோட்டியூர் (63, 64 கேள்விகள்)

63. வைதிககாரியங்களைச் செய்யும்போது அந்தணர்கள் பவித்ரம் தரிப்பது எதற்கு? ருத்ரனைப்பற்றிய மந்திரங்களைச் சொன்னவுடன் தீர்த்தத்தைத் தொடுவது ஏன்?

முதல் கேள்விக்குப் பதில் — ரங்ககிருஷ்ண ஶாஸ்த்ரியின் ஸம்ஸ்க்ருத—தமிழ் அகராதியில் "*அநாமிகா*" எனப்படும் மோதிர விரலைக் குறிக்கும் பதத்திற்குப் பொருள் எழுதும்போது எடுக்கப்பட்டதான—"*தயா ஹி ஶிவேந ப்ரஹ்மஶிர: சிந்நம்। தேந தஸ்யா அபவித்ரஜாதீயதா। அத ஏவ தஸ்யா: பவித்ரீகரணார்த்தம் யஜ்ஞாதௌ பவித்ர குஶதாரணம் க்ரியதே ॥*" [மோதிரவிரலாலேயே ஶிவனால் பிரமனின் தலை அறுக்கப் பட்டது; அதனால் அவ்விரல் பரிஶுத்தியற்ற ஜாதியைச் சேர்ந்தது; அக்காரணத்தாலேயே அதைப் பரிஶுத்தப் படுத்துவதற்காக யஜ்ஞத்தைத் தொடங்கும்போது (சிவனுடைய அஷ்டமூர்த்திகளில் ஒருவனான) யாகம் செய்பவனால் பவித்ரமாக முடியப்பெற்ற குஶம் தரிக்கப்படுகிறது.] என்னும் ப்ரமாணத்தில் தரப்பெற்றுள்ளது. தகப்பனான பிரமன் தலையைக் கிள்ளிய காரணத்தாலும், தமோகுணம் மிகுதியான ஶரீரத்தை உடையவனாகையாலும், பிறர்க்குத் தமோ குணத்தை வளர்ப்பவனாகையாலும் பரிஶுத்தியற்றவனான சிவனைப்பற்றிய மந்திரத்தைச் சொன்னவுடன், அந்த அபரிஶுத்தி நீங்கிப் பரிஶுத்தி ஏற்படுவதற்காகத் தீர்த்தம் ஸ்பர்ஶிக்கப்படுகிறது. இப்போது சைவர்களாகிவிட்ட ஸ்மார்த்த ப்ராஹ்மணர்களும் இவ்விரண்டு காரியங்களையும் பழைய வழக்கத்தாலே இன்றும் செய்து வருகிறார்கள்.

64. அக்டோபர் '78-கலைமகளில், "'ஸாம்பன் நம் குலதெய்வம்' என்று ஆதிசங்கராசார்யர் சொன்னார். இருநூறு வருஷங்களுக்கு முன் இருந்த அப்பையதீட்சிதர் 'பிரம்மா காலத்திலிருந்து நாம் சைவர்கள்' என்கிறார்" என்று காமகோடி பீடாதிபதி கூறியிருப்பது பற்றிய உண்மையை விளக்கப் பிரார்த்திக்கிறேன்.

விஷ்ணுத்வேஷத்தாலே பல கற்பனைகளையும், விதண்டா வாதங்களையும் தமது சிவதத்வவிவேகம், சிவார்க்கமணிதீபிகை

முதலான நூல்களில் எழுதிய அப்பயதீ₃க்ஷிதர் 'பிரம்மாவின் காலத்திலிருந்து அத்₃வைதிகள் சைவர்கள்' என்னும் பெரும் பொய்யைக் கூறியிருப்பதில் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஆதி₃ ஶங்கரர் தமது பா₄ஷ்யங்களில் 'நாராயணனே பரமாத்மா' என்றும் 'மற்ற தெய்வங்கள் ஜீவர்கள்' என்றும், அவர்களை ஆராதி₄ப்பவர்களுக்கு மோக்ஷமில்லை' என்றும் கல்வெட்டாகக் காட்டியிருக்கையில், முழுப்பூசணிக்காயைச் சோற்றில் மறைப்பதுபோலே அதை மறைத்து, அப்பயதீ₃க்ஷிதருக்கு முற்பட்ட எவரும் கையாளாத ஒரு ஶ்லோகத்தை ஆதி₃ஶங்கரருடையது என்னும் அண்டப்புளுகைப் புளுகி, ராமசுப்பாசாஸ்திரிகள் முதலான அத்₃வைதிகளாலும் வைஷ்ணவர் என்று நிலைநாட்டப் பெற்ற ஆதி₃ஶங்கரரைச் சைவராக்கி, அந்த ஆதி₃சங்கரரின் பரம்பரையில் வந்தவர் என்று சோரம் போகும் கதைகளையும், நிர்வாணப் படங்களையும் வெளியிடும் புல்லுருவிப் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தப்படும் ஒரு மட₂ாதி₄பதி பிரசாரம் செய்வது கலிமுற்றிய இக்காலத்திலேயே காணத்தக்க ஆச்சர்யமாகும். நமது 'சங்கரரும் வைணவமும்' என்ற நூலைக் காண்பார் இத்தகைய பொய்ப்பிரசாரங்களில் மயங்க மாட்டார்கள்.

K. P. ஆராவமுதாசார்யர், பழையகோட்டை.

65. 53-வது கேள்விக்கு பதிலில் கூறியபடி ப₄ஸ்மதா₄ரணம் அவைதி₃கமானால், நாளது புரட்டாசி ஸ்ரீந்ருஸிம்ஹ ப்ரியாவில் வெளிவரும் மஹாபா₄ரத மொழிபெயர்ப்பில் (பக்கம் 257ல்) "சிறந்த பக்தியுள்ள மகாதேவருக்கு வாஸஸ்தா₂னமான க்ருத்ர வடத்திற்குச் சென்று, ருத்ரனைப் பூஜித்து பஸ்மத்தால் ஸ்நானம் செய்தால், பன்னிரண்டு வருஷங்களில் நிறைவேறும் விரதமானது நன்கு அநுஷ்டிக்கப்பட்டதாகும்" என்று உள்ளது எப்படிப் பொருந்தும்?

அவைதி₃கம் என்று நாம் எழுதியது மோக்ஷத்தை விரும்புகிறவர்களால் தா₄ரிக்கத்தகாததாக வேத₃ஶாஸ்த்ரங்களில் நிஷேதி₄க்கப்பட்டது என்னும் கருத்திலேயே. இவ்வுலகப் ப₂லன்களை விரும்பும் ருத்₃ரப₄க்தர்கள் ப₄ஸ்மத்தை தா₄ரித்து அற்பப₂லன்களைப் பெற்றுப்போகலாம் என்பது ஶாஸ்த்ரஸம்மதம்.

http://acharya.org

பஞ்சமஹாபாதகங்களைச் செய்தவன் ப₄ஸ்மஸ்நானம் செய்து, சாம்பல் படுக்கையில் படுத்திருந்து ருத்₃ரனை த்₄யானித்தால் அப்பாபங்களிலிருந்து விடுபடுவான் என்று பாபங்களுக்கு ப்ராயச்சித்தமாகவும் ப₄ஸ்மதா₄ரண ஸ்நாநசயனாதி₃கள் சாஸ்த்ரங்களில் விதி₄க்கப்பட்டிருக்கின்றன. மோக்ஷத்தை அளிக்க வல்லமையுடைய தே₃வதே₃வனுன நாராயணனைப் பற்றிய பரமவைதி₃கர்கள் ப₄ஸ்மத்தைக் கையாலும் தீண்டலாகாது என்று சாஸ்த்ரங்களில் நிஷேதி₄க்கப்பட்டிருப்பதும் காணத்தக்கது. வேத₃த்திலேயே எதிரியைக் கொல்லும் அபி₄சாரயாக₃ம் சொல்லப்பட்டிருந்தாலும், பரமவைதி₃கர்கள் அதைக் கைக்கொள்ள நெஞ்சாலும் நினைக்கமாட்டார்கள் என்பதும் காணத்தக்கது.

S. முரளீதரன், காஞ்சீபுரம்.

66. சன்னிதியில் கைங்கர்யம் செய்பவர்கள் சிகை₂ (குடுமி) வைத்துக்கொள்ளவேண்டுமென்று நிர்ப்பந்தப்படுத்துவது ஏன் ?

அவரவர் குலாசாரப்படி சிகை₂(குடுமி) வைத்துக்கொள்ள வேண்டுமென்று வைதி₃கசாஸ்த்ரங்களில் விதி₄க்கப்பட்டுள்ளது. இந்த ஆசாரத்தை அரசியல் சமூகக்காரணங்களால் லௌகிகர்கள் கைவிட்டுவிட்டார்கள். கோயில்களில் கைங்கர்யம் செய்பவர்களாவது சிகை₂ வைத்துக்கொள்ளவேண்டும், விஷ்ணு கோயில்களில் கைங்கர்யம் செய்பவர்கள் திருநாமமும், சிவன் கோயிலில் பணிபுரிபவர்கள் திருநீறும் அணியவேண்டும், விஷ்ணு கோயிலில் கைங்கர்யம் செய்பவர்கள் வைஷ்ணவதீ₃க்ஷயான ஸமாச்ரயணம் செய்துகொள்ளவேண்டும் முதலான விதி₄கள் இன்றும் பெரும்பாலான கோயில்களில் கடைப்பிடிக்கப்படுகின்றன. 'ஆபீஸ்களுக்குப் போகும்போது ஸூட், பாண்ட் அல்லது சட்டையாவது போட்டுக்கொள்ளவேண்டும் என்று நிர்ப்பந்தப்படுத்துவது ஏன் ?' என்று கேட்டால், 'அது காரியாலயவிதி' என்று சொல்லுவதுபோல், உங்கள் கேள்விக்கும் 'சாஸ்திரங்களில் காணப்படும் ஆலயவிதி' என்பதே பதில்.

M. S. சாரங்கபாணி, சென்னை-49.

67. 8—10—78 'கோகுல'த்தில் விஷ்ணுவின் சக்கரத்தைப் பிள்ளையார் வாயிலிட்டுக்கொண்டதாகவும், மஹாவிஷ்ணுவும்,

http://acharya.org

லக்ஷ்மியும் வேண்டிக்கொண்டதால் அதைத் துப்பியதாகவும் எழுதிச் சித்திரம் தீட்டப்பட்டுள்ளது; கண்டிக்க வேண்டுகிறேன்.

இது ஏற்கனவே பதின்மூன்று வருஷங்களுக்கு முன் சில மாறுதல்களுடன் வைதிகமதத்தைக் கலக்குவதற்காகவே ஏற்பட்ட 'கல்கி'யில் வெளிவந்து, ஸுதர்ஶனம் சோதி-17. ஒளி-12ல் கண்டிக்கப்பட்டது; மறுபடியும், மறுபடியும் இப்பொய்க்கதை புல்லுருவிப் பத்திரிகைகளில் வெளியிடப்பட்டதால், ஸுதர்ஶனர் பதில் இரண்டாவது ஶதகம் 30-வது கேள்வியில் (ஸுதர்சனம் இதழ் 364ல்) கண்டிக்கப்பட்டது. பொய்யைப்பலகால் கூறி உண்மையாக்கப் பார்க்கும் இத்தகைய முயற்சிகளை வலிதாகக் கண்டித்து வைஷ்ணவர்கள் இப்பத்திரிகைகளுக்கு நூற்றுக்கணக்கில் கடிதம் எழுதவேண்டும்.

ஸ்ரீ V. D. ராமஸ்வாமி அய்யங்கார், அலர்மேலுமங்காபுரம்,
மயிலை, சென்னை-4.

68. 10—10—78 அன்று இரவு 9 மணிக்கு வானொலியில் ஒலிபரப்பாகும் ஆங்கிலச் செய்தியில், ராமலீலாவைப் பற்றிப் பேசுகையில், 'ராமன் ராவணனைக்கொல்ல தேவியின் உதவியை நாடினான்' என்று ஒலிபரப்பப்பட்டது. ப்ரஸித்தமான எந்த ராமாயணத்திலும் இல்லாத இப்பொய்யை மதச்சார்பற்ற அரசுத் துறை ஸ்தாபனம் பரப்பியது தவறுகையாலே, இதைத் திருத்திக்கொள்ளவேண்டும் என்று புதுடில்லி வானொலி இயக்குனருக்கு (A. I. R. Director) *ரிஜிஸ்டர் கடிதம் எழுதியுள்ளேன். ஆவனசெய்யப் பிரார்த்திக்கிறேன்.*

வைணவப் பொதுமக்களுக்கு இதை அறிவித்துவிட்டேன். நூற்றுக்கணக்கில் வைணவப் பொதுமக்கள் இவ்வநீதியைக் கண்டித்துக் கடிதம் எழுதினால்தான் வானொலிச் சாக்தர்கள் இனியாவது இப்படிக் குறும்பு செய்யாமலிருப்பார்கள்.

K. K. நாராயணன், கிருஷ்ண ஆபரண மாளிகை, இராமநாதபுரம்.

69. இங்கு நவராத்திரி விழாவில் பேசிய கிருபானந்த வாரியார்.— "கண்ணன் தன் மனைவி ஜாம்பவிக்குக் குழந்தை வேண்டுமென்று ருத்திரனைப் பூக்களைக்கொண்டு பூசித்ததாகவும் அப்பூக்களைக்கொண்டே உபமந்யுமஹர்ஷி திரும்பவும் ருத்ர

http://acharya.org

பூஜை செய்ததாகவும். 'ஒருமுறை உபயோகப்படுத்தப்பட்ட நிர்மால்யத்தைக்கொண்டு ஏன் பூஜைசெய்தாய் ?' என்று கண்ணன் கேட்க, 'கிருஷ்ண ! நீ சிவதீட்சை பெறுதவன் ; ருத்₃ரபூஜை செய்யத் தகுதியில்லாதவன் ; ஆகையால், உன் பூஜை ருத்₃ரனுக்குப் போய்ச் சேராதாகையால் அப்பூக்கள் நிர்மால்யமன்று; அதனாலேயே நான் அவற்றை உபயோகப் படுத்தினேன்'' என்று உபமந்யு கூறியதாகவும் சொன்னார். இதுபற்றி விளக்கவேண்டுகிறேன்.

வேத₃வேதா₃ந்த ஆராய்ச்சி செய்ய இயலாமையாலும், தம் பிரசங்கத்தைக் கேட்கும் ரசிகர்களும் இத்தகைய பொய்க்கதைகளையே ரசிக்கும் தரமுள்ளவர்களாகையாலும், வாரியார் இத்தகைய தாமஸபுராணப் பொய்க்கதைகளைக் கூறிப் புகழ், பணம் முதலானவற்றைப் பெற்று வருகிறார். வேத₃வேதா₃ந்தங்களைக்கொண்டும், ஸ்ம்ருதீதிஹாஸ ஸாத்விக புராணங்களைக்கொண்டும், சங்க இலக்கியம், ஆதிசங்கரபா₄ஷ் யங்கள் முதலான பழைய நூல்களைக்கொண்டும் விஷ்ணுவே பரமாத்மா என உணர்ந்த நாம் இவற்றைக்கண்டு சிரித் திருப்பதே தகும்.

S. இராமானுஜம், சென்னை-1.

70. சுப்பிரமணியர், விநாயகர் இருவர்களுடைய பிறப்பைப் பார்த்து, அவர்கள் வணங்குவதற்குத் தகுதியானவர்கள்தானா என்பதைப் பலர் ஆராய்வதில்லையே ஏன் ? இவர்களைத் திருத்த முடியுமா ?

எந்த வைத்தியரிடமாவது சென்று நோய்தீர்ந்தால் போதும் என்னும் மனப்பான்மையுடையவர்கள்போலே, எந்த தெய்வத் திடமாவது சென்று இவ்வுலகப் பலன்களைப் பெற அலைப வர்கள், தெய்வங்களின் பிறப்பு முதலானவற்றை ஆராய மாட்டார்கள். இவர்களைத் திருத்துவதும் எளிதன்று; எப்படி யாவது விரும்பும் பலன் கிடைத்தால்போதும் என்று நட்ட கல்லையெல்லாம் கும்பிடுகிறவர்களைக் கண்டு நாம் இரங்குவது தவிர வேறு என்ன செய்யமுடியும் ?

பி. கே. பார்த்தசாரதி, வேலூர்.

71. 'வசையில் நான்மறை கெடுத்த அம்மலரயற்கருளி முன் பரிமுகமாய் இசை கொள் வேத நூல் பயந்த' காலம்

http://acharya.org

எது ? 'அன்னமதாயிருந்து அங்கு அறநூல் உரைத்த அரசு' ஹம்ஸரூபியாகவிருந்தே வானவர்க்கும் முனிவர்க்கும் நல்கி இருள் கடிந்ததாக ஒரு வரலாறு. பன்னுகலை நால் வேதப் பொருளையெல்லாம் பரமன் பரிமுகமாய் அருள ஹயக்ரீவாவதாரம் செய்தது எப்பொழுது ? பரிமுகம் தாங்கிய விசேஷகாரணமும் விளக்கப் பிரார்த்திக்கிறேன்.

மத்ஸ்யாவதாரம், ஹயக்₃ரீவாவதாரம், ஹம்ஸாவதாரம் மூன்றுமே பிரமன் வேத₃த்தை இழந்தபோது, அவனுக்கு அவற்றை மீட்டுக்கொடுப்பதற்காக எடுத்த வித்₃யாவதாரங்கள். இவைபற்றி இதிஹாஸ புராணங்களில் உள்ள கதைகள் ஒன்றுக் கொன்று வேறுபடுகின்றன. ஹயக்₃ரீவனுய் அவதரித்து வேத₃ங் களைத் திருடிய மது₄கைடப₄ர்களாகிற அஸுரர்களைக்கொன்று மீட்டான் என்று ஒரு கதை மஹாப₄ரதத்தில் ஶாந்திபர்வத்தில் மோக்ஷத₄ர்மத்தில் நாராயணீயத்தில் 357-வது அத்₄யாயத்தில் படிக்கப்பட்டுள்ளது. ஸோமகன் என்னும் அஸுரன் வேதங் களைத் திருடியபோது, மீனுகி அவனைக்கொன்று வேதங்களை மீட்டான் என்று ஒரு கதை புராணங்களில் உள்ளது. இரண்டும் இரண்டு கல்பத்தில் நடந்திருக்கலாம். வேத₃ங்களை உபதே₃ஶித்தது அன்னவுருவோடு என்று கொள்ளலாம். இவ்வவதாரங்கள் மூன்றுமே வேத₃ங்களில் ஓதப்பட்டுள்ளதை விஷ்ணுசித்தவிஜய த்தில் வேத₃வேதா₃ந்த நிர்ணய ப₄ாக₃த்தில் (959-966, 1018-1025) நிலைநாட்டினேம். தன் இச்சையாலேயே ஒவ்வொரு விதமான உருவை எடுக்கிருன் எம்பெருமான் ; ஒவ்வொன்றுக்கும் விஶேஷகாரணம் சொல்லுவது இயலாது.

P. V. கோவிந்தய்யங்கார், புத்தூர், திருச்சி-17.

72. திருமலை தேவஸ்தானத்தார் வெளியிடும் ஸப்தகிரி பத்திரிகையில் அக்டோபர் இதழில் ஒரு கட்டுரையில் 'சிவனுக்கே உரியதான வில்வத்தழையை விஷ்ணுகோயிலான திருமலையில் (அர்ச்சனைக்கு) உபயோகப்படுத்துகிருர்கள்' என்று எழுதப் பட்டுள்ளது. வில்வம் சிவனுக்கே உரியதா ?

"வநஸ்பதிஸ்தவ வ்ருக்ஷோऽத₂ பி₃ல்வ:" [பி₃ல்வமரம் லக்ஷ்மீதே₃வியான உன்னுடைய மரம்] என்று ஸ்ரீஸூக்தத்தில் பி₃ல்வமரம் லக்ஷ்மீதே₃வியுடையதாக ஓதப்பட்டுள்ளது. ஆகை யால் பி₃ல்வத்தைக்கொண்டு பெருமாளுக்கு அர்ச்சனை செய்வ

http://acharya.org

தில் குறையில்லை. ''பத்ரம் புஷ்பம் ப₄லம் தோயம்'' [கீ₃தை 9-26] என்று தனக்கு ஆகாத பூவில்லை என்றவன் விஷயத்தில், கிடைக்கும் எந்த இலை அல்லது பூவைக்கொண்டும் அர்ச்சனை செய்யலாம். துளஸியும், பி₃ல்வமும் பெருமாளும் பிராட்டியும் உகந்ததாகையாலே அர்ச்சனைக்குச் சிறந்தவை. சிவனுக்கு பி₃ல்வம் உகந்தது என்பதற்கு வேத₃ப்ரமாணமில்லை.

V. ஸ்ரீநிவாஸன், திருச்சி-17.

73. 1978 செப்டம்பர் மஞ்சரியில் ''சங்ககாலத்தில் பாண்டியநாட்டுத் தலைநகரில் கொண்டாடப்பட்டு வந்த (விஷ்ணுவுக்குரிய) ஓணவிழா இன்றைய தமிழ்நாட்டில் முக்கியத்துவத்தை ஏன் இழந்தது என்பது புரியாத புதிர்'' என்று எழுதியுள்ளது. இப்புதிரை விடுவிக்கமுடியுமா? இந்த மஞ்சரியில் விஷ்ணுவை இழித்துரைக்கும் கதைகள் காட்டப்பட்டிருப்பதையும் கவனிக்கப் பிரார்த்திக்கிறேன்.

சங்ககாலத்தில் வைதி₃கமதமான வைஷ்ணவமே தமிழ் நாட்டில் வெற்றிபெற்றுவந்தது. அடிமுடிதேடிய கதை முதலான (விஷ்ணுவைத் தாழ்த்தும்) கதைகளில் ஒன்றுகூட அக்காலத்தில் வழக்கிலில்லை. ஓராயிரம் வருடங்களாகச் சைவம் வளர்ந்து, தமிழ்நாட்டில் பெரும்பான்மையினரான சைவர்கள் விஷ்ணுவை இழித்துரைப்பதையே தங்கள் குறிக்கோளாகக்கொண்டு விட்டனர், இன்று வரும் பிரபல பத்திரிகைகளில் இது உச்சநிலையை அடைந்துவிட்டதையும் காண்கிறோம். வைஷ்ணவம் சங்ககாலத்திற்குப்பின் படிப்படியாக நலிவுற்றதே—சங்க இலக்கியத்திலும், ''ஓண விழவில் ஒலியதிர''[நான்-திருவ 41] என்று நான்முகன் திருவந்தாதியிலும் தமிழ்நாடு முழுவதும் வழங்கியதாகக் காட்டப்படும் ஓணவிழா நின்றதற்குக் காரணமாயிருக்க வேண்டும். பண்டைக்காலத்தில் தமிழ்பேசும் நாடாகவேயிருந்த கேரளத்தில் இன்றும் இவ்விழா கொண்டாடப்படுவதும் காணத்தக்கது.

P. G. ஸம்பத்குமார், மதுரை.

74. ஆஞ்சனேயர் சிவபெருமானை வழிபடுகிறவர் என்று சிலர் கூறுகிறார்கள். இது உண்மையா? அநுமாரைத் தனியாக வைத்து வைஷ்ணவர்கள் பூஜிக்கலாமா?

அநுமன் இராமனைத் தவிர வேறு எவரையும் நெஞ்சாலும் நினையாதவன்; ''ப₄ாவோ நாந்யத்ர க₃ச்ச₂தி'' என்று அநுமன்

http://acharya.org

ராமபக்தி மிகுதியால் வைகுண்டம் செல்லவும் விரும்பவில்லை எனக் கூறியதாக வால்மீகி ராமாயணத்தில் உள்ளது. அப்படிப் பட்டவன் சிவனை வழிபட இடம் ஏது? கம்பராமாயணம் முதலான சில நூல்களில் வாயுபுத்திரனை அனுமனிடம் சிவ னின் அம்சம் உண்டு என உள்ளது. சிலர் அனுமனைத் தனியே வழிபட்டு இவ்வுலகப் பலன்களைப் பெற்றுவருகிறார்கள். ராம பக்தியில் சிறந்த அனுமனுக்கே தன்னைத் தனியே வழிபடுவ தில் விருப்பமிராது. ஆகையால், ஸீதாராமனோடும், இளைய பெருமாளோடும் சேர்த்து அவர்களுக்கு அடியானயிருக்கும் நிலையில் அனுமனை வைத்து வழிபடுவதே ஸ்ரீவைஷ்ணவர்க ளுக்குத் தகுந்தது.

R. ரெங்கராஜய்யங்கார், M.A B.T., மதுரை-1.

75. மதுரையில் புலவர் கீரனின் வில்லிபாரதச் சொற் பொழிவுகளுக்கிடையில் ஒரு விநோதமான கதையொன்றைக் கூறினர். அர்ஜுநன் க்ருஷ்ண பக்தியில் தனக்கு நிகர் எவரு மிலர் என்று இறுமாந்திருந்தானும். அதைத் தவிர்க்கவிரும்பிய கண்ணன் அவனை சோமசர்மா என்ற மற்றொரு க்ருஷ்ணபக்த னிடம் இட்டுச்சென்றானும். அங்கு அவனிடம் அவனது ஒரே மகனைத் தனக்கு கொடுக்கும்படி கேட்க, அவனுமிசைய, அப்போதொரு நிபந்தனை விதித்தானும் கண்ணன். சிறுவன் தலையை வகிடு எடுத்துத் தாயும் தந்தையும் இருபுறம் நின்று மனம் கலங்காமல் ரம்பத்தால் சிறுவனை இரு பிளவாக அறுத் துத்தர, வலப்பாகம் ஒன்றைமட்டும் தனக்கு யாசித்தானும். அப்படியே செய்கையில் சிறுவன் இடக்கண்ணில் நீர் பெருகிய தாம். அதனால் கண்ணனுக்குக் கோபமேற்பட்டுப் புறப்படுகை யில், அச்சிறுவன் எழுந்து வலப்பக்கத்துக்குக் கிடைத்த பேறு தனக்கு இல்லையாயிற்றே என்றே தன் இடக்கண் அழுததாகக் கூற, அதன்பின்னர் கண்ணன் அச்சிறுவனையும் அவன் தகப்பனை யும் பாராட்டி, அர்ஜுனனுடைய இறுமாப்பை ஒழித்தானும். இது புராணங்களில் உண்டா?

ஸாத்விக புராணங்களில் இத்தகைய கதை கிடையாது. தாமஸ புராணங்களில் இருக்கலாம். சைவர்கள் விஷ்ணுவைத் தாழ்த்துவதற்குப் புனைந்த மற்ற பல கதைகளைப்போலே, சிறுத்தொண்டநாயனர் சரிதத்தில் சிவனுக்குத் தாங்கள் சொல் லும் இச்செவிக்கினிதை கீர்த்தி கண்ணனுக்கும் இருக்கட்டுமே என்று புனைந்த கட்டுக்கதையாகவே இது இருக்கும்.

http://acharya.org

V. ஸ்ரீநிவாஸன், திருச்சி 17.

76. *நவம்பர் கலைமகள் இதழில் "ஸாம்பனுடைய இயல்புகள்" என்னும் தலைப்பில் காமகோடி பீடாதிபதி எழுதியிருப்பதை விமர்சிக்கவேண்டுகிறேன்.*

"பூ: பாதௌ யஸ்ய நாபி:" "நாபிர் நபோऽக்நி:" முதலான ப்ரஸித்த ப்ரமாணங்களில் நாராயணனுக்குச் சொல்லியிருக்கும் பெருமைகளைத் திருடி 300வருடங்களுக்குள்ளிருந்த ஶாங்கரபீடாதிபதியொருவர் "*ததுத்கர்ஷசௌர்யை: பரேஷாம் ஸ்துத்யத்வாத்*" [நாராயணனுடைய பெருமைகளைத் திருடியே பிறரைத் துதிக்கவேண்டியுள்ளது] என்று பட்டர் அருளியபடியே நூலியற்றி சிவனைத் துதித்த ஶ்லோகத்தைக் கொண்டு, ஆதிஶங்கரபாஷ்ய விருத்தமான சிவபரத்வத்தைப் பீடாதிபதி ஸ்தாபிக்கப்பார்ப்பது கல்பித ஶ்லோகங்கள் தவிர சிவபரத்வத்தை ஸ்தாபிக்கும் ப்ரஸித்தப்ரமாணங்கள் எதுவுமேயில்லை என்று அவரே ஒப்புக்கொண்டபடியாகிறது. ஆதிஶங்கரருக்கு, அவர் பெயரைச் சொல்லிக்கொண்டிருப்பவர்கள் சில நூற்றுண்டுகளாகச் செய்துவரும் த்ரோஹமே இதிலிருந்து வெளியாகிறது. இக்கட்டுரையில் "கொஞ்சம் அவனை (சிவனை) ஸ்தோத்ரம்பண்ணி நமஸ்காரம் செய்துவிட்டால் போதும். மிகவும் சந்தோஷத்தோடு, குளிர்ந்துபோய் வேண்டிய அநுக்கிரஹங்களையெல்லாம் செய்துவிடுவான்...... நமஸ்காரம் செய்தால் போதும். அவனுக்குக் குளிர்ந்துபோய் விடும். உடனே கூத்தாட ஆரம்பித்துவிடுவான். 'ஆஶுதோஷ உமாபதி:' என்று அதனுலேயே பெயர் உண்டு" என்று பீடாதிபதி பேசியிருப்பது ஒன்றே உண்மையான வார்த்தை. தவம்புரிந்தவுடன் உச்சி குளிர்ந்துபோய், ராவணன், பஸ்மாஸுரன் முதலானவர்களுக்கு வரங்கொடுத்துவிட்டுத் தானும் அவஸ்தைப்பட்டு, உலகையும் அவஸ்தைக்குள்ளாக்கிய கதைகள் பல இதிஹாஸபுராண ப்ரஸித்தம். இந்தப் பெருமை ஒன்றே நாராயணனுக்கு இல்லாததாய், சிவனுக்கே அஸாதாரணமாயிருப்பது என்பது ப்ரமாண ப்ரஸித்தம்.

இரா. ஸ்ரீநிவாஸதேசிகன், விழுப்புரம்-2.

77. *29—10—78 ஞாயிறன்று இரவு 8 மணிக்கு வானொலியில் "சித்திரப்பூங்கா" நிகழ்ச்சியில், தீபாவளி பற்றிய பேச்சில்*

http://acharya.org

ஒருவர், ''நரகாசுரன் இறக்கும் தருணத்தில் வேண்டிக்கொண்டதற்காக தீபாவளி கொண்டாடப்படுகிறது என்பது உசிதமாகப் படவில்லை. அவ்வாருனல் இராவணன் இறந்ததற்கும், இடும்பன், இரணியன் முதலான அரக்கர்கள் இறந்ததற்கும் தீபாவளி கொண்டாடவேண்டும். தீ பா வ ளி என்பதற்கு தீபங்களின் வரிசை என்பது பொருள். சிவபெருமான் சோதி வடிவானவர். அவரைத்தான் இம்மாதிரி தீபங்கள் ஏற்றி விழா கொண்டாடுகிருேம்'' என்று ஸ்ரீ. வாரியார் கூறியதாகச் சொன்னுர். இதைப் பற்றித் தங்கள் கருத்தைத் தெரிவிக்கக் கோருகிறேன்.

தீபாவளியன்று திருச்சி வானெலியில் ஸ்ரீரங்கம் ஸ்ரீமத₃ாண்டவன் ஸ்வாமியும், சென்னை வானெலியில் வர்த்தமான அழகிய சிங்கரும் தீபாவளிபற்றிய புராணக்கதையை விவரித்து ஆசிமொழி கூறினுர்கள். ஒவ்வொரு புராணக்கதை ஒவ்வொரு விதமாகவே இருக்கும். 'இதில் இப்படி இருப்பதானல் அதிலும் இப்படியே இருக்கவேண்டும்' என்று வாரியார் கூறியது விதண்டாவாதமே. சைவவைஷ்ணவ பே₄த₃மில்லாமல் ப₄ாரத தே₃ஶம் முழுவதும் கண்ணன் பெருமையை நிலைநாட்டுவதாக நினைத்து தீபாவளியைக் கொண்டாடுகிருர்களே என்னும் வயிற்றெரிச்சல் வாரியாரை இப்படிப் பேசவைத்திருக்கிறது. இதை நாம் பொருட்படுத்தவேண்டியதில்லை.

V. ஸ்ரீதரன், செங்கல்பட்டு. (78, 79, 80, 81, 82 கேள்விகள்)

78. பகவான் கர்மவசப்பட்டவன் அல்லன் என்று கூறுகிருேம்; வராஹப்பெருமாள் பூமிதேவியைத் தூக்கி எடுக்கும் போது நரகாசுரன் பிறந்தான் என்பது எப்படி ஒட்டும்?

அங்கும் ப₄க₃வத்ஸங்கல்பத்தாலே பிறந்தான் என்றே கொள்ளவேண்டும்; ப்ராக்ருதர்களைப்போலே ஸ்த்ரீபுருஷஸம்யோக₃த்தாலே பகவானுக்குப் பிள்ளை பிறந்ததாக எந்த சாஸ்திரமும் கூறவில்லை. அவனுக்கு ப்ராக்ருதமான ஸ்த்ரீ ஸம்யோக₃மும், இந்த்₃ரியஸ்க₂லநமும் (வீர்யம் வெளிப்படுதலும்) கிடையாது என்றே சாஸ்த்ரங்கள் முழங்குகின்றன. 'அஸ்க₂லித நித்யப்₃ரஹ்மசாரி'யான கண்ணன் தீண்டிய பின்பே கரிக்கட்டையான பரீக்ஷித்தின் உடல் உயிர்பெற்ற செய்தியைப் புராணங்களில் காணலாம்.

http://acharya.org

79. ஸ்ரீவைஷ்ணவர்கள் நவராத்ரி உத்ஸவத்தை லக்ஷ்மிக்காகவே கொண்டாடுவதானால், ஸரஸ்வதிபூஜை கொண்டாடுவது பொருத்தமா ?

தாயார் ஸந்நிதி₄களில் நவராத்ரி உத்ஸவம் பிராட்டிக்கு நடைபெறுவது விஷ்ணுகோயில்களில் அநாதிகால நடைமுறையாயிருந்துவருகிறது. ஸரஸ்வதீ பூஜையைப் பல வைஷ்ணவர்கள் கொண்டாடிவருவதற்கு ஒரு காரணம் சொல்லப்படுகிறது. அதாவது:—ஹயக்₃ரீவ மூர்த்தியாய் எம்பெருமான் அவதரித்தபோது பிராட்டி வாக்₃தே₃வி, ஸரஸ்வதி என்னும் அவதாரம் எடுத்தாள் என்று சாஸ்த்ரங்களில் உள்ளதாக ஸமீபகாலத்தில் எழுந்தருளியிருந்த பரகாலஜீயர் ஸ்வாமி தமது ஹயஶிர உபாக்₂யானத்தில் நிரூபித்திருக்கிறார். விஷ்ணுசித்தவிஜயம் வேத₃ பா₄க₃த்தில் (பக்கம் 1018 to 1024) இவ்விஷயம் விரிவாக நிரூபிக்கப்பட்டுள்ளது. அந்த ஸரஸ்வதியையே நாம் பூஜிக்கிறோம்.

80. பாத்₃மபுராணத்தில் ஶிவபார்வதீ ஸம்வாத₃த்தில் ''நாராயணனுக்குத் தன்னை ஸமமாகக் கூறுகிறவர்கள் பாஷண்டிகள்'' என்று ஶிவன் கூறுகிறார். ஆனால் ஸ்ரீமத்₃ பா₄க₃வதத்தில் சில இடங்களில் ''ப₄க₃வானுக்கும் ஶிவனுக்கும் பே₄த₃ம் பாராட்டக்கூடாது. அப்படி பே₄த₃ம் கூறுபவர்கள் அறிவிலிகள் என்று சொல்லப்பட்டுள்ளது. இரண்டுமே ஸாத்விக புராணங்களாயிருக்கும்போது இவற்றில் எதை எடுத்துக்கொள்வது ?

இரண்டுக்குமே முரணில்லாமல் பொருள் உண்டாகையால் இரண்டையும் எடுத்துக்கொள்ளலாம். ஶிவனுக்கும் விஷ்ணுவுக்கும் பே₄த₃மில்லை என்று கூறியிருக்கும் பா₄க₃வதமே — ஶிவனைத் தமோகு₃ணமுள்ளவனாகவும், பரிஶுத்₃தி₄ அற்றவனாகவும், ஐஶ்வர்யத்தையே அளிக்கக்கூடியவனாகவும், மோக்ஷத்தை அளிக்க இயலாதவனாகவும், விஷ்ணுவை ஸத்வகு₃ணமுள்ளவனாகவும், ஶிவனுக்கும் பரிஶுத்₃தி₄ அளிக்கவல்ல பரமபரிஶுத்₃த₄னாகவும், ஐஶ்வர்யம், மோக்ஷம் முதலான எல்லாப் ப₂லன்களையும் அளிக்கவல்லவனாகவும் பலவிடங்களில் கூறியிருப்பதற்கு முரணில்லாமல் ஶிவவிஷ்ணு அபே₄த₃வாத₃த்தை நிர்வஹிக்கவேண்டிய கடமை அனைவர்க்கும் உண்டு. எப்படி நிர்வஹிப்பது? எனில்: ஶிவனும் மற்ற சேதநாசேதநங்களைப்போலே எம்பெருமானுக்கு ஶரீரமாய், அவனோடு ஒடுங்கி நிற்கிறனேயொழிய நாராயணனைவிட்டுப் பிரிந்து தனியாக நிற்பதில்லை. நாம் வெளியுலகில் காணும் மரமும், மனித

http://acharya.org

னும் போலே தனித்தனியாகப் பிரிந்து நிற்காமல், சூரியனும் அவனுடைய ஒளியும்போலே பிரிக்கமுடியாதபடி விஷ்ணு ஶரீரியாகவும், விஶேஷ்யமாகவும், ப்ரகாரியாகவும், ஶிவன் ஶரீரமாகவும், விஶேஷணமாகவும், ப்ரகாரமாகவும் சேர்ந்தே இருக்கிறார்கள் என்பதே உண்மை. இதையே பொய்கை யாழ்வாரும் "பொன்திகழும்மேனிப் புரிசடையம் புண்ணியனும், நின்றுலகம் தாய நெடுமாலும், என்றும் இருவரங்கத்தால் திரிவரேலும், ஒருவன் ஒருவனங்கத் தென்றுமுளன்" [முதல் திரு 98] என்று அருளிச்செய்தார். 'ஒருவன் ஒருவனங்கத் தென்றுமுளன்' என்றது 'ஶிவன் விஷ்ணுவின் ஶரீரமாகவே என்றும் இருக்கிறான்' என்று பொருள்படும். நம்மாழ்வாரும் "தாமோதரன் உருவாகிய சிவற்கும் திசைமுகற்கும் ஆமோ தர மறிய எம்மானை என்னாழி வண்ணனையே" [திருவாய் 2-7-12] என்று ஶரீர ஶரீரிபாவத்தால் அபேதமும், ஜ்ஞானம் ஶக்தி முதலானவற்றில் மிகவும் பேதமும் ஶிவ விஷ்ணுக்களிடையே உண்டு என்று காட்டியிருக்கிறார். ஆக, "ஶரீர ஶரீரிகளாக ஶிவ விஷ்ணுக்கள் ஒன்றியிருக்கிறார்கள் என்று உணராமல், மரமும், மனிதனும்போலே தனித்தனியே நிற்கிறார்கள் என்று நினைப்பவர்கள் அறிவிலிகள்" என்றே ஸாத்விக புராணங்களி லுள்ள ஶிவ விஷ்ணு அபேதவசனங்களுக்குப் பொருள் கொள்ளவேண்டும். இப்படி ஶிவ விஷ்ணுக்களுக்கு மாத்திர மல்லாமல் "உலகம் முழுவதற்குமே எம்பெருமானோடு அபேதம் உண்டு. அந்த அபேதத்தை உணராதவர்கள் அறிவிலிகள்" என்று கூறும் உபநிஷத்துக்கள் முதலான ஶாஸ்த்ர வசநங்களுக்கும், பேதத்தைக் காட்டும் பற்பல வசநங்களோடு முரணில்லாமல் இப்படியே ஸ்ரீபாஷ்யாதிகளில் நிர்வாஹம் காட்டப்பட்டுள்ளது.

81. பாஞ்சராத்ராதிகரணத்தில், பாஞ்சராத்ரத்தில் காணப்படும் ஜீவோத்பத்தியை ஶங்கரர் கண்டித்திருப்பதற்கு ஸ்ரீராமாநுஜர் ஸ்ரீபாஷ்யத்தில் என்ன ஸமாதானம் அருளுகிறார்?

பாஞ்சராத்ரத்தில் ஜீவனுக்கு உத்பத்தி இல்லை என்று பல விடங்களில் கூறப்பட்டுள்ளது. "ஸங்கர்ஷணோ நாம ஜீவோ ஜாயதே" [ஸங்கர்ஷணன் என்னும் ஜீவன் பிறக்கிறான்] என்று பாஞ்சராத்ரத்தில் ஓரிடத்தில் கூறியிருப்பது ஜீவனுக்கு அபிமானி தேவதையான ஸங்கர்ஷணன் என்னும் வ்யூஹமூர்த்தியின் அவதாரமே; அங்கு ஜீவனின் பிறப்பு கூறப்படவில்லை—என்பது ஸ்ரீராமாநுஜர் ஸ்ரீபாஷ்யத்தில் அருளிய பதிலின் ஸாரம். •

http://acharya.org

82. உத்தமூர் வீரராகவாசார்ய ஸ்வாமியின் பரமார்த்த₂ பூ₄ஷணம், கோழியாலம் ரங்கநாத₂ாசார்ய ஸ்வாமியின் விஶிஷ்டாத்₃வைத விஜயம் ஆகிய க்₃ரந்த₂ங்களுக்கு அத்₃வைதிகளால் ஏதாவது பதில் கூறப்பட்டுள்ளதா?

பரமார்த்த₂ பூ₄ஷணத்திற்கு எவ்வித பதிலும் கூறுமலே அதற்கு லக்ஷ்யமான அநந்தகிருஷ்ண ஶாஸ்த்ரி காலமாகி விட்டார். விஶிஷ்டாத்₃வைத விஜயத்திற்கு லக்ஷ்யமான ஜக₃தீ₃ஶ்வர ஶாஸ்த்ரி அந்த க்₃ரந்த₂த்தை நம்மிடமிருந்து பெற்றவுடன் அதற்குப் பதில் எழுதப் போவதாக நமக்குக் கடிதம் எழுதினர். அக்கடிதம் ஸு₃த₃ர்ஶனத்திலும் வெளியிடப் பட்டது. பல வருஷங்களாகியும் இன்றுவரை யாதொரு பதிலும் வெளிவரவில்லை. இன்றும் அவர் சென்னையில் வாழ்கிருர்.

திருவேடகம் கருத்தரங்கில் கேள்வி பதில்கள்

(83 to 89 கேள்விகள்)

[மதுரை ஜில்லா சோழவந்தானுக்கு அருகிலுள்ள திருவேடகம் விவேகானந்தா கல்லூரியில் பல மத ஞானிகளின் தனித்தன்மைகளைப் பற்றிய கருத்தரங்கு ஒன்று நடைபெற்றது. திருச்சி ஜில்லா திருப்பராய்த்துறையில் குருகுலப்பள்ளியும், திருவேடகத்தில் விவேகானந்தா கல்லூரியும் நடத்திவரும் (ராமக்ருஷ்ண மடத்தைச் சேர்ந்த) ஸ்வாமி சித்பவானந்தர் இக்கருத்தரங்குக்குத் தலைமை வகித்தார். அதில், வைஷ்ணவ ஞானிகளின் தனித்தன்மைகளைப் பற்றிய கட்டுரையொன்று நம்மால் வாசித்தளிக்கப்பெற்றது. அச்சிட்டு வினியோகிக்கவும் பெற்றது. ஸு₃தர்சனத்திலும் (இதழ் 372) இது இணைக்கப்பட்டது. கருத்தரங்கில் கூடியிருந்தவர்கள் பெரும்பாலும் சைவாத்₃வைதிகள். அவர்கள் நம்மைப் பல கேள்விகள் கேட்டார்கள். சிலர் சில கருத்துக்களும் தெரிவித்தார்கள். அவற்றுக்கு நம்மால் அங்கு சுருக்கமாக பதில் அளிக்கப்பட்டது. அக்கேள்விகளையும், அவற்றுக்குச் சற்று விரிவான பதிலையும் இங்கு தருகிறோம்.]

83. கீ₃தையில் — எந்த தெய்வத்தைத் தொழுதாலும் தன்னையே தொழுததாகும் என்று கண்ணன் கூறியிருக்கும்

http://acharya.org

போது, நீங்கள் விஷ்ணுவே பரம்பொருள் என்றும், அவனைத் தொழுதால்தான் மோக்ஷம் கிடைக்கும் என்றும், மற்ற தெய்வங்களைத் தொழுதால் மோக்ஷம் கிடைக்காது என்றும் கூறியிருப்பது எப்படிப் பொருந்தும் ?

கண்ணன் கீ₃தையில், "யே த்வந்ய தே₃வதாப₄க்தா: யஜந்தே ஶ்ரத்₃த₄யாऽந்விதா:। தேऽபி மாமேவ கௌந்தேய ! யஜந்த்யவிதி₄பூர்வகம் ॥" [கீ₃தை 9-23] [எவர்கள் மற்ற தே₃வதைகளுக்கு ப₄க்தராயிருந்துகொண்டு ஶ்ரத்₃தை₄யோடு அவர்களை ஆராதி₄க்கிறார்களோ, அவர்களும் (அந்த தே₃வதைகளின் உள்ளிருக்கும்) என்னையே ஆராதி₄க்கிறார்கள். ஆனாலும் அவர்கள் (நான் உள்ளிருக்கிறேன் என்று உணராமையால்) விதி₄ப்படி ஆராதி₄ப்பதில்லை.] என்னும் ஶ்லோகத்தில், எந்த தெய்வத்தைத் தொழுதாலும் தன்னையே தொழுததாகும் என்று சொல்லும்போது அது முறையான ஆராத₄னமல்ல என்றும் கூறியிருப்பதைக் காணவேணும். "அவிதி₄ பூர்வகம்" என்றவிடத்தில், "அஜ்ஞாந பூர்வகம்" [அஜ்ஞானத்தோடு ஆராதி₄க்கிறார்கள்] என்று ஆதி₃ஶங்கரரும் பா₄ஷ்யம் செய்தார். கீ₃தை 7-20ல், "ஒவ்வொரு ப்ராக்ருத ப₂லன்களின் விருப்பத்தாலே, அறிவுகெட்டுப்போன மனிதர்களே மற்ற தெய்வங்களை ஆராதி₄க்கின்றனர்" என்று கூறி, 23-வது ஶ்லோகத்தில் "அற்பபு₃த்₃தி₄ படைத்த அவர்களுக்கு அற்பமாய் அஸ்தி₂ரமான ப₂லன்களே கிடைக்கும். என்னையடைந்தால்தான் அனந்தமாய், ஸ்தி₂ரமான ப₂லன் கிடைக்கும்" என்று கண்ணன் மிகத் தெளிவாகக் காட்டியிருக்கிறான். இவ்விடத்தில் ஆதி₃ஶங்கரர் பா₄ஷ்யமிடுகையில், "'படுகிற ஶ்ரமம் ஒன்றாயிருந்தும், என்னையடைந்து, அனந்தமாய், ஸ்தி₂ரமான மோக்ஷ ப₂லனைப் பெறாமல், மற்ற தெய்வங்களை அடைந்து அல்பமாய், அஸ்தி₂ரமான தாழ்ந்த ப₂லன்களைப் பெற்றுப் போகிறார்களே' என்று ப₄க₃வான் கஷ்டப்படுகிறான்" என்று கூறியிருக்கிறார். ஆகையால், "பரம்பொருளான விஷ்ணுவைத் தொழுதால்தான் மோக்ஷம் கிடைக்கும். மற்ற தெய்வங்களைத் தொழுதால் மோக்ஷம் கிடைக்காது" என்பது ஆதி₃ஶங்கரரின் பா₄ஷ்யப்படியே கீ₃தையின் ஸித்₃தா₄ந்தம் என்று விளங்குகிறது.

http://acharya.org

84. *"ஏகம் ஸத் விப்ரா ப₃ஹுதா₄ வத₃ந்தி" ['ஸத்' எனப் படும் பரம்பொருள் ஒன்றே. ஜ்ஞானிகள் அதைப் பல பெயர்க ளிட்டு அழைக்கின்றனர்] என்று ருக்₃ வேத₃த்தில் "எந்தப் பெயரிட்டு அழைத்தாலும் ஒரே பரம்பொருளைக் குறிக்கிறது" என்று சொல்லியிருக்கும்போது, தே₃வதைகளுக்குள் எப்படி பே₄த₃ம் கற்பிக்க முடியும் ?"*

எந்தப் பொருளைக் குறிக்கும் எந்தச் சொல்லும் அவற் றுக்கு அந்தர்யாமியான பரம்பொருளையும் குறிக்குமாகையால், ஜ்ஞானிகள் எல்லாச் சொற்களாலும் பரம்பொருளைக் குறிக் கின்றனர்—என்பது இந்த ருக்₃ வேத₃ வாக்யத்தின் பொருள். இப்படிக் கூறும் ருக்₃வேத₃மே அஷ்டகம் (5-6-24)ல் "விஷ்ணுவே! இறந்தகாலம், நிகழ்காலம், வருங்காலம் என் னும் முக்காலத்தில் இருக்கும் எவனுமே உன்னுடைய பெருமையின் மேலெல்லையை அறிவதில்லை" என்றும், அஷ்டகம் 1-2-7ல் "மேலான உலகமான பரமபத₃ம் விஷ்ணுவி னுடையதேயாகும்" என்றும் ஓதிற்று. யஜுர்வேத₃ம் (ஸம் ஹிதை 5-5) "தே₃வதைகளுள் மிகத் தாழ்ந்தவன் அக்₃னி; மிக உயர்ந்தவன் விஷ்ணு" என்று ஓதிற்று. "நாராயணனே பரப்₃ரஹ்மம்" என்றும், "அவனே எல்லா தெய்வங்களுக் கும் ஆத்மாவாயிருப்பவன். மற்ற தெய்வங்கள் அவனுக்கு அங்க₃ங்களாயிருப்பவை" என்றும் தைத்திரீய உபநிஷத் ஓதிற்று. "தே₃வதைகளுக்கெல்லாம் மேலான தே₃வதையா யிருப்பவன் ஒரு தே₃வதையே" என்று ஶ்வேதாஶ்வதரம் முதலான மற்ற உபனிஷத்துக்களும் ஓதின. ஸ்ருஷ்டி காலத் தில் நாராயணனிடமிருந்தே பிரமன், சிவன் முதலிய மற்ற தெய்வங்கள் பிறப்பதாக நாராயணோபனிஷத் ஓதிற்று. "ப்ரளய காலத்தில் நாராயணன் ஒருவனே இருந்தான். பிரமனு மில்லை; சிவனுமில்லை" என்று மஹோபனிஷத் ஓதிற்று. இப்படி பற்பல வேத₃வேதா₃ந்த வாக்யங்கள் நாராயணனென்ற விஷ்ணுவையே பரமாத்மாவாகவும், மற்ற தெய்வங்களை அவனால் படைத்து, அளித்து, அழிக்கப்படுகிறவர்களாகவும், ஸர்வாந்தர்யாமியான நாராயணனுக்கு மற்ற தெய்வங்கள் அங் க₃ங்களாயிருப்பவர்களென்றும் ஓதியிருக்கையில், இந்தப் பற்பல வாக்யங்களால் தேறும் பரம்பொருளுக்கும், மற்ற தெய்வங்

http://acharya.org

களுக்கும் ஏற்படும் ஏற்றத்தாழ்வை, ஒரே பரம்பொருளை பற்பல பெயர்களால் ஜ்ஞானிகள் அழைக்கிறார்கள் என்னும் ருக்₃வேத₃ வாக்யத்தைக்கொண்டு எப்படி இல்லைசெய்ய முடியும்? இவ்வாக்யங்களுக்கு முரணில்லாமல் "ஸர்வாந்தர்யாமியாகையாலே எல்லாச் சொற்களாலும் குறிக்கப்படும் 'ஸத்' எனப்படும் பரம்பொருள் நாராயணனே" என்று அவ்வாக்யத்திற்குக் கருத்துரைப்பதே பொருத்தமாகும்.

85. 'நாராயணன்' என்பதற்கு 'உலகெங்கும் பரந்த ஒரு பொருள்' என்று பொருளாயிருக்கும்போது, "ஶங்க₂ சக்ர க₃தை₃களை த₄ரித்த ஒரு உருவத்தை உடையவன்" என்னும் குறுகிய பொருளை எப்படிக் கொள்ளமுடியும்?

நாராயணன், வாஸுதே₃வன், விஷ்ணு முதலான ஶப்₃த₃ங்களால் வேத₃வேதா₃ந்தங்களில் குறிக்கப்படும் பரதெய்வம், உலகெங்கும் பரவிய ஸ்வரூபத்தையுடையவன் என்றே நாம் கொள்கிறோம். அதோடு, அந்த வேத₃வேதா₃ந்தங்களிலும் அவற்றை விளக்கவந்த ஸ்ம்ருதிஇதிஹாஸபுராணங்களிலும், கீ₃தை முதலான லோக ப்ரஸித்₃த₄மான ஶாஸ்த்ரங்களிலும் அந்த நாராயணன் அடியார்களுக்கு அருள் புரிவதற்காகத் தன் விருப்பத்தாலேயே அப்ராக்ருதமாய், கோடிஸூர்ய ப்ரகாஶமாய், ஶங்க₂சக்ரக₃தா₃த₄ரமாய், பல பல திருவாப₄ரணங்களை உடையதாய், மார்பிலே லக்ஷ்மீதே₃வியை த₄ரித்திருப்பதான திருமேனியையும் எடுத்துக் கொண்டிருக்கிறான் என்று முழங்கியிருப்பதை ஒப்புக்கொள்ளத் தடையென்ன? வெறும் உருவத்தையே பரம்பொருளாக வைஷ்ணவ மதத்தில் கொள்ளவில்லை. கண்ணால் காணமுடியாத உலகெங்கும் பரந்த பரம்பொருள், அடியார்களுக்கு அருள்புரிய அப்ராக்ருதமான பற்பல திருமேனிகளை எடுத்துக்கொள்கிறது என்றே கொள்ளுகிறோம். ஶாஸ்த்ரங்களில் கூறியுள்ளபடி இப்படிக் கொள்ளுகிறோமாகையாலே இது குறுகிய பொருளாகாது.

86. ஸ்வர்க்க₃ம், ஶிவலோகம், விஷ்ணுலோகம் ஆகியவைகளுக்குள் என்ன வேறுபாடு?

ஸ்வர்க்க₃ம், ஶிவலோகம், ப்₃ரஹ்மலோகம் ஆகியவை இந்த ப்₃ரஹ்மாண்ட₃த்துக்குள் அடங்கியவை. ப்ராக்ருதமான

http://acharya.org

ஸத்வரஜஸ்தமோகு₃ணங்களோடு கூடிய உலகங்கள் இவை. கர்மத்துக்குக் கட்டுப்பட்டவை. ஆகையால் இவ்வுலகங்களில் வாழ்பவர்களுக்கு நிறைந்த ஜ்ஞானமும், ஆனந்த₃மும் கிடையாது. விஷ்ணுவின் உலகம் '*விஷ்ணோ: பரமம் பத₃ம்*" என்றும், "*ரஜஸ: பராகே*" என்றும் ருக்₃வேத₃ விஷ்ணுஸூக்தங்களிலும், '*தமஸ: பரஸ்தாத்*' என்று புருஷஸூக்தத்திலும் ஓதப்படுகையாலே ரஜஸ்தமோகு₃ணங்கள் கலந்த ப்₃ரஹ்மாண்ட₃த்திற்கு அப்பாற்பட்டது. ஶுத்₃த₄ஸத்வமயமாய், அப்ராக்ருதமாயிருப்பது. இவ்வுலகையடைந்தவர்கள் எல்லாக் கர்மங்களும் நீங்கப்பெற்று, நிறைந்த ஜ்ஞானத்தையும், ஆனந்த₃த்தையும் உடையவர்களாய், பரம்பொருளான நாராயணனை அநுப₄வித்துக் கைங்கர்யம்செய்து பேரின்பமடைந்து, மறுபடியும் ப்ராக்ருத லோகத்துக்குத் திரும்பிவந்து ப்ராக்ருதமான பிறப்பு இறப்பு முதலானவற்றை அடையாதவர்களாய், எப்போதும் அப்பரம பத₃த்திலேயே வாழ்கிறார்கள். இதையே கீ₃தையில் கண்ணனும் "*ஆப்₃ரஹ்மபு₄வநால்லோகா: புநராவர்த்திநோऽர்ஜுந! | மாமுபேத்ய து கௌந்தேய! புநர்ஜந்ம ந வித்₃யதே ||*" [8-16] [அர்ஜுந! பிரமனின் உலகம் வரையிலுள்ள எல்லா உலகங்களும் அழியக்கூடியவை; என்னையடைந்தாலோவெனில், இவ்வுலகில் மறுபடி பிறப்பது கிடையாது] என்று அருளிச்செய்தான்.

87. ஒருவன் தண்ணீர்வேண்டும் என்கிறான்; ஒருவன் (ஆங்கிலத்தில்) water *வேண்டும் என்கிறான்; ஒருவன் (இந்தியில்) பானீ வேண்டும் என்கிறான். ஆனால் எல்லோரும் வேண்டுவது ஒரு பொருளேயன்றோ; அதுபோலே சிவன், விஷ்ணு முதலான எந்தப் பெயரைச் சொன்னாலும் ஒரு பரம்பொருளையே குறிக்கிறது என்று கொண்டுவிடலாமே.*

வேத₃ ஶாஸ்த்ரங்களில்—பிரமன், விஷ்ணு, சிவன் முதலான பல தெய்வங்கள் இருப்பதாகவும், அவர்களில் ஒருவனே பரமாத்மாவென்றும், காரணமான அவனை உபாஸித்தால், அல்லது ஶரணமடைந்தால்தான் மோக்ஷமடையமுடியும் என்றும் சொல்லப்பட்டுள்ளது. இப்படியிருக்கும்போது சாஸ்திரவசனங்களை ஆராய்ந்து, பரமாத்மாவான தேவன் யார் என்று நிர்ணயம்செய்து, அவனிடம் ப₄க்தியோ, ஶரணாக₃தியோ

http://acharya.org

செய்து ஆத்மாவுக்கு நன்மைதேடவேண்டுமேயொழிய, 'எந்தப் பெயரைச் சொன்னாலும் ஒரு பரம்பொருளையே குறிக்கிறது' என்று வாய்வேதா₃ந்தம் பேசிக்கொண்டு, அந்தப்பொருளை யார் எத்தகையவன் என்று தெரிந்துகொள்ளாமல் காலங் கழிப்பதால் ஆத்மாவுக்கு நன்மை ஏற்படாது. கேள்வியில் காட்டப்பட்டுள்ள த்₃ருஷ்டாந்தம் பரம்பொருள் விஷயத்தில் பொருந்தாது. பரம்பொருள் மற்ற எல்லா தே₃வதைகளைக் காட்டிலும் மேலானதொரு தே₃வதை என்று முன் எடுத்த வேத₃வாக்யங்கள் தெளிவாகக் காட்டுகின்றன. அப்படி யிருக்கும்போது, ஒரே பொருளைக்கூறும் பல சொற்களை த்₃ருஷ்டாந்தமாகக் காட்டி, பொருள் ஒன்றே என வாத₃ம் செய்வது பொருந்தாது. வேத₃ஶாஸ்த்ரங்களில் சொல்லப்பட்ட பரதே₃வதையினுடைய ஸ்வரூபரூபகு₃ணங்களை ஆராய்ந்து தெரிந்துகொண்டு அந்த தே₃வதையிடம் அன்பு செலுத்தாமல், 'அவன் எப்பொருளைக் குறிக்கும் எந்தச் சொல்லாலும் சொல்லத் தக்கவன்' என்று கூறும் ஒரு சாஸ்திரவாக்யத்தை மாத்திரம் பற்றிக்கொண்டு, எந்தப் பெயரைச்சொல்லி எந்த தெய்வத் தைத் தொழுதாலும் மோக்ஷம் கிடைத்துவிடும் என்று மனப் பால் குடிப்பது சாஸ்திரவிருத்₃த₄மேயாகும்.

88. ராமகிருஷ்ணர் ஒரு கதை சொல்லுவார். அதாவது:- ராமன் வானரசேனையால் சூழப்பட்டவனாய், தன் இஷ்டதெய் வத்தைத் தேடிச் சென்றான்; சிவன் பூ₄தக₃ணங்களால் சூழப் பட்டவனாய் தன் இஷ்டதெய்வத்தைத் தேடிச்சென்றான். ராமனும், சிவனும் அருகில் நெருங்கியவுடன் தத்தம் இஷ்டதெய்வங்களைக் கண்ட களிப்போடு ஒன்றாகக் கலந்து மறைந்துவிட்டனர். வானரசேனையும், பூ₄தக₃ணங்களும் ஒருவரையொருவர் அடித்துக் கொண்டு மடிந்தனர். சைவ வைஷ்ணவர்கள் 'சிவனே பரம் பொருள்' 'விஷ்ணுவே பரம்பொருள்' என்று ஒருவர்க்கொருவர் சண்டைபிடிப்பது இதுபோன்றதேயாகும். சிவன் விஷ்ணு எல் லாம் ஒன்றே என்னும் வேதா₃ந்த மதமே சரியாகும்.

இந்தக் கதை ராமக்ருஷ்ணரின் கற்பனையில் தோன்றியதே யொழிய, எந்த சாஸ்திரத்திலும் இதற்கு ஆதா₄ரமில்லை. வேத₃ ஶாஸ்த்ரவிசாரம் செய்து, பரம்பொருள் யார் என்று நிர்ண

http://acharya.org

யிப்பது சண்டையாகாது. ஒரு விசாரமும் செய்யாமல், எல்லா தெய்வங்களும் ஒன்றே என்று கூறுவது மாத்திரம் சண்டை யல்லவென்றும், சைவ வைஷ்ணவர்கள் சொல்லுவது மாத்திரம் சண்டையென்றும் கூறி சாஸ்திரவிசாரத்தை அடக்குவது எந்த நியாயத்திலும் சேராது. சிவன் விஷ்ணு முதலான தெய்வங்களுக்குள் ஏற்றத் தாழ்வையும், விஷ்ணுவே பரம்பொருள் என்னும் உண்மையையும் ஏராளமான வேத₃வாக்யங்கள் முழங்கியிருக்கும்போது 'சிவனும் விஷ்ணுவும் ஒன்றே' என்று திருப்பித் திருப்பிச் சொல்லி, கற்பனைக் கதையை த்₃ருஷ்டாந்தமாகக் காட்டி விடுவதால் மாத்திரம் அது வேதா₃ந்தமதமாகிவிடாது.

89. பார்வதி விஷ்ணுவுக்குத் தங்கை என்று புராணங்களில் சொல்லப்படுகிறதே; இப்படி உறவுள்ள இவர்களிடையே ஏன் வேற்றுமைகளைக் கற்பித்துச் சண்டை போடவேணும்?

அவதாரங்களில் பரம்பொருளான நாராயணன் மற்ற ஜீவர்களோடு எத்தனையோ உறவுகளைக் கொள்கிறான். தசரதன் முதலானவர்களுக்குப் பிள்ளையாகக் கூட ஆகிறான். அதனால் தசரதனும், ராமனைப்போல் பரம்பொருளே என்று கொண்டு விடமுடியாதே; அதுபோல் க்ருஷ்ணவதாரத்தில் காளி கண்ணனுக்குத் தங்கை முறையானாலும் அவள் பரம்பொருளாக முடியாது. இவ்வுண்மையைச் சொல்லுவது குற்றமல்ல; சண்டையும் ஆகாது. உண்மையை மறைப்பதே குற்றமாகும்.

S. வேங்கடம் சமயபுரம் (90, 91 கேள்விகள்)

90. 1978 நவம்பர் கலைமகளில் "என்மகளை எங்கும் காணேன்' என்னும் பெரியாழ்வார் பற்றிய கதையில் ஸ்ரீவில்லிபுத்தூர் முதலான பற்பல தி₃வ்யதே₃ஶங்களில் காணப்படும் பெரியாழ்வார் அர்ச்சைத் திருமேனிகளுக்கு முரணான சிகாபுண்ட்₃ரங்களோடு பெரியாழ்வாரைச் சித்திரம் தீட்டியிருப்பதையும், அவரைச் சமரசவாதி₃யாக்கியிருப்பதையும் பார்த்தீர்களா?

பெரும்பாலான கோயில்களில் பெரியாழ்வார் திருமுக மண்டலத்தில் காணப்படும் திருமண்காப்பு இவர்கள் கண்ணில் படாதது வியப்பில்லை. ஒரு சில வடகலைக் கோயில்களில் வடகலைத் திருமண்காப்போடு பெரியாழ்வார் காட்சியளித்தாலும், அங்கும் பூர்வசிகையுடனே காட்சியளிப்பது இவர்கள்

http://acharya.org

கண்ணில் படாதது மிகவும் வியத்தற்குரியது. இதையாவது ஆராய்ச்சியின்மை என்று கூறி மன்னித்துவிடலாம். பாண்டிய ராஜஸத₃ஸ்ஸில், விஷ்ணுவே பரம்பொருள் என்று பரதத்துவ நிர்ணயம் செய்தார் என்று (தென்கலை வடகலை எனும் வாசியில் லாமல்) வைணவவுலகம் முழுவதும் ஆயிரம் வருடங்களுக்கு மேலாகக் கொண்டாடிவரும் பெரியாழ்வார், தன் தந்தைக்கு எம்மதமும் சம்மதந்தான் என்று தன்வாயால் கூறுவதாக இக் கற்பனைக் கதையில் ஓர் வாக்கியம் வருகிறது. இது உண்மைக்கு நேர்மாறானதாகையால் மன்னிக்கமுடியாத குற்றமல்லவா? பாண்டியன் கொண்டாடப் பல மதத்தவரை வென்று கிழி யறுத்தவராய், *"எருத்துக்கொடியுடையானும், பிரமனும் இந்தி ரனும் மற்றும் ஒருத்தரும் இப்பிறவி என்னும் நோய்க்கு மருந் தறிவாருமில்லை"* [பெரியாழ்வார் திருமொழி 5-3-6] முதலான விடங்களில் விஷ்ணுபரத்வத்தைத் தம் தி₃வ்யப்ரப₃ந்த₄ங்களி லும் நிலைநாட்டியிருக்கும் பெரியாழ்வார் வாக்கில் இப்படி ஒரு வசனத்தைக் கற்பித்திருப்பது, கலைமகள்போன்ற பத்தி ரிகைகள் வைணவத்தை அழிப்பதற்கு இப்படிப்பட்ட திட்ட மிட்ட பொய்ப்பிரசாரங்களைச் செய்துவருகின்றன என்பதை வெளிப்படையாகக் காட்டுகிறது.

91. டிசம்பர் கலைமகளில் " ப₄க்த்யா மாமபி₄ஜாநாதி " என்று தொடங்கும் கீ₃தா ஶ்லோகத்தில் தன்னை ப₄க்தி செய் பவர்கள் தானாகவே ஆகிவிடுவதாகக் கண்ணன் சொல்லி யிருப்பதாகக் காமகோடி பீடாதிபதி கூறியிருப்பது உண்மையா?

"மாம் தத்த்வதோ ஜ்ஞாத்வா தத₃நந்தரம் (மாம்) விஶதே" [18-55] [என்னை உள்ளபடி அறிந்து, அறிந்தபின்பு என்னுள் நுழைகிறான்] என்று கூறுகிறது இந்த ஶ்லோகம். 'என்னுள் நுழைகிறான்' என்றது 'நானாகவே ஆகிறான்' என்று எப்படிப் பொருள்படும்? அடுத்த ஶ்லோகத்தில் *"ஶாஶ்வதம் பத₃ம் மத் ப்ரஸாத₃ாத் அவாப்நோதி'* [18-56] [என் அருளாலே ஶாஶ் வதமான பத₃த்தை அடைகிறான்] என்று உள்ளது. இவை யெல்லாம் முக்தியிலும் பே₄த₃த்தை நிலைநாட்டித் தருமே யொழிய, காமகோடி கூறுவதுபோல் அபே₄த₃த்தைச் சொல்ல அந்த ப்ரகரணத்தில் இடமேயில்லையே.

http://acharya.org

டில்லியிலிருக்கும் சில அன்பர்கள். (92 to 97 கேள்விகள்)

92 ஸுத₃ர்ஶனத்தில் சைவத்தைக் கண்டிப்பானேன்? சிவனைத் தாழ்த்திக் கூறுவானேன்?

இன்றைய தமிழ்நாட்டில் லக்ஷக்கணக்கில் விற்பனையாகும் விகடன், கல்கி, இதயம், தினமணிசுடர், கலைமகள் போன்ற பத்திரிகைகளில் விஷ்ணுவைத் தாழ்த்தியும், வைணவத்தைத் திரித்தும் கூறும் கட்டுரைகள் எவ்வளவு பிரசுரமாகின்றன? அவைகளால் வைணவர்கள் எத்தனைபேர் மூளைச்சலவை (Brain Wash) செய்யப்பட்டு விட்டார்கள்? காமகோடி பீடாதி₄பதி, வாரியார் போன்றவர்கள் விஷ்ணு வைஷ்ணவ த்₃வேஷ ப்ரசாரங்கள் எவ்வளவு செய்கிறார்கள்? இக்கேள்விகளை ஆராய்ந்தால், இதன் பிரதிப₂லிப்பே ஸுத₃ர்ஶனத்தில்வரும் சைவ க₂ண்ட₂நமும், சிவனுடைய தாழ்வுகளைக் கூறுவதும் என எளிதில் விளங்கும். ஸுத₃ர்ஶனத்தைக் கண்டு கலங்கிய நம் அன்பர்கள் இப்பத்திரிகைகளில் விஷ்ணு வைஷ்ணவ த்₃வேஷ ப்ரசாரம் வராதபடியும், வாரியாரும் காமகோடி பீடாதி₄பதியும், காமகோடிக்கு அடிமைப்பட்ட அக்₃நிஹோத்ரி, முக்கூர் ஸ்ரீநிவாஸவரத₃ர் போன்றவர்களும் விஷ்ணு வைஷ்ணவ த்₃வேஷ ப்ரசாரத்தில் ஈடுபடாதபடியும் செய்தால், ஸுத₃ர்ஶனத்தில் சைவக₂ண்ட₂னமும், சிவனுடைய தாழ்வுகளைக் கூறுவதும் இல்லாமல் அடியேன் கவனித்துக் கொள்கிறேன். சிவனையோ சைவத்தையோ தாக்கி நமக்கு ஆகவேண்டியது எதுவுமில்லை.

93. "முனியே நான்முகனே முக்கண்ணப்பா" "அரியை அயனை அரனை அலற்றி" என்று ஆழ்வார் சிவனை வழிபட்டிருக்கிறாரே அல்லது துதித்திருக்கிறாரே?

"*மற்றைத்தெய்வம் நாடுதிரே*" "*மற்றைத்தெய்வம் விளம்புதிரே*" "*பரன் திறமன்றித் தெய்வம் மற்றில்லை*" "*முதற்பெரும் கடவுள் நிற்பப் புடைப்பல தானறி தெய்வம் பேணுதல் தனது புல்லறிவு*" என்று ஆழ்வார் மற்ற தெய்வங்களைத் துதிப்பதும் வழிபடுவதும் தவறு என்று உபதே₃ஶித்திருக்க, அவர் இப்பாசுரங்களில் அதே தவறைச் செய்வாரா? "*நீராய் நிலனாய்...சிவனாய் அயனாய்*" என்று அருளியிருக்கை

http://acharya.org

யாலே, அவர் நீர் நிலன் முதலானவற்றையும் வழிபட்டார் அல்லது துதித்தார் என்று கொள்ளலாமா? இதை ஆராய்ந்தால், ஆழ்வார் நீருக்கும், நிலனுக்கும், சிவனுக்கும், பிரமனுக்கும் உள்ளிருக்கும் நாரணனையே இப்பாசுரங்களில் பாடினார் என எளிதில் விளங்கும்.

94. "யதீ₃ய ஶிக₂ராக₃தாம் ஶஶிகலாம் து" [7] என்னும் ஸுந்த₃ரபா₃ஹுஸ்தவத்தில் சிவனைக் கூரத்தாழ்வான் வழிபட்டிருக்கிறாரே?

இந்த ஶ்லோகத்தில், திருமாலிருஞ்சோலைமலையின்மேல் உள்ள குரங்குகள்கூடச் சந்திரமண்ட₃லத்தை எட்டிப்பிடிக்கும் மரங்களின்மேல் தாவும்போதும், தே₃வதாந்தரமான சிவனின் ஸம்ப₃ந்த₄ம் பெற்றிருக்கையாலே சந்திரனைத் தீண்டுவதில்லை என்றே ஆழ்வான் பாடியிருக்கிறார். உங்கள் நோக்கின்படி இது கடுமையான சிவ நிந்தையாகுமேயொழியத் துதியாகாதே!.

95. திருவாழியாழ்வானிடம் ருத்₃ராம்ஶம் உள்ளதே?

எந்த சாஸ்திரத்தில் இது உள்ளது? சிவனிடம் உள்ள தமோகு₃ணத்தைப் பயன்படுத்திக்கொண்டு கோபத்தைக் கிளப்பிவிட்டு, ஸம்ஹாரத்தைச் செய்யும்படி பண்ணுபவன் நாராயணனே என்று எல்லா சாஸ்திரங்களும் சொல்லாநிற்க, கோபமுள்ளவிடமெல்லாம் ருத்₃ராம்சம் என்று காமகோடிக் கூட்டம் பிதற்றுவதை இப்படிக் கிளிப்பிள்ளைபோல் திருப்பிக் கூறலாமா!.

96. திருமாலிருஞ்சோலைமலை அஷ்டோத்தரத்தில் "சிவாய நம:" என்று உள்ளதே! ஆகையால் சிவன் நாமம் கைக்கொள்ளத் தக்கதேயன்றோ.

விஷ்ணு ஸஹஸ்ரநாமத்திலேயே சிவன், சம்பு₄, ருத்₃ரன் முதலான நாமங்கள் விஷ்ணுநாமங்களாகப் படிக்கப்பட்டிருக்கின்றன. தாத்தாவின் பெயரைப் பேரனுக்கு வைக்கும் ரீதியில், பிரமன் தன் தகப்பனாரான நாராயணனுடைய ருத்₃ரன் முதலான நாமங்களைத் தன் பிள்ளைக்கு வைத்தான் என்று ஶதபத₂ ப்₃ராஹ்மணம் ஓதுவதை விஷ்ணுசித்தவிஜயத்தில் எடுத்துக்காட்டியிருக்கிறேன். உலகிலுள்ள எல்லாப்

http://acharya.org

பொருள்களின் பெயர்களும் பரம்பொருளின் பெயர்களே, தனக்குச் சில தனிப்பெயர்களை வைத்துக்கொண்டு, மற்ற பொருள் ஒவ்வொன்றுக்கும் தன் பெயர்களில் சிலவற்றை வழங்கியிருக்கிறான் அவன் என்று வேத₃வேதா₃ந்தங்கள் கூறுகின்றன. அப்படியிருக்கும்போது இதில் மயங்குவானேன்?.

97. "ஏறு திருவுடையான்" என்று ஆண்டாளும் சிவ வாஹனத்தைப் பாடியிருக்கிறாளே? [ஏறு-காளை]

இது சிரிக்கத்தக்கது. 'மார்பிலே ஏறியிருக்கும் திருவாகிற லக்ஷ்மியை உடையவன்" என்பதே இத்திருநாமத்தின் பொருள். இங்கு ஏறு என்றால் காளை என்று கொண்டால் இத்திருநாமத்திற்குப் பொருளே ஏற்படாது. இத்திருநாமத்தையே கூரத்தாழ்வான் "ஆரூட₄ஸ்ரீ:" என்று ஸுந்த₃ர பா₃ஹுஸ்தவத்தில் மொழிபெயர்த்தார்.

அண்ணாவியார் R ஸ்ரீநிவாஸன், ஆழ்வார்திருநகரி.

98. "மதுரை காமராசர் பல்கலைக் கழகம் அஞ்சல் வழித் தொடர் கல்வித்துறை, M.A. *முதலாண்டு (1978—79) சைவ சித்தாந்தம், மெய்கண்டசாத்திரம், பாடவழிகாட்டி-9" என்னும் வெளியீட்டில் 'சிவஞானசித்தி பரபக்கத்தில் பாஞ்சராத்திர மதம் கூறப்படும்போது தத்துவக் கொள்கைகள் எடுத்துக் கொள்ளப்படாமல் புராணக் கதைகளே எடுத்துக் கொள்ளப் படுவதற்குக் காரணம் — இராமாநுஜர் கொள்கைகள் தமிழகத்துப் பொதுமக்களிடத்தில் பரவியபோது தத்துவக்கொள்கைகளாகப் பரவாமல், புராணக் கதைகள் மூலமாகவே பரவியிருத்தல் வேண்டும் என்பதே" என்று அச்சிட்டு, பாஞ்சராத்ரத்தில் நால்வகை வ்யூஹம் முதலிய தத்துவக்கொள்கைகள் ஆழ்வார்கள் பாடல்களில் எடுக்கப்படவில்லை என்பதற்கு ஆதாரமாக அக்னிஹோத்ரியின் 'வ. பி. வைணவ' நூல் ஆதாரமாகக் காட்டப்பட்டுள்ளது. மற்றும் பல பிதற்றல்கள் அதில் உள்ளன. இவற்றை ஆதாரங்காட்டி மறுத்து ஒழிக்க வேண்டுகிறேன்.*

சங்க இலக்கியம் முதலான பழைய நூல்களில் காணப் படாத அடிமுடிதேடிய கதை முதலான பொய்ப்புராணக் கதைகளை அடிப்படையாகக் கொண்டே தோன்றி, அத்தகைய பொய்ப்புராணக்கதைகளை ஆயிரக்கணக்காக

http://acharya.org

வளர்த்துத் தானும் வளர்ந்து வரும் சைவமதத்தைச் சேர்ந்தவர்களுக்குப் பாஞ்சராத்ர ஶாஸ்த்ரங்களிலும், ஆழ்வார்களின் அருளிச்செயல்களிலும், ஸ்ரீபாஷ்யம் முதலான நூற்றுக்கணக்கான விஶிஷ்டாத்வைத வேதாந்த க்ரந்தங்களிலும் உள்ள ஆயிரக்கணக்கான தத்துவக்கொள்கைகள் அடியோடு புரியாதாகையாலே, சிவஞான சித்தியில் பாஞ்சராத்ர மதம் கூறப்படும்போது தத்துவக்கொள்கைகள் எடுத்துக்கொள்ளப் படாமல் புராணக் கதைகளே எடுத்துக் கொள்ளப்பட்டன என்பதே உண்மை. பாஞ்சராத்ரிகளுடைய விஶிஷ்டாத்வைத ஸ்ரீவைஷ்ணவ மதம் இன்னதென்பதையே அறியாமையாலும், வடமொழிநூல் எதையும் தொடத்தகுதியும் இல்லாமையாலுமே முற்கூறிய பாட வழி காட்டியில், காமகோடியிடம் பணத்தை வாங்கிக்கொண்டு வைஷ்ணவ மதத்திற்கு த்ரோஹம் செய்த அக்நிஹோத்ரியின் நூல் ஒன்றே ஆதாரமாக எடுக்கப் பட்டது. பாஞ்சராத்ரத்திலிருந்தோ, அந்த மதத்தின் கொள்கைகளை விளக்கும் ஆயிரக்கணக்கான நூல்களிலிருந்தோ ஒரு துணுக்கைக்கூட எடுக்காமல், மத த்ரோஹியின் நூல் ஒன்றையே ஆதாரமாகக் காட்டும் புதுமையை நம் பல்கலைக் கழக வெளியீடுகளிலேயே காணமுடியும். இப்பாட வழி காட்டி கிடைத்தபின் அதிலுள்ள மற்ற அபத்தங்களை ஆராய்வோம்.

P. K. பார்த்தஸாரதி, வேலூர்

99. "யமேவைஷ வ்ருணுதே தேந லப்யஸ் தஸ்யைஷ ஆத்மா விவ்ருணுதே தநூம் ஸ்வாம்" என்கிற ச்ருதி வாக்யத்தாலும், "வரம் குறிப்பில் வைத்தவர்க்கலாது வானமாளிலும் நிரம்பு நீடு போகம் எத்திறத்தும் யார்க்கும் இல்லையே" என்ற மழிசைவந்தசோதியின் திருவாக்காலும்—மேற்கண்ட "நிரம்பு நீடு போகம்" எய்துவது. ஶரண்யனின் திருவுள்ளத்தில் விஷயீகாரமுண்டானாலன்றி இயலாது என்பதாகப் பொருள் கொள்ளப்படுகின்றது இத்தகைய கருத்தினை "ப்ரபதந ஸுலபன்" என்று எம்பெருமானுக்கிடப்பட்டுள்ள விசேஷணத்துக்குச் சேர ஸமன்வயப்படுத்தி விளக்கமருளவும்.

கேள்வியில் எடுக்கப்பட்டுள்ள வேதவாக்யமும், திருச்சந்த விருத்த (73) பாசுரமும், எம்பெருமான் எந்தச் சேதனனைத் திருவுள்ளம் பற்றுகிறானோ அவனுக்கே ஸுலபனாகிறான் என்று முழங்குகின்றன. 'ப்ரபதந ஸுலபன்' என்னும் திருநாமம் 'ஶரணாகதிக்கு எளியவன்' என்னும் பொருள்

உடையது. இதிலிருந்து 'ஶரணாகதி செய்தவர்களுக்கே எளியவன்' என்று தேறுவதால், முற்கூறிய வேதவாக்யத்திலும், பாசுரத்திலும் 'எம்பெருமான் அருளே உபாயமேயொழிய, சேதனனிடம் உள்ள எதுவும் உபாயமாகாது' என்று சொல்லப்பட்டிருப்பதோடு 'ப்ரபதன ஸுலபன்' என்னும் திருநாமம் முரண்படுவதாகத் தோன்றும். 'ப்ரபதனமாகிற ஶரணாகதி யாது?' என்று ஆராய்ந்தால் இம்முரண்பாடு நீங்கிவிடும். "த்வமேவ உபாயபூதோ மே பவேதி ப்ரார்த்தனாமதி: ஶரணாகதிரித்யுக்தா" ['நீயே உபாயமாவாயாக' என்று பிரார்த்திக்கும் அறிவே ஶரணாகதி எனப்படுகிறது.] என்பது ஶரணாகதி லக்ஷணமாகையாலே, எம்பெருமானையே உபாயமாக நினைக்கும் அறிவாகிற ஶரணாகதி தன்னையும் உபாயமாக நினைப்பதைப் பொறுக்காது. ஆராய்ந்தால், இந்த ஶரணாகதியும் எம்பெருமானின் அநாதிகால முயற்சிகளின் பலனாய் விளைந்ததே என்றும் விளங்கும். ஆகையால், ஶரணாகதியைச் சேதனனிடம் இருக்கும் உபாயமாக நினைக்க இடமில்லை. 'அருளோடு கூடிய எம்பெருமானே உபாயம்' என்று ஶ்ருதியிலும் பாசுரத்திலும் சொல்லப்பட்டதே தத்துவம்.

V. ஸ்ரீநிவாஸன், திருச்சி-17. (100, 101 கேள்விகள்)

100. ஜனவரி '79 கலைமகளில் "இரண்டு என இலது" என்னும் கட்டுரையில் "தீர்த்தன் உலகளந்த" என்ற பாசுரத்தில் நம்மாழ்வார் பார்த்தன் பைந்துழாயான் பெருமையைத் தெளிந்தொழிந்ததாக அருளிய செய்தியை வில்லிபுத்தூரார் சிவவிஷ்ணு ஐக்யத்தைக் காட்டுவதாக விவரித்துள்ளதாக எழுதப்பட்டுள்ளது. இம்முரண்பாட்டை எப்படிப் பரிஹரிப்பது?

வேதம் தொடக்கமாக, கவிஞர் கூற்று ஈறாகவுள்ள நூல்கள் யாவற்றிலும் பரம்பொருளுக்கும், மற்ற பொருள்களுக்கும் வேறுபாடும் காட்டப்பட்டுள்ளது. ஐக்யமும் காட்டப்பட்டுள்ளது. அத்வைதிகள் — ஐக்யத்தைச் சொல்லும் பகுதிகளை மாத்திரம் எடுத்துக்கொண்டு, வேறுபாட்டைச் சொல்லும் பகுதிகளைப் புறக்கணிக்கின்றனர் — த்வைதிகள், வேறுபாட்டைச் சொல்லும் பகுதிகளை மாத்திரம் எடுத்துக்கொண்டு, ஐக்யத்தைச் சொல்லும் பகுதிகளைப் புறக்கணிக்கின்றனர். இது இரண்டுமே சரியானதல்ல என்பதும், எல்லாப் பகுதிகளுக்கும் பொருந்தும்படி பொருள்கூறுவதே ந்யாயம் என்பதும் எவர்க்கும் விளங்கும். இப்படிப் பொருள் காட்டிய

http://acharya.org

வர்கள் ஸ்ரீராமாநுஜர் முதலான விஶிஷ்டாத்₃வைதாசார்யர்களே யாவர். சரீரத்தோடு கூடிய ஒரு மனிதனை நாம் காண்கிறோம். தே₃ஹம் வேறு, ஆத்மா வேறு என்று உணர்கிறோம், வழங்குகிறோம். தே₃ஹத்தோடு கூடிய மனிதன் ஒருவனே என்றும் உணர்கிறோம். வழங்குகிறோம். பற்பல வேத₃ஶாஸ்த்ர வாக்யங்களும், கவிக்கூற்றுகளும் உலகனைத்தும் பரம்பொருளுக்கு உடலாயிருக்கின்றது என முழங்குகின்றன; அதனாலேயே பரம்பொருளைக் காட்டிலும் வேறுபட்டவையாகவும், ஒன்றுபட்டவையாகவும் ஒவ்வோரிடங்களில் வழங்குகின்றன என்று கொண்டால் முன்னுக்குப்பின் முரணில்லாமலிருக்குமன்றோ. “*அந்யஶ்ச ராஜந் ஸ பர: தத₂ாந்ய: பஞ்சவிம்ஶக: । தத்ஸ்த₂த்வாத் அநுபஶ்யந்தி ஹ்யேக ஏவேதி ஸாத₄வ: ॥*” [ப₄ாரதம்-மோக்ஷ 357-33] [அரசனே! பரமாத்மா வேறானவனே. இருபத்தைந்தாம் தத்துவமான ஜீவன் வேறானவனே. பரமன் ஜீவனில் நிற்கையால், நல்லோர்கள் இருவரையும் ஒருவனாகவே காண்கிறார்கள்] என்று மஹாப₄ாரதத்தில் மோக்ஷ த₄ர்மத்திலும், “*ஸர்வம் ஸமாப்நோஷி ததோऽஸி ஸர்வ:*” [கீ₃தை 11-40] [எல்லாவற்றையும் நீ வியாபித்திருப்பதால் நீ எல்லாமுமாகிறாய்] என்று கீ₃தையில் அர்ஜுனன் வாக்காலும் இது மிகத் தெளிவாக விளங்குகிறது. இதே ரீதியில் ஒரே விருத்தாந்தத்தைக்கொண்டு பார்த்தன் — பைந்துழாயான் பெருமையைத் தெளிந்ததாக நம்மாழ்வாரும், சிவ விஷ்ணுக்களுக்கு உள்ள ஶரீராத்மப₄ாவத்தைக்கொண்டு இருவரும் இரண்டல்ல என்று தெளிந்ததாக வில்லிபுத்தூராரும் கூறுவதில் முரணில்லை

101. 1979 ஜனவரி கலைமகளில் (91-வது கேள்வியில் காட்டப்பட்ட) “ப₄க்த்யா மாம் அபி₄ஜாநாதி” [கீ₃தை 18-55] என்னும் ஶ்லோகத்தை விவரிப்பதாகத் தொடங்கி, பீடாதி₄பதி உரைத்திருப்பது ஒன்றுமே புரியவில்லையே. அக்கட்டுரையின் தொடக்கத்தில் “*மாயா ஹ்யேஷா*” என்று தொடங்கும் ஶ்லோகம் ஒன்றை எடுத்து, அதற்கும் குழப்பமாக ஏதோ பொருள் உரைத்திருக்கிறார் பீடாதி₄பதி. அதன் உண்மைப் பொருளையும் விளக்கவேண்டுகிறேன்.

“*மாயா ஹ்யேஷா மயா ஸ்ருஷ்டா யந்மாம் பஶ்யஸி நாரத₃ । ஸர்வபூ₄த கு₃ணைர் யுக்தம் மைவம் மாம் த்₃ரஷ்டு மர்ஹஸி ॥*” என்பது கட்டுரையின் தொடக்கத்தில் எடுக்கப்பட்டிருக்கும் ஶ்லோகம். இதன் பொருள் பின்வருமாறு— “நாரத₃ரே! நீர்

http://acharya.org

காண்கிற இந்த என் ஶரீரம் என்னால் படைக்கப்பட்ட மாயையாகும். இவ்வண்ணம் எல்லா பூ₄தகு₃ணங்களோடு கூடினவனாக என்னை நீர் காணலாகாது" — என்பது. இதன் தாத்பர்யமாவது — எம்பெருமானுடைய திருமேனி நித்ய விபூ₄தியிலுள்ள அப்ராக்ருத த்₃ரவ்யத்தினால் ஆனதாயினும், இவ்வுலகில் அவதரிக்கும்போது மற்ற மனிதர்களுடைய உடல் போலே ப்ராக்ருதமான பஞ்சபூ₄தங்களால் ஆனதுபோலே அதை ஆக்கிக்கொண்டு வந்து பிறக்கிறான் எம்பெருமான். தன்னுடைய மாயை என்னும் ஆஶ்சர்யமான ஸங்கல்பத்தாலே தான் அப்ராக்ருத ஶரீரத்தை ப்ராக்ருதமான பஞ்சபூ₄தஶரீரம் போலே படைத்திருப்பதாகவும், அதனாலேயே பஞ்சபூ₄தங்களோடு கூடிய ஶரீரத்தை உடையவனாகத் தன்னைக் காணலாகாது என்றும் நாரத₃ருக்குக் கண்ணன் உபதே₃ஶிக்கிறான் இந்த ஶ்லோகத்தில். இதற்குப் பொருள் உரைக்கும்போது பீடாதி₄பதி ஸ்வரூபத்தையும், ரூபத்தையும் ஒன்றாகக் குழப்பியிருப்பதும், 'ஸ்ருஷ்டா' என்றதற்கு 'கற்பித்துக்கொள்ளப் பட்டது' என்று பொருள் உரைத்திருப்பதும், "ப₄க்தி வந்த காலத்தில் அந்தப் பரிபூரணமான ஸ்வரூபம் தானாகப் பிரகாசிக்கும். மாயா ஶக்தியினால் குறைந்திருக்கிற சின்னதாக இருக்கிற உருவத்தைத் தெரிந்துகொண்டு ப₄க்தி பண்ணினால் நிறைந்திருக்கிறது தானே பிரகாசிக்கும்" என்று கூறியிருப்பதும் இந்த ஶ்லோகத்துக்குப் பொருந்தாது. மாயா ஶக்தியினால் ப்₃ரஹ்ம ஸ்வரூபம் ப₄க₃வானுடைய உடம்பாகச் சுருங்கியிருப்பதாகவும், ப₄க்தி வந்தால் நிறைந்திருக்கும் ஸ்வரூபம் தானே பிரகாசிக்கும் என்றும் உரைத்திருப்பது நிர்விஶேஷ சின்மாத்ர ப்₃ரஹ்மத்தைத் தவிர மற்றதெல்லாம் பொய் என்று கூறும் அத்₃வைத ஸித்₃தா₄ந்தத்திற்கும் பொருந்தாது. 'நான் நான் என்று நினைத்துக்கொண்டிருக்கிறோமே, இந்த நான் என்பது தனியாக இருக்கிறதுபோலே இருக்கிறது. எல்லாம் பகவான் தான். ஆகாசமோ, சந்திரனோ, சூரியனோ இந்தப் பிரகிருதி எல்லாமே பகவத் ஸ்வரூபம்தான் என்றால், நான் என்பது மாத்திரம் எப்படித் தனித்திருக்கும்?'' என்று பீடாதி₄பதி கூறியிருப்பது — ப்₃ரஹ்மமே அசேதனமாகப் பரிணமிக்கிறது என்று கூறும் யாத₃வப்ரகாஶ மதத்திற்குப் பொருந்துமேயொழிய ஶங்கர மதத்திற்குப் பொருந்தாது. இக்கட்டுரையில் பீடாதி₄பதி எடுத்திருக்கும் ராஜகுமாரன் கதை ஸமந்வயாதி₄கரண ஸ்ரீபா₄ஷ்யத்தில் எம்பெருமானார் எடுத்தி

ருக்கும் கதையின் தழுவலேயாகும். இதிலிருந்து ப்ரஹ்மத்திற்கும், ஜீவனுக்கும் ஸ்வரூபைக்யம் ஸித்₃தி₄க்க இடமில்லை. பே₄த₃மே ஸித்₃தி₄க்கும். பீடாதி₄பதியின் இக் கூற்றுகளெல்லாம் அத்₃வைதத்திற்கே பொருந்தாதவை என்பது அத்₃வைத வித்₃வான்கள் வாக்யார்த்த₂ ஸபை₄ கூட்டி விசாரித்தால் விளங்கும்.

P. V. கோவிந்தய்யங்கார், திருச்சி-17.

102 மார்க்கண்டே₃யனும், க₄ண்டாகர்ணனும் ஶிவன் மூலமாக எம்பெருமானிடமிருந்து மோக்ஷத்தைப் பெற்றார்கள் என்று புராணங்களிலிருந்து விளங்குகிறது. ஆகையால் ஶிவனை ஆஶ்ரயித்தும் மோக்ஷம் பெறலாம் என்று தேறுகிறதே ?

ஶிவன் முதலான எந்த தெய்வமும் நேரே மோக்ஷத்தை அளிப்பதற்கு வல்லமை உடையவர்கள் அல்லர்; எம்பெருமான் ஒருவனே மோக்ஷத்தை அளிக்கவல்லவன் என்பது ஸகலஶாஸ்த்ரங்களின் ஸாரம். ஆயிரக்கணக்கான ஶிவப₄க்தர்களில் ஹிரண்யன், ராவணன், ப₄ஸ்மாஸுரன் முதலான பெரும்பாலானவர்கள் ஶிவனை ஆஶ்ரயித்து இவ்வுலகப் ப₄லன்களைப் பெற்று, தங்களுக்கும் உலகிற்கும் தீங்கை விளைத்துக்கொண்டார்கள் என்றே புராணங்களிலிருந்து அறிகிறோம். ஶிவப₄க்தர்களான நாயன்மார்கள் காலம் தொடங்கி இன்று வரையில் பெரும்பாலான ஶிவப₄க்தர்கள் விஷ்ணு வைஷ்ணவ த்₃வேஷத்தில் ஈடுபடுவதைப் பார்க்கிறோம். ஶிவப₄க்தர்களில் ஒருவர் இருவரே மோக்ஷத்தில் ஆசையுண்டாகி, ஶிவனுடைய சிபார்சுடன் நாராயணனை அடைந்து, மோக்ஷத்தைப் பெற்றார்கள் என்றும் புராணங்களில் படிக்கிறோம். ஶிவனுக்குப் பரமாத்ம ஜ்ஞாநத்தை அளிக்கவல்ல ஶக்தியிருப்பது போலே, தமோகு₃ணத்தை வளர்க்கும் ஶக்தியும், மோஹ ஶாஸ்த்ரங்களைப் பரப்பும் ஶக்தியும் இருக்கின்றன என்று ஶாஸ்த்ரங்கள் முழங்குகின்றன. ஆகையால் ஶிவனையடைந்தால் மார்க்கண்டே₃யனையும், க₄ண்டாகர்ணனையும்போலே மோக்ஷத்தைப் பெறுவோமா அல்லது ஹிரண்யராவணாதி₃களைப் போலே அனர்த்த₂ப்படுவோமா என்பது நிச்சயமில்லை. ஆகையால், ஸ்ரீமந் நாராயணனை அடைந்து மோக்ஷத்தை எளிதில் அடைவதே ராஜமார்க்க₃மாகும்.

ஸு௱த₃ர்சனர் பதில் இரண்டாவது ஶதகம் முற்றிற்று.

http://acharya.org